வெளியீடு 30-11-2000

Issued 30-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 28, 2000 – தொகுதி 100 – எண் 1

**Friday the 28th April, 2000 – Volume 100 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*]

[Price Rs. 3.00

117
2002

28-4-2000

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | .. | iii - vi |
| Personnel of the Government of Tamil Nadu | .. | vii - x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | | xiii - xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின்.. பட்டியல் (அகர வரிசைப்படி) | | xv - xxv |
| 1. வினாக்கள்-விடைகள்— | | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 1 - 48 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | | |
| மீனம்பாக்கம், பள்ளிச் சிறுமி கடத்தல் | .. | 48 - 52 |
| திரு. சி. ஞானசேகரன் | .. | 48 - 49 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | .. | 49 - 52 |
| 3. கவன ஈர்ப்பு— | | |
| (அ) திருப்பூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணி நிலை | .. | 52 - 55 |
| ஆ) வேலூர், பாதாள சாக்கடைத் திட்டம் | .. | 56 - 60 |
| 4. தகவல் கோரல்— | | |
| (அ) அரசு மருத்துவமனை மருந்தாளுநர்கள் வேலை நிறுத்தம் | .. | 60 - 61 |
| (ஆ) பொது விநியோக உணவுப் பொருட்கள் விலை உயர்வு | .. | 61-62, 73 |

223313




| | பக்கங்கள் |
|---|---|
| **5.** மானியக் கோரிக்கைகள், **2000-2001,** விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி— | |
| (அ) கோரிக்கை எண் 32 — வீட்டு வசதி<br>(ஆ) கோரிக்கை எண் 33 — நகர்ப்பகுதி வளர்ச்சி | 62 - 162 |
| மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி .. | 144 - 155 |
| *திரு. வி.கே. லட்சுமணன் .. | 74 - 83 |
| திரு. பா. கோபால் .. | 83 - 87 |
| *திரு. கே. தங்கமணி .. | 87 - 92 |
| திரு. சி.டி. தண்டபாணி .. | 92 - 96 |
| *திரு. எ. தெய்வநாயகம் .. | 97 - 103 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் .. | 103 - 107 |
| திரு. பி. வெங்கடசாமி .. | 107 - 110 |
| *திரு. மீ.அ. வைதியலிங்கம் .. | 111 - 117 |
| *திருமதி ஆன் டி' மான்டி .. | 117 - 118 |
| *திரு. முகம்மது கோதர் மைதீன் .. | 118 - 121 |
| டாக்டர் அ. செல்லக்குமார் .. | 130 - 135, 141 - |

*6.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.

**2. கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

**3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

**4. வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**

வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

**5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

**7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

**8. போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

**10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

**11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

**12. பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



**13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

**14. சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட, கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

**15. கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

**16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

**17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**18. வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, S Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports and Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு,<br>எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம்,<br>எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன் திரு. சி. | .. அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79 சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்



130. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
131. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. .. காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ .. பேரூர்
136. நடராஜன், திரு. த. .. செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ. வி. ஏ. .. புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
145. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி. டி. ஆர். .. மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்

153. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆவா.)
165. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
174. மணி, திரு. டி. .. விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்



176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
177. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
179. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

198. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
199. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
200. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
201. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
202. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
203. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
204. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
205. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
206. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
209. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
210. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
211. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு



220. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு
234. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்
235. வெற்றிடம் .. திருப்போரூர் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 16, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 28, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை *9-30* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

**"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**

**நீள்வினையால் நீளும் குடி."**

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்ட ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *421*, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**421—**

**ஊக்க ஊதியம்**

***7293—திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களில் M.Phil., Ph.D., பட்டம் பெற்றவர்களுக்கு வழங்கி வந்த

[2000 ஏப்ரல் 28

ஊக்க ஊதியம் அரசாணை எண் 1170, நாள் 20-12-1993-ன்படி 1-3-1993-க்குப் பின் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து ஊக்க ஊதியம் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) இதன் தொடர்பாக வழக்கு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ளது. இருப்பினும் ஊக்க உயர்வு வழங்குவது சம்பந்தமாக நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டும், நிர்வாகத் தீர்ப்பாயத்தின் பல்வேறு தீர்ப்புகளின் அடிப்படையிலும் பரிசிலனை செய்து, பள்ளிக் கல்வி இயக்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒட்டுமொத்தக் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் நிலையும் மேற்படி கருத்துருவில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி ஆசிரியர்களுடைய ஊக்க ஊதியப் பிரச்சினை ஏற்கெனவே தீர்ப்பாயத்தில் இருப்பதன் காரணமாக, காலம் கடந்து வருகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே விரைவில் அந்த முடிவைப் பெற்று இந்தத் துறை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் தருவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விளக்கங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊக்க ஊதிய உயர்வு என்பது, 1992-93-வது ஆண்டில் ஒரு போராட்டம் நடத்தப்பட்டபோது, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த நாள் வரையில் ஊக்க ஊதியம் பெற உரிமை உள்ளவர்களுக்குத்தான் ஊக்க ஊதியம் வழங்கப்படும்; இனி எதிர்காலத்திலே ஊக்க ஊதியம் அடிப்படையில் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டது. ஆகவே 1992-93-க்குப் பின்னர் ஊக்க ஊதியம் வழங்குகிற நிலை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பெற்றிருக்கிற M.Phil., Ph.D., பட்டங்களுக்கு இல்லை. M.Ed. பட்டம் பெற்றவர்கட்கு வழங்கப்படுகிறது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம்,



2000 ஏப்ரல் 28]

மாணவர்களுக்குத் தருகிற பயிற்சியினுடைய தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுகிற மேல் படிப்புக்காக என்ற அடிப்படைதான். எனவே, ஊக்க ஊதியம் என்பது B.Ed.,-க்கு மேற்பட்டு M.Ed., படித்திருந்தால் வழங்கப்படுகிறது. அதைப்போல B.Ed., ஆசிரியர்கள், B.A., B.Sc., பட்டத்திற்குமேல் M.A., M.Sc., பட்டம் பெற்றால், பயிற்றுவிக்கும் அந்தக் கல்வித் திறனை அதிகப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது. M.Phil, Ph.D., என்பது ஒரு குறுகிய வட்டத்திலே ஒரு பொருள் குறித்த நோக்கில் அவர்களுடைய ஆய்வு நடைபெறுகிறது. இது நேரடியாக மாணவர்களுடைய கல்வித் திறனை வளர்க்கப் பயன்படுகிற படிப்பாகப் பெருமளவுக்கு இருப்பதில்லை. ஆகவே இதற்கு ஊக்க ஊதியம் வழங்கத் தேவையில்லை என்பது ஏற்கெனவே ஒரு முடிவான கருத்தாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த ஆசிரியர்களுடைய குறையைப் போக்க முடியுமா என்று ஆய்வு செய்தபோது, அப்போது ஊக்க ஊதியம் என்றால் இரண்டு increment தொகை 120 ரூபாய், 150 ரூபாய்தான். இப்போது இரண்டு increment என்று சொன்னால், 500 ரூபாய், 600 ரூபாய். 200 ரூபாய், 150 ரூபாய் தருகிறபோது ஏற்படுகிற நிதிச் சுமை ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இருக்கிறது. இப்போது அந்த நிதிச் சுமை மிக அதிகமாகிறது. கொள்கை அளவிலே ஏற்கப்படாதது, அதிகப் பயன் தரக்கூடியது என்று ஒப்புக் கொள்ளப்படாதது. அதற்குத் தருகிற நிதி அல்லது அந்த increment தொகை மிக அதிகச் சுமையாக உள்ளது. ஆகவே இந்த விளைவுகள் காரணமாக நிதித் துறை தேவையில்லாமல் இதை ஏற்றுக்கொள்வதன் காரணமாக ஏற்படக்கூடிய வேறு பல விளைவுகளைச் சுட்டிக்காட்டி, ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும் வேறெந்தவகையில் அவர்களுடைய குறையைப் போக்கலாம் என்பது ஆய்வு செய்யப்படுகிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரனுக்குப் பதிலாக அவருடைய கட்சியில் அப்பாவு 'நான்தான் கேட்கிறேன்' என்கிறார். திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஊதியத்திற்குப் பெயரே ஊக்க உயர்வு என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட பயிற்சி முடித்து

வேலைக்கு வந்ததும் அதோடு அவர்களுடைய பயிற்சிகள் முடிந்து விட்டன என்று இருந்துவிடாமல் தற்கால அறிவியல், விஞ்ஞானம், தொழில் நுட்பங்களில் எல்லாம் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன, அவற்றையெல்லாம் அவர்கள் அறிந்து, தெரிந்து நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அந்த ஊக்க ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் *500* ரூபாய் ஊக்க ஊதியம் என்பது மிக அதிகம் என்று சொன்னார்கள். எல்லோரும் மேல் படிப்பு படித்து ஊக்க ஊதியம் பெறுவதில்லை. ஆகவே மாணவர்களுக்கு நல்ல கல்வி போதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அறிவை வளர்த்துக்கொள்கின்ற ஆசிரியர்களை Encourage செய்வதற்காக, ஊக்கப்படுத்துவதற்காக வழங்கி வந்த ஊக்க ஊதிய உயர்வுகளை தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அளித்து வந்த ஊக்க ஊதிய உயர்வுகள் கடந்த ஓராண்டுக் காலத்திற்கு முன்னால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஊக்க ஊதியம் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, வழங்குவீர்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இரண்டு மூன்று வகைகளில் விளக்கம் சொல்லலாம். ஒரு துறையிலே ஆயிரம் பேர் பணியாற்றுகிறபோது *5* பேரோ, *10* பேரோ, *100* பேரோ ஊக்க ஊதியம் பெற்றால், மீதம் இருப்பவர்கள் ஊக்கம் இழந்து விடுகிறார்கள். ஆகவே பெரும்பாலானவர்கள் ஊக்கம் இழக்காமல் இருப்பதையும் இந்த அரசு கருத வேண்டியிருக்கிறது. இரண்டாவது, ஆசிரியர்கள் பணியாற்றுகிற இடத்தில் எந்த மேல்படிப்பு அவர்களுடைய பணியிலே அவர்களது திறமையை அதிகப்படுத்தும் என்பது கல்வித் துறையினாலே கருதிப் பார்க்கப்படுகிறது. அந்த வகையிலே குறிப்பாக, உதாரணத்திற்காகச் சொல்கிறேன். Mathematics அல்லது Physics படித்தவர்கள், பொருளாதாரத் துறையிலே M.Phil, பட்டம் பெற்றால் அல்லது M.A. பட்டம் பெற்று அதற்குமேல் M.Phil., Ph.D. பெற்றிருந்தால் அந்தப் பட்டத்திற்கு இந்தத் துறையிலே ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவது நியாயமில்லை. எல்லாவற்றையும்விட ஊக்க ஊதியம் என்பது தவறாக increment என்ற முறையில் கணக்கிடப்பட்டு, சம்பள உயர்வாக அது



ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அவர்களால் பாதிக்கப்படுகிற மற்றவர்களுக்கும் அதற்கு இணையான அளவுக்கு சம்பள உயர்வு தர வேண்டியிருக்கிறது. ஒருவருக்கு *500* ரூபாய் ஊக்க ஊதியம் என்ற பெயரால் increment என்று சம்பளத்தோடு சேர்க்கப்பட்டால், அவரைவிட மூத்தவராகப் பணியிலே உள்ளவர் *200, 300* ரூபாய் குறைவாக இருப்பாரேயானால் அந்த *300* ரூபாயும் தர வேண்டியிருக்கிறது; சமநிலைக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆகவே ஒன்றிலிருந்து ஒன்று சங்கிலித் தொடர்ச்சியாக இது அமைகிறது. எல்லாவற்றையும்விட நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கி பெரிய ஊக்கம் அளித்திருக்கிறார். அந்த ஊக்கத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள்தான் இந்த ஊக்க ஊதியத்திற்குப் போராடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்படுகின்ற S.L.E.T. தேர்வும் B.Ed. நுழைவுத் தேர்வும் வருகிற மே மாதம் *7* ஆம் தேதி ஒரே தேதியில் நடைபெற இருப்பதால் S.L.E.T. தேர்வு எழுதக்கூடியவர்கள் B.Ed. நுழைவுத் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வெவ்வேறு தேதிகளில் இந்தத் தேர்வுகளை நடத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரையில் M.Phil., Ph.D. பட்டம் பெற்றவர்கள் U.G.C.—பல்கலைக்கழக நிதிக் குழுவின் சார்பில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரையில் அந்தப் பட்டங்கள் அடிப்படையில் தேர்வு எழுத வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. இப்போது அந்தப் பட்டங்கள் இருந்தாலும் தேர்வு எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மற்றொன்று B.Ed. நுழைவுத் தேர்வு வேறு. அது வேறு நிலையிலே உள்ளவர்களுடைய தேர்வு. இது வேறு. ஏறத்தாழ முதுகலைப் பட்டப் படிப்பு பெற்றவர்கள் மட்டும் எழுதுகிற தேர்வு இது. ஆகவே இரண்டும் ஒரே நாளில் வருவதால் எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லையென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

[2000 ஏப்ரல் 28

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணி புறக்கணிக்கப்பட்டு பெரும்பகுதி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் சங்கங்களால் அது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நான் அந்தப் போராட்ட நடவடிக்கைகள் குறித்துக்கூட குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் பணி உயர்வு பாதிக்கப்படுகிறது என்கிற நியாயமான கோரிக்கை உட்பட 15 அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பான்மை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சங்கம் இன்னும் அதில் ஓர் ஒத்த நிலைக்கு வராத நிலையில், அவர்களையும் அந்தக் கருத்திசைவுக்குக் கொண்டு வர அவர்களை அழைத்துப் பேசி ஒரு சௌஜன்யமான, ஒரு சுமூக முடிவு காணுவதற்கு மாநில அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முதலில் அவர்களிடத்திலே பேசினார். பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் இரண்டு முறை பேசினார். அமைச்சர் என்ற முறையிலே நான் அழைத்து 3 மணி நேரம் கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னாலே பேசினேன். நான் சொல்லுகிற விளக்கங்களை பெருமளவிற்கு அவர்கள் மறுதலிக்க விரும்பவில்லை. ஆனால் அவர்கள் ஊதிய உயர்வு அல்லது increment எப்படியாவது பெறவேண்டும் என்ற ஓர் ஆர்வத்திலே இருந்தார்கள். இருந்தாலும் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே உரையாடும்போது, ஜூன் மாதத்தில் நாங்கள் மறுபடியும் விண்ணப்பம் தருகிறோம், அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கெனவே ஊக்க ஊதியம் கொடுத்த அந்த அடிப்படையில் தருவதாலே பல விளைவுகள் இருக்கின்றன. அந்த அடிப்படையை மாற்றி எப்படிச் செய்ய முடியும் என்று நிதித் துறையிலே கேட்டு, கூடுமான வரையில் உங்களுக்காகப் பரிந்துரை செய்கிறேன், அதுவரைக்கும்தான் நான் ஏற்றுக்கொள்ள முடியும். பரிந்துரை செய்து, நிதித் துறை ஏற்றுக்கொள்ள முடிகிறதா என்று பார்க்க வேண்டும். மேலும் P.& A.R.—அதாவது பணியிலே உள்ளவர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து சீர்திருத்தம் செய்யக்கூடிய அந்தப் பொறுப்பில் உள்ளவர்கள் இதுவரையில் அதை



2000 ஏப்ரல் 28]

ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மேலும் முயற்சிக்கிறோம் என்று சொன்னதை ஒரு சங்கத்தார் ஏற்றுக்கொண்டு அதுவரையில் வேலை நிறுத்தம் செய்தவர்கள் அதைக் கைவிட்டுத் தேர்வுத் தாளைத் திருத்துகிற பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதுவரையில் வேலை நிறுத்தம் செய்யாதவர்கள் எங்களுடைய பங்கு பாக்கி இருக்கிறது என்று இப்போது இரண்டு நாட்களாக வேலை நிறுத்தம் செய்து விட்டு, அவர்களுடைய தலைவர், முதலமைச்சர் அவர்களைப் பார்த்து உங்களையும் பார்த்துத்தான் எங்களுடைய வேண்டுகோளைத் தெரிவித்துள்ளோம் என்ற அடிப்படையில் நாங்கள் எங்கள் வேலை நிறுத்தத்தை, விரைவாக முடித்துக்கொள்ள முயற்சிப்போம். அதையும், கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற கருத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இப்போது நூற்றுக்கு 60 பேர் தேர்வுத் தாளைத் திருத்துகிறார்கள். ஒரு வாரம் அல்லது 4 நாட்கள் அதிகமானால் அந்த +2 தேர்வுத் தாள் திருத்துகிற பணி முறையோடு வெற்றிகரமாக நடைபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களையும், முதல்வர் அவர்களையும், சில சங்கங்களைச் சார்ந்தவர்கள் பார்த்து, அந்த வேலை நிறுத்தத்தை திரும்பப் பெறுவதாகச் சொல்லியிருந்தாலும்கூட ஒரு சங்கம் இன்னும் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற காரணத்தினாலே ஏற்கெனவே திருத்திக் கொண்டிருந்தவர்களும், இப்போது இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், பணியில் ஈடுபடாத நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே இப்போது போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற சங்கத்தையும் அழைத்துப் பேசி ஒரு சுமூகமான நிலையை உருவாக்கி உடனடியாக விடைத் தாளைத் திருத்துகின்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் ஒருவேளை அவர்களுக்கு தலைமை வகித்து என்னிடத்திலே பேச வேண்டும் என்று விரும்புவதாக இருந்தால்,

[2000 ஏப்ரல் 28

அவர் வந்தால் இன்று மாலையிலேயே 2.30 மணியிலிருந்து 4.30 மணி வரையில் அவர்களைவிட அதிக நேரம் பேசத் தயாராக இருக்கிறேன். மற்றும் ஒன்று. சங்கத் தலைவர்கள் என்னிடத்திலே பேசி திருப்தி அடைந்திருக்கிறார்கள். ஏற்கெனவே 45 விழுக்காடு ஆசிரியர்கள் வந்து தேர்வுத் தாளை திருத்தியவர்கள் இப்போது 60 விழுக்காடு ஆசிரியர்கள் நேற்றையதினம் வந்துள்ளனர். நாளைக்கு இது அதிகமாகும். நல்லெண்ணத்தோடு இருக்கிறார்கள். பேசித்தான் இதை முடிக்க வேண்டும் என்றால் நானும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஊக்க ஊதியம் அளிப்பது சம்பந்தமான கேள்வி. அதோடு சம்பந்தப்பட்ட ஒன்று. கன்னியாகுமரி மாவட்டத்திலே, அரசு ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருந்து தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டவர்களுக்கு, மற்ற மாவட்டங்களில் கொடுக்கப்படுகிற அதிக ஊதியம், மற்ற benefits கொடுக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலே தலைமை ஆசிரியர்களாக மாற்றப்பட்டவர்களுக்கு இது பணி மாற்றம்தான் என்று சொல்லி மற்ற மாவட்டங்களில் கொடுக்கப்படுகிற ஊதிய உயர்வு போன்றவற்றை மறுப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா? அவற்றைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகலைப் பட்டதாரிகளுடைய நிலையைப் பற்றி விவாதிக்கிறபோது, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் நிலையைப் பற்றி— அதுவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தனித் தன்மையோடு ஏற்கெனவே அங்கே கல்வி சிறப்பு இடம் பெற்றிருந்ததால் அதைப்பற்றி உடனடியாக விடை கூறக்கூடிய வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாக ஒரு கேள்வி அனுப்பினாலும்,அல்லது ஒரு விண்ணப்பம் அவர்கள் சார்பாக வழங்கினாலும், அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 422, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2000 ஏப்ரல் 28]

**422—**

**வாகன முன்பணம்**

***14577—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வாகன முன்பணம் வழங்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தொடக்க மற்றும் பள்ளிக் கல்வித் துறை அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வாகன முன்பணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையிலேயே நகராட்சிப் பள்ளிப் பணியாளர்கள் அனைத்துப் பிரிவினருக்கும் வாகன முன்பணம் வழங்க ஆணையிட்டுள்ளது.

*முற்பகல் 9-45*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்டபோது, நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றிக்கொண்டிருக்கிற ஆசிரியப் பெருமக்களுக்கு வாகன முன்பணம் கொடுக்கப்படாமல் இருந்தது; ஒருவேளை இந்தக் கேள்வி போட்டதற்குப் பிறகு அந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டதா? எந்தத் தேதியில் அது பிறப்பிக்கப்பட்டு எப்போதிருந்து அமலுக்கு வந்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவேளை கேள்வியைப் பார்த்து செய்து இருந்தால்கூட, திரு. ஞானசேகரன் அவர்களுக்கு அது ஒரு பெருமை. ஏனென்றால் கேள்வியைப் பார்த்து நாங்கள் பல நேரங்களிலே செய்வதில்லை. அதை எதற்குச் சொல்கிறேன் என்றால், இது கொள்கை அளவிலே ஒப்புக்கொள்ளப்பட்டது. நடைமுறையிலே மேலும் நிதி

ஒதுக்குவதற்கு, தேவைப்படுகிறபோது இயக்குநர் நிதித் துறைக்கு வேண்டுகோள் விட்டு, அந்த நிதியைத் தேவையான அளவு ஒதுக்குவதற்கும் முயற்சிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 423, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**423—**

**நிலம் ஒதுக்கீடு**

***8823—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Helpage India மற்றும் தமிழ்நாடு காது கேளாதோர் சங்கத்திற்கு, சென்னை மதுரவாயிலில் தமிழக அரசு நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதா?

(ஆ) என்ன நோக்கத்திற்காக இந்நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முதியோர்களுக்கு நடமாடும் மருத்துவப் பாதுகாப்புப் பிரிவு, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் செயல்படுத்தவும், ஆலோசனைப் பிரிவு, நிர்வாக அலுவலகம் போன்றவற்றை வைத்துக்கொள்ளவும் Helpage India நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செவித்திறன் குறையுடையோர் மற்றும் பேச இயலாதோருக்குப் பள்ளியும், நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டவும், தமிழ்நாடு காது கேளாதோர் சங்கத்திற்கு நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்திலே கல்யாணம் ஆனவுடனேயே பிள்ளைகள் தனியாகப் போய்விடுகிறார்கள். வயதான முதியோர்களுக்கு இடம் கொடுத்து, அவர்களைப் பாதுகாப்பதற்கான இடங்கள் ரொம்பக் குறைவாக இருக்கின்றன. இதில் Helpage India, Friend-in-need Society



போன்றவற்றில் எல்லாம் முதியவர்களை அழைத்து வந்து, தங்க வைத்து சாப்பாடு எல்லாம் போடுகிறார்கள். அந்தமாதிரி நிறுவனங்களுக்கு இடங்களை அரசு வழங்குமா? அவர்களுக்கு மானியம் வழங்கி, கூடுதலான தொகை வழங்கி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியம் வழங்குவது சமூக நலத் துறை சம்பந்தப்பட்டது. நீங்கள் நிலத்தைப்பற்றி மட்டும் கேளுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** அப்பா, அம்மாவை பிள்ளைகள் வெளியே விரட்டிவிடுகிறார்கள் ஐயா, நான் சொன்னதைத் தப்பாக நினைக்காதீர்கள். பெரியவர்கள், முதியவர்களை வீட்டைவிட்டு விரட்டுகின்ற ஓர் அவலநிலை இப்போது எல்லா இடங்களிலும் வந்துவிட்டது. கல்யாணம் ஆன உடனேயே அப்பா, அம்மா, பெரிசுகள் தொல்லையாக இருக்கிறது என்று சொல்லி வீட்டைவிட்டு விரட்டிவிடுகின்றார்கள். அதனால் அவர்களை வைத்துப் பாதுகாக்க தனி இடங்கள் கொடுத்து Helpage India, Friend-in-need Society போன்ற தொண்டு நிறுவனங்கள் நல்ல முறையில் பணி செய்கிறார்கள்; அவர்களுக்கு நிலங்கள் தந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏதோ வழக்கு இருப்பதாகக்கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த வழக்கு நிலுவையில் இருக்கின்றதா அல்லது முடிந்துவிட்டதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டம் 1978-ன்கீழ், சென்னை நகர் கோட்டப் பகுதி, அம்பத்தூர் வட்டம், மதுரவாயில் கிராமத்தில் புல எண் 269/4-பி கையகப்படுத்தப்பட்ட மிகை வெற்று நிலங்களில் 800 சதுரமீட்டர் நிலம் Helpage India, நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்தும் இதே புல எண்ணில் 1500 சதுர மீட்டர் நிலம் தமிழ்நாடு காது கேளாதோர் சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களைப் பொறுத்தவரை, இந்த இரண்டு நிலங்களையும் கையகப்படுத்த ஏற்பட்ட செலவு மற்றும் அச்செலவில் 50 விழுக்காடு பணிச் செலவாகச் சேர்த்து நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது. Helpage India நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கான நில மதிப்பு ரூ.2,400-ஐ 11-7-1994-ல் அந்நிறுவனம் செலுத்தியுள்ளது. 23-7-1996-ல் அந்நிறுவனத்திடம் நிலம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு காது கேளாதோர் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கான நில மதிப்பு ரூ.4,500-ஐ 6-9-1994-ல்

[2000 ஏப்ரல் 28

அந்நிறுவனம் செலுத்தியுள்ளது. 17-7-1996-ல் அந்நிறுவனத்திடம் நிலம் ஒப்படைக்கப்பட்டது. இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு பதில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த 2 நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்களுக்கு பக்கத்து நிலச் சொந்தக்காரர்கள், இவ்விடங்கள் தங்களுக்கே உரியது என்று கூறி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தனர். அவர்கள் தொடுத்த வழக்குகள் 4-4-1997 நாள் தீர்ப்பில் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 424, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**424—**

**சாலைப் பராமரிப்பு**

***23611—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறத்தில் சில இணைப்புத் தார்ச் சாலைகள் முதல் சிறிது தூரம் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பிலும் பிறகு சிறிது தூரம் கிராம நெடுஞ்சாலைத் துறைப் பராமரிப்பிலும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமப்புற இணைப்புத் தார்ச் சாலைகளில் சில முதல் சிறிது தூரம் வரை ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பிலும், பிறகு சிறிது தூரம் கிராம நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பிலும் உள்ளன. இதனை ஒரே துறையின்கீழ் கொண்டுவர வேண்டுமானால், சம்பந்தப்பட்ட சாலை, பேருந்து செல்லும் சாலையாக இருந்தால், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில் அரசு பரிசீலித்து உத்தரவு வழங்கியபின் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளலாம்.



2000 ஏப்ரல் 28]

முற்பகல் 9-50

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய இடங்களில் இதுமாதிரி இருக்கிறது. ஒரு R.R. சாலை, இணைப்புச் சாலையாக வருகிறது. அதே நேரத்திலே மொத்தம் 11 கி.மீ. சாலையிலே, 9 கி.மீ R.R.-ல் போடுகிறார்கள், பஞ்சாயத்திலே 2 கி.மீ. போடுகிறார்கள் ரொம்ப நன்றாகப் போட்டு இருக்கிறார்கள். மறுபடியும் பழுதானால் அவர்களே வந்து போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் 2 கி.மீ. போடாததால் இணைப்புச் சாலை முழுக்கப் பூர்த்தியாகவில்லை. இதுமாதிரி பல இடங்களில் இருக்கிறது. ஆகவே அந்த இணைப்புச் சாலைகளையாவது, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை போட்டால் பிரச்சினை இருக்காது. நிறைய பஞ்சாயத்துக்களில் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஈரோடு மாவட்டத்திலே உள்ள தாராபுரம்-பல்லடம் நெடுஞ்சாலை 11 கி.மீ. உள்ளது. அதிலே 9 கி.மீ. வரை நெடுஞ்சாலைத் துறை போட்டிருக்கிறது. 2 கி.மீ. பாக்கி உள்ளது, கேட்டால் பஞ்சாயத்தில் பணம் இல்லை, அதனால் போட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அந்த இணைப்புச் சாலைகளையாவது நெடுஞ்சாலைத் துறையில் எடுத்துப் போடுவதற்கு ஆவன செய்வார்களா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்புச் சாலை என்பது வேறு. இரண்டு நிர்வாகத்திற்கும் சம்பந்தப்பட்டது. தனித்தனியாக இருப்பது என்பது வேறு. ஆகையினால் மூலக் கேள்வியை ஒட்டி நான் சொல்கிற பதில் இதுதான். ஒருவகையில் ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியம் இவற்றிற்கு ½ கி.மீட்டரும் பிறகு நெடுஞ்சாலைத் துறைக்கு 10 கி. மீட்டரும் சாலை இருப்பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இடையூறுகள் இருப்பது உண்மை. ஆனால் அவர்கள் நிச்சயமாக இது குறித்து சம்பந்தப்பட்ட துறையின் மூலம் எழுதி அனுப்புவார்களேயானால் அதைப் பரிசீலித்து ஏதாவது ஒரு துறை, குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் எடுத்துக் கொள்ளலாம் என்ற அளவில் அரசு அதற்கு உத்தரவு வழங்கத் தயாராக இருக்கிறது. அப்படி ஏதாவது ஓரிடத்திலே இருந்தால், நாளை முதல் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஊராட்சி ஒன்றியச் சாலையும், நெடுஞ்சாலைத் துறைச் சாலையும் இரண்டும் கலந்து கலந்து வருகிற காரணத்தினால், பெரிய பிரச்சினைகள் எழுகின்றன. உதாரணத்திற்கு என்னுடைய கீரப்பாளையம்- பொன்னேரி சாலை என்பது 1 கி.மீ. ஊராட்சி ஒன்றியச் சாலையாகவும், 1 கி.மீ. நெடுஞ்சாலைத் துறைச் சாலையாகவும் இருக்கிறது. தீர்மானம் போட்டும்கூட, நெடுஞ்சாலைத் துறை அதனை எடுத்துக்கொள்ளவில்லை. காரணம் நெடுஞ்சாலைத் துறையிலே மேம்பாடு செய்வதற்குப் பணம் இல்லை என்கிற குறைபாட்டைச் சொல்கிறார்கள். எனவே எல்லாவற்றையும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகவே எடுத்துக்கொண்டால்கூட நல்லது. ஏனென்றால் இப்போது ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால், ஊராட்சி ஒன்றியச் சாலையாக எடுத்துக் கொண்டால்கூட நல்லது. எது எப்படியிருப்பினும், ஒரே சாலையாக அதனைப் பராமரிக்க அரசு உடனடியாக முடிவு செய்யுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிர்வாக இடையூறு காரணமாக விதிகளைத் திருத்த இயலாது. இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரை, நெடுஞ்சாலைத் துறை மிகப் பெருமையான ஒரு பெரிய துறை. அதோடுகூட அதற்கெனத் தனியாக இருக்கிற ஒரு துறை. எனவே ஊராட்சி ஒன்றியச் சாலை, ஊராட்சிச் சாலைகளை வேண்டுமானால், நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கலாமே தவிர, நெடுஞ்சாலைத் துறை சாலையை, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்து என்னதான் நிதி உதவியை நாம் செய்தாலும்கூட, அது சரிவர செயல்படாது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று இரண்டு விதமான சாலைகள் இருக்கின்றன. இதிலே ஊராட்சி மன்றத்திலே பணம் இல்லாத காரணத்தினால், ஊராட்சி மன்றச்





சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக ஏற்படுத்த வேண்டுமென்று பஞ்சாயத்திலே தீர்மானம் போட்டுக் கொடுத்தால் அதை மாற்றுகிறோம் என்று ஒரு சில ஒன்றியங்களிலே ஒத்துக்கொள்கிறார்கள். ஒருசில ஒன்றியங்களிலே தீர்மானம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. கிராமத்திலே பணம் இல்லாத காரணத்தினால், கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒரு கிமீட்டருக்கு அதிகமாக இருக்கின்ற கிராமச் சாலைகளை, ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக மாற்றிட அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, ஊராட்சி ஒன்றியத்திலே பணம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த கிராமப்புறச் சாலைகள் அனைத்தையுமே ஊராட்சி ஒன்றியச் சாலைகளாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஊராட்சி ஒன்றியத்திலேயும் பணம் மிகுதியாக இருக்கிறது என்று சொல்வதற்கு யாரும் தயாராக இல்லை. காரணம் எவ்வளவு நிதி அவர்களிடத்திலே இருந்தாலும்கூட, அதற்குத் தகுதியான பணிகளை எடுத்துக் கொண்டு, செய்து கொண்டு வருவது இன்றைய நடைமுறையில் இருக்கிறது. தேக்க நிலை எங்கேயும் இல்லை. ஆகையினால் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டதோ, அவரவர்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்கிற பொறுப்பையும் அரசு நிர்வகித்து வருகிறது. அதேபோல மாவட்ட நிர்வாகமும் தலையிட்டு, அதிலே ஏதாவது சிக்கல் இருந்தால் அதைத் திருத்தி இரண்டு மன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, D.R.D.-யிலே அதை எடுத்து வைத்து, நிர்வகித்து வருகிற வழக்கம் இப்போது இருக்கிறது. அதை மாற்ற இயலாது.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற இணைப்புச் சாலைகள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதைப்போல, இரண்டு ஒன்றியங்களுக்கு உரியதாகச் சில சாலைகள் அமைந்து விடுகின்றன. அந்தச் சாலைகளை இரண்டு ஒன்றியங்களிலேயிருந்து யார் பழுதுபார்ப்பது என்ற சிக்கல் ஏற்படுகிறது. அதிகப்படியான தூரம் சாலைகள் உள்ள ஒன்றியம் இத்தகைய சாலைகளைப் பராமரிக்கலாம் என்ற நிலையான ஓர் உத்தரவை அரசு வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒன்றியமாக இருந்தாலும் அதற்கு எல்லை இருக்கிறது. அந்தந்த எல்லைகளில் உள்ள சாலை என்பதற்கு இப்போது ஆதாரமே இருக்கிறது. புதிதாக நம்முடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, சாலைகள், தெருக்கள், சந்துகள் இவை எங்கெங்கே இருக்கின்றன என்ற விவரங்கள் தனியாக இருக்க வேண்டுமென்று ஊராட்சியிலிருந்து மாநகராட்சிவரை உத்தரவிட்டு, அதற்காக ஒரு பதிவேடே இருக்கிறது. அந்தப் பதிவேட்டின் மூலம் எவ்வப்போது பணிகள் எடுக்கப்பட்டன, எப்போது முடிக்கப்பட்டன, முடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன, அதற்குப் பிறகு புதிதாகப் போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா என்பவையெல்லாம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எனவே அவரவர் எல்லைக்குட்பட்ட சாலையை அவரவர் பராமரிக்கலாம் என்ற உத்தரவு இப்போது நடைமுறையில் இருக்கிறது. அதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை. அதையே தொடரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 425, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**425—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***24682—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பனப்பாக்கம், தக்கோலம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது முற்றுப்பெறும்?

(ஆ) விரைந்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பனப்பாக்கம் மற்றும் தக்கோலம் நகரப் பேரூராட்சிகளுக்கு தனித்தனியாக குடிநீர்த் திட்டங்கள்



மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு தற்போது சோதனையோட்டத்தில் உள்ளன. விரைவில் சோதனையோட்டம் முடிவுற்று திட்டங்கள் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள பனப்பாக்கம், தக்கோலம், நெமிலி போன்ற பேரூராட்சிகளுக்குட்பட்ட பகுதிகள் நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளாகும். அந்தப்பகுதிகளிலே சாயத் தண்ணீரை தரையிலே கொட்டுவதால் ஏற்படும் இரசாயன மாற்றத்தினால் நிலத்தடி நீர் கெட்டு, குடிப்பதற்கு இலாயக்கற்ற நிலையில் இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வலியுறுத்தப்பட்டது. நமது தமிழ்நாட்டிலே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக தண்ணீர்ப் பஞ்சமே இல்லை. அதன் தொடர் நடவடிக்கையாகத்தான் என்னுடைய பனப்பாக்கம் பேரூராட்சிக்கு பாலாற்றிலிருந்து 226.26 இலட்ச ரூபாயிலும், தக்கோலத்திற்கு கல்லாற்றிலிருந்து 43 இலட்ச ரூபாயிலும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டு கடந்த 10 தினங்களுக்கு முன்னால் சோதனையோட்டம் நடத்தப்பட்டது. அதில் பல குடியிருப்புப் பகுதிகளுக்குத் தண்ணீர் வராமல் பல இடங்களிலே உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. அதைச் சரிபடுத்தித் தருவதற்கும் ஆவன செய்ய வேண்டும். நெமிலி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்க 50 இலட்ச ரூபாயிலே திட்டம் தயாரிக்கப்பட்டு 1999-2000 ஆண்டிலே 50 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு 4, 5 மாதங்கள் ஆகியும் இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதையும் சேர்த்து நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் சோதனையோட்டம் என்றே குறிப்பிட்டேன். இந்தச் சோதனையோட்டத்தின் மூலமாக தண்ணீர் போய்ச் சேராத இடங்கள், குழாய்கள் வெடிப்பது, கசிவு ஏற்படுவது போன்றவற்றையெல்லாம் கண்டறிந்து, சரிசெய்து, நேராக எந்தெந்த இடங்களுக்கு நாம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அந்தத்

[2000 ஏப்ரல் 28

திட்டத்தில் வரையறுத்திருக்கிறோமோ அங்கு போய்ச் சேருகிற வரை— ஏற்கெனவே 15 நாட்கள் என்றுகூட வைத்திருந்தோம், இப்போது அப்படியில்லை—சரி செய்து எப்போது முடித்தாலும் அதற்குப் பிறகுதான் ஊராட்சிகளிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவையிட்டிருக்கிறோம். எனவே இவையெல்லாம் சீர் செய்த பிறகுதான் ஒப்படைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்கிறது. திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் பயன்பெறத்தக்க வகையிலே கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அது எப்போது முடிக்கப்படும்? நல்லதைப் பாராட்டுவோம் என்ற முறையிலே, சிறப்புக்குரிய வகையிலே, இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விருது பெற்றிருப்பதாக அறிகிறோம். நல்லதைப் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் தவறுகள் நடைபெறுவதைச் சுட்டிக்காட்டுகிற கட்சி என்ற முறையிலும் மீண்டும் கோடை தொடங்கி இருக்கிற காரணத்தினாலே குடிநீர்ப் பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்குரிய முன் முயற்சிகளை அரசு மேற்கொள்ளவிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிறதா என்ற கேள்விக்கே இடமில்லை. தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருவதும், ஆய்வு நடத்திக் கொண்டு வருவதும், அதற்குரிய பணிகளை ஆய்வு முடிந்ததும் மேற்கொள்வதும் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. அதனால் இனிமேல் மேற்கொள்ள வேண்டுமென்ற பேச்சுக்கே இடமில்லை. இது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 426, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 28]

**426—**

### காய்கறி உற்பத்தி

***24875—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அத்தியாவசியக் காய்கறிகளான வெங்காயம், உருளை, சுத்தரி, கோஸ், பீன்ஸ், கேரட், அவரை போன்றவை தட்டுப்பாடின்றி ஆண்டு முழுவதும் கிடைக்கும் வகையில் உற்பத்திப் பெருக்கம் செய்திட அரசு தனித் திட்டம் தீட்டிட முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். மாநில அரசால் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது.

*முற்பகல் 10-00*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய அத்தியாவசியக் காய்கறிகளான வெங்காயம், உருளை, சுத்தரி, கோஸ், பீன்ஸ், கேரட், அவரை போன்றவற்றை நமது வேளாண்மைத் துறையின் மூலமாகச் சாகுபடி செய்வதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாவட்ட வாரியாக இப்படிப்பட்ட திட்டங்கள் இருக்கின்றனவா அல்லது மாநிலம் முழுமைக்கும் இந்தத் திட்டங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறதா? இத்தகைய காய்கறிகளை உற்பத்தி செய்வதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்கிற விவசாயிகளுக்கு அரசு ஏதாவது மானியம் அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசால் உயர் விளைச்சல் காய்கறி ரகங்களின் சாகுபடிப் பரப்பைக் கூடுதலாக்க ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் தமிழகம் முழுவதும் இருக்கிறது.

[2000 ஏப்ரல் 28

அதுபோல மத்திய அரசு திட்டமும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, கோஸ், அவரை, பீன்ஸ், தக்காளி, வெண்டை, கீரை வகைகள், முள்ளங்கி, கொடி வகை காய்கறி வகைகள்—பாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பரங்கிக்காய், பூசணிக்காய், சுரக்காய்--போன்றவற்றிற்கு உயர்விளைச்சல் தரக்கூடிய விதைகளை 50 சதவீதம் மானியத்திலே நாம் வழங்குகிறோம். ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 1¼ ஏக்கர் வரைக்கும் ஒரு விவசாயிக்கு 50 சதவீத மானியத்திலே நாம் விதைகள் வழங்குகிறோம். அதுவும் 2000-2001 நிதியாண்டில் மாநில அரசு திட்டத்திலே ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூபாய் 4 கோடி செலவில் உயர் விளைச்சல் காய்கறி விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் சாகுபடி தொழில்நுட்ப சிறு கையேடு, செயல் விளக்க சிறுதலைகள் ஆகிய பல திட்டங்கள்கூட செயல்படுத்த நடவடிக்கையிலே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்து 100 உழவர் சந்தைகள் தொடங்குவதற்கான அந்தப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இது விவசாயிகள் மத்தியிலும் நுகர்வோர் மத்தியிலும் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. ஆகவே இந்த உழவர் சந்தைகளுக்குத் தொடர்ந்து காய்கறிகள் வர வேண்டுமென்பதற்காக குளிர்கால காய்கறிகள் வரத்துக்களை அதிகரிக்கக்கூடிய வகையிலே மாநில அரசாங்க திட்டமாக வேளாண்மை மானியக் கோரிக்கையிலே முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. உழவர் சந்தைகளில், சமவெளிப் பரப்பில் பயிரிடப்படும் காய்கறிகளில் கத்தரி, வெண்டை, தக்காளி, வெங்காயம், மிளகாய் போன்ற காய்கறிகள் மட்டுமே இப்போது விற்பனை செய்யப்படுகின்றன. குளிர்கால காய்கறி பயிர்களான பூகோஸ், முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், சிவப்பு முள்ளங்கி போன்ற பயிர்களையும் விவசாயிகள் பயிரிடும் வகையில் அதற்கான இரகங்களை அறிமுகப்படுத்தி 500 ஹெக்டர் பரப்பில் பயிரிடப்பட ஊக்கமளிக்கப்படும். இதற்கும் மானியமாக ஹெக்டேருக்கு ஏற்படும் காய்கறி விதைச் செலவில் 50 விழுக்காடு அல்லது 2000 ரூபாய்வரை விவசாயிகளுக்கு வழங்க திட்டம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சிறிய வெங்காயமானாலும், பெரிய வெங்காயமானாலும்,



2000 ஏப்ரல் 28]

தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் மத்திய அரசு ஒரு இலட்சம் டன்னுக்கு மேலாக ஏற்றுமதி செய்ய அனுமதி மறுக்கிறது. இது தேசிய வெங்காய உற்பத்தியாளர்களுடைய பிரச்சினையாக இருக்கிறது. ஓர் உள்நோக்கத்தோடு தேர்தலை மனதில் வைத்து ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி மறுக்கிறது. ஆகவே தேவையான அளவு வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசை வற்புறுத்தும் அளவில், தமிழக அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதிக் கொள்கை மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வெங்காய உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொண்டு ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே நம்முடைய தமிழக அரசு மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறது.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 427, திரு வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**427—**

**விவசாய நிலங்களில் விடுகள்**

***26482—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாய நிலங்களில் வீடுகள் கட்டப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தற்போது விவசாயத்திற்குப் பயன்படாத தரிசு நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

[2000 ஏப்ரல் 28

(ஆ) அதைத் தடுக்க விவசாயத் துறை மூலம் நடவடிக்கை ஏதும், சில சட்டப் பிரச்சினைகளால் தற்போது எடுக்கப்படுவதில்லை. இருப்பினும் நன்செய் நிலங்களை வீட்டுமனை நிலங்களாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு சட்டத் திருத்தம் கொண்டுவருவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நிலங்களை எல்லாம் விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துவரும் இந்தக் காலகட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றின் ஓரங்களிலே இருக்கின்ற எல்லா விவசாய நிலங்களும், வீடுகளும், பஞ்சாலைகளும் தொழிற்சாலைகளாக மாறி வருகின்றன. அதனால் விவசாய வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. இந்தச் சூழ்நிலையில் அதைத் தடுத்து, வீடு கட்டுவதற்கு வேறு இடங்களை ஒதுக்கித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்செய் நிலங்களிலே வீடுகள் அல்லது தொழிற்சாலைகளை அமைக்க முற்படுகிறபோது அது விவசாயத்திற்குப் பயன்படாத நிலமா, அப்படி வீடுகள் கட்ட அனுமதிக்கலாமா, தொழிற்சாலை தொடங்க அனுமதிக்கலாமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்கிறார். பிறகு வேளாண்மைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று, அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் நகரமைப்புத் திட்டத்திற்கு, அவருடைய ஒப்புதலை எல்லாம் பெற்று அனுமதி வழங்குகிறார்கள். ஆனால் உயர்நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டபோது, அதற்கு சட்டத்திலே அப்படி இடமில்லை. ஆகவே நீங்கள் இதுபோன்ற விதிமுறைகள் வைத்திருக்கத் தேவையில்லை. அதை அமல்படுத்த இயலாது என்ற ஒரு தீர்ப்பும் 14-1-1995-லே வழங்கப்பட்டிருக்கிறது. இதன்மீது மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றி சட்டத் துறையைக் கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 428, திரு. ச. அழகிரி மற்றும் திரு. செங்கை சிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 28]

**428—**

## விமான ஓடுபாதை

***14044—திரு. ச. அழகிரி:**
**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தின் ஓடுபாதையை சர்வதேச விமானங்கள் வந்திறங்கும் வகையில் நீளப்படுத்திட மத்திய அரசினை மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிப்பு செய்வதற்கான திட்டம் இந்திய விமான நிலையக் குழுமத்தின் திட்டப் பணியில் உள்ளது. ஓடுபாதையை விஸ்தரிப்பதற்காக 19.99.0 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு திருச்சி மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கேள்வி. திருச்சி விமான தளத்தினுடைய ஓடுபாதை என்பது மிகவும் குறைந்த தூரம் கொண்டதாக இருக்கிறது. சர்வதேச விமானங்கள் வந்து இறங்குகின்றபோது அவை இறங்குகிற மாதிரியே தெரியவில்லை. குதிக்கிற மாதிரி இருக்கிறது. எனவே அவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன. அந்த விமானிகளிடம் கேட்கிறபோது 'எல்லா விமானிகளுமே இந்த ஓடுதளத்திலே விமானத்தை இறக்க முடியாது மிகவும் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே இறக்க முடியும். மற்றவர்கள் இறக்கினால் விபத்து ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது' என்று சொல்லுகிறார்கள். எனவே அரசாங்கம் விரைந்து முடிவெடுத்து, அந்த ஓடுதளத்தை சர்வதேசத் தரத்திற்குக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, விமான தளத்திற்குள் இருக்கின்ற கழிவறைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவை நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை என்றாலும்கூட மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது அரசாங்கமோ தன்னுடைய செல்வாக்கைப்

பயன்படுத்தி கழிப்பறைகளை நவீனப்படுத்த, வசதிகளைச் செய்து தர ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் திருச்சி விமான நிலையத்தைப் பார்த்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலம் இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தனை வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. 19.2 ஹெக்டேரோடு கூடுதலாக சர்வதேச அளவுக்கு அனைத்து விமானங்களும் இறங்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக 1.5 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு கட்டடம் கட்டுகின்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

முற்பகல் 10-10

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மையப் பகுதியாக திருச்சி இருக்கிறது. வளர்ந்துவருகிற பெருநகரங்களில் திருச்சியும் ஒன்றாகும். ஆகவே அங்கே சர்வதேச விமான தளம் அமைக்கும் சூழ்நிலை இருந்தாலும்கூட, சென்னையைப்போல ஓடுபாதை அமைக்கிற திட்டம் திருச்சிக்கு உண்டா? அதுமட்டுமல்லாமல் சென்னை அளவிற்கு அதனுடைய தரத்தை உயர்த்துகிற ஒரு சூழ்நிலையை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு மாநில அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாநில அரசும் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் கீழக்குறிச்சி கிராமத்திலே 4.1 ஏக்கர் நிலத்தை எடுப்பதற்காக 4(1) Notification எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவர்கள் கோரியுள்ள நிலங்களையெல்லாம் கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே இதை விரைவில் விஸ்தரிப்பதற்கான பணிகளை அரசு மேற்கொள்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரையைப் பற்றியதாக இருந்தால்தான் பேச அனுமதிப்பேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு அரசு ஏதேனும் செயற்குறிப்பை மத்திய சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறதா? அதுமட்டுமல்லாமல் இந்திய விமானத்தை விடுதலைப் புலிகள் கடத்தப் போவதாகப் பத்திரிகைகளிலேயெல்லாம் செய்தி வருகிறது. இதுசம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மதுரை விமான நிலையம் பற்றித்தான் கேட்கலாம். நீங்கள் கேட்டது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது. மதுரை விமான நிலையத்தைப் பற்றிச் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். இல்லையென்றால், நான் அடுத்த வினாவிற்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடு) உறுப்பினர் கேட்பது தொடர்புடைய வினா இல்லை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திருச்சி குறித்த மூலக்கேள்வி. இருந்தாலும்கூட, மாநில அரசைப் பொறுத்தவரையில், சேலம், மதுரை போன்ற இடங்களிலேயும் விமான நிலையங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மத்தியிலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். விரைவிலே அவற்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை மாநில அரசும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகைக்குளம், தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் இடையிலுள்ள ஒரு விமான தளம். சென்ற சில காலமாக விமானம் சென்று வந்தது, இப்போது மூடப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அரசு விமானத்தில் வருகின்றபொழுதுதான் திறக்கப்படுகிறது. அந்த விமான தளத்தைச் சரி செய்து, விமானம் ஓடுவதற்கு ஏற்றவாறு—நாங்குநேரியில் Hi-Tech Park வர இருப்பதால்—சீர் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 28

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தனிக்கவனம் செலுத்தி, மத்திய அரசாங்கத்திற்குக் கடிதங்களெல்லாம் எழுதியிருக்கிறார்கள். விரைவில் தமிழகத்திலே இதுபோன்ற விமான நிலையங்களை விரிவுபடுத்துகிற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேலம் ஒன்றுதான் பாக்கி. சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள சேலம் விமான நிலையம் போக்குவரத்திற்குப் பயன்படாமல் வெறுமனே இருக்கிறது. நவீன வசதிகள் கொண்ட அந்த விமான நிலையத்தில் மாநில அரசின் சார்பாக ஓர் ஓட்டுநர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். மேலும் அங்கிருந்து சென்னை, மும்பை, பெங்களூர் போன்ற நகரங்களுக்கு விமானங்கள் விடுவதற்கு மைய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே என்னுடைய பதிலில் சொல்லியிருக்கிறேன். சேலம், மதுரை, வாகைக்குளம் போன்ற இடங்களிலே இருக்கிற விமான தளங்களை நிலை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசாங்கத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *429*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**429—**

**நிவாரண நிதி**

***15585—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 28]

சமயநல்லூர் தொகுதி, பரவை அருகில் நடந்த பஸ்-வேன் விபத்தில் இறந்த நபர்களுக்கு விபத்து நிவாரண நிதி வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலேயிருந்து அது வழங்கப்பட்டுவிட்டது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்தார்கள். ஆனால் வழங்கப்பட்டிருக்கிற தொகை மிகக் குறைவாக இருக்கிறது. உயிரிழந்தவர்களுக்கு *3,000* ரூபாய் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியின் நோக்கமே, பாதிக்கப்பட்டவர்களுக்கு, சட்டமன்றத்தின் மூலமாக ஏதாவது அதிகப்படியான தொகையைப் பெற்றுத் தரவேண்டும் என்பதுதான். அதிலே இறந்தவர்களெல்லாம் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மிகுந்த ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இறந்தவர்கள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, கருணையுள்ளத்தோடு, சென்ற வாரம்கூட கடலூர் பகுதியிலே நடந்த விபத்திலே இறந்தவர்களுக்கு *50,000* ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற ஒரு விபத்துதான் இதுவும். அரசுப் பேருந்து மூலமாக ஏற்பட்ட விபத்து. எனவே உயிரிழந்தவர்களுக்கு அதிகப்படியான நிவாரணத் தொகையை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *28-9-1997* அன்று நடைபெற்ற விபத்தின்போது, அன்றிருந்த அரசு உத்தரவின்படி, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களுக்கு *3,000* ரூபாய்தான் வழங்கப்படும். அதற்குப் பிறகு அந்த உத்தரவு மாற்றியமைக்கப்பட்டு, *5,000* ரூபாயாகவும், பிறகு மற்றொரு உத்தரவின் மூலமாக *10,000* ரூபாயாகவும் வழங்கப்படுகின்றது. இது தனியார் வாகனங்களில் பயணம் செய்பவர்களுக்குக் கொடுக்கின்ற

[2000 ஏப்ரல் 28

நிதியாகும். அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலே பயணம் செய்பவர்கள் உயிர் நீத்தால், அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று, அந்த உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 28-9-1997 அன்றிருந்த அரசு உத்தரவின்படி, அவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் மறுபரிசீலனை செய்து, இப்போது இருக்கிற உத்தரவின்படி வழங்க வேண்டுமென்று சொன்னால், நிறையக் கோரிக்கைகள் அதுபோல் வந்தவண்ணமாக இருக்கும். அது அரசினுடைய நிதிநிலைமைக்கேற்றதாக இருக்காது. ஆகவே 3 ஆயிரம் ரூபாய் அப்போது இருந்த உத்தரவின்படி வழங்கப்பட்டிருக்கிறது. அதுதான் அரசினுடைய உதவியாக இருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 430, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**430—**

### விடுதியைப் புதுப்பித்தல்

***16857—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி-சிதம்பரம் சாலையிலுள்ள கீழப்பாவூரில் பழுதடைந்துள்ள பயணியர் விடுதியைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில், எந்த ஆண்டில் பணி தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பயணியர் விடுதி ரூ.1.20 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.



2000 ஏப்ரல் 28]

வினா எண் 431, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**431—**

### சாலையை விரிவுபடுத்துதல்

***24434—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி-தாராபுரம், பழைய தாராபுரம் சாலை விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலிருந்து தாராபுரம் செல்கிற அந்தப் பழைய சாலையில் கிட்டத்தட்ட 10 பஞ்சாயத்துக்கள் உள்ளன. தாராபுரத்தை ஒட்டி வருகின்ற அந்தச் சாலையானது, பழனியிலிருந்து மானூர், நரிக்கல்பட்டி, கோரிக்கிடவு, கோவிலமாவட்டி, நாச்சியப்பகவுண்டன்வலசு, நால் ரோடு, கல்லுத்துறை, கோட்டத்துறை, பெரிச்சிபாளையம், ஆடிநாய்க்கன்வலசு வரை செல்கின்ற சாலையாகும். அதேபோல அதை அடுத்து, அழுங்கியத்திற்கும் தாராபுரத்திற்கும் இடையே உள்ள சாலை, தாராபுரம் தொகுதியை ஒட்டிய சாலையாக இருக்கிற காரணத்தினால்—அது மிகக் குறுகியது. ஒரு காரோ அல்லது வேனோ சென்றால், தார் ரோட்டை விட்டு கீழே சென்றால், இரண்டு கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் சென்றுதான், அது திரும்ப தார்ச் சாலைக்கு வரமுடியும். அந்த அளவுக்கு ஆறடி உள்ள சாலையில் இரண்டு அடி பள்ளமாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அதை மீண்டும் விரிவுபடுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில், பழனி-தாராபுரம், பழைய தாராபுரம் சாலை என்று கேட்டிருக்கிறார்.

அதிலே இரண்டு சாலைகள் இருக்கின்றன. பழனி—பழைய தாராபுரம் சாலை, பழனி நகரத்திற்குள்ளே இருக்கக்கூடிய மிகச் சிறிய சாலை. அது சிமென்ட் சாலையாக இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் கேட்கவில்லை என்று கருதுகிறேன். பழனி-தாராபுரம் மேற்குச் சாலை; அது ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. அதிலே போக்குவரத்துச் செறிவும் அதிகம் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 10,000 என்ற அளவுக்குக் கணக்கு இருக்கிறது. ஆனால் அதை அகலப்படுத்த வேண்டுமென்று விரும்பினால், சாலையின் இரு ஓரங்களிலும் செழிப்பான நன்செய் நிலங்கள் இருக்கின்றன. கிராமப்புறப் பகுதியிலே அது செல்கிறது. அந்த நிலங்களைக் கையகப்படுத்துவதிலே சிரமம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முயற்சி எடுத்து, சாலைக்குத் தேவையான இடத்தை இனாமாகப் பெற்றுத் தருவாரேயானால், அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 432, திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**432—**

**கோயிலைப் புதுப்பித்தல்**

***30908—திரு. சி.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம், இராமகிரியிலுள்ள அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் திருக்கோயில் கட்டடத்தைப் புதுப்பிக்கும் திருப்பணியைச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் திருக்கோயில் உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு அது கட்டப்பட்டு, ஒன்பது, பத்து சமுதாயத்தினர் அங்கு வந்து வழிபாடு செய்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கோயிலைப் புதுப்பித்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற வினாவைத் தொடுக்கிறபோது, அந்தக் கோயிலின் உண்மையான நிலை என்ன என்பதையும் கொஞ்சம் தெரிந்து அவரும் ஒத்துழைப்பாரேயானால், உள்ளபடியே திருப்பணி செய்துவிட முடியும். இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக 313.44 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இதிலே இருந்து வருகின்ற வருவாய் வெறும் 6,066 ரூபாய்தான். அந்த நிலங்களைக் குத்தகைக்கு வைத்திருக்கிற 47 பேரும், இன்னும் கொஞ்சம் குத்தகைத் தொகையை உயர்த்திக் கொடுக்கவும், கோயிலுக்கு வருமானத்தை அதிகப்படுத்தவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வாயிலாக முயற்சி மேற்கொள்ளப்படுமானால், நாங்களும் அடுத்து திருப்பணி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். இரண்டாவது, இதிலே இருக்கின்ற பெரிய சிக்கல், மொத்தமாக வருவது 6,066 ரூபாய் என்றாலும், திருப்பணி செய்ய வேண்டுமென்றால் 10 இலட்சம் ரூபாய் தேவை. எனவே இதை மனதில் கொண்டு, நம்முடைய உறுப்பினரும் ஆவன செய்வார்கள் என்றால், ஏற்கெனவே பலருக்குச் சொன்னபடி, 70 விழுக்காடு தொகை பொது மக்கள் நன்கொடையாகத் தர வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அதற்கான உறுப்பினருடைய முயற்சிகள் தொடருமானால், எங்கள் திருப்பணிகள் தொடரும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 433, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 28

433—

முதல்தர ஆலயமாக்குதல்

***31789—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலை திருப்பதி, குருவாயூர் போன்று முதல்தர ஆலயமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலை—திருப்பதி தேவஸ்தானமானது, ஆந்திர மாநிலத்தில் முதல்தர ஆலயமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டில்கூட, அதனுடைய பணிகள், 5 ஆண்டுகள் செய்யப்பட்டன. அதாவது 1975 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை திருமலை—திருப்பதி தேவஸ்தானமானது, தமிழகத்தில் ஹிந்து தர்ம ரஸ்தன சமஸ்தா என்ற அமைப்பை ஏற்படுத்தி, 5 ஆண்டு காலப் பணிக்கு அதன் கன்னியாகுமரி மாவட்ட அமைப்பாளராகக்கூட நான் பணியாற்றினேன். கிராமங்களிலே இருக்கக்கூடிய சிறு, சிறு ஆலயங்களை மேம்படுத்துவது, அவற்றின் பூஜைக்கு ஏற்பாடு செய்வது, ஒலிப்பெருக்கி வசதி செய்வது, அந்த ஆலயங்களில் குழந்தைகளுக்கு சமய அருளைப் போதிப்பதற்கான வகுப்புகளை நடத்தி, அதைப் போட்டி மூலம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன துணை வினாவா?

**திரு. சி. வேலாயுதன்:** அந்த அளவிற்கு வருமானம் இல்லாமல் இருந்தாலும்கூட, பழனி தேவஸ்தானத்தின் மூலம் கிராமங்களில், சிறு



2000 ஏப்ரல் 28]

குக்கிராமங்களில் உள்ள ஆலயங்களை மேம்படுத்த, அந்த வருமானத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் தனியாக ஒரு வாரியமாக அமைத்து, செய்ய ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி கோயில் என்பது இப்போது இந்திய அளவிலே புகழ்பெற்ற கோயிலாக இருக்கிறது. அதனுடைய ஆண்டு வருமானம் ரூபாய் 325 கோடி என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் பழனிக்கு—என்னைக் கேட்டால், தமிழ்நாட்டில் இருக்கிற கோயில்களில் அதுதான் முதல் இடத்திலே இருக்கிற கோயில். ஆனால்—வருமானம் 20 கோடிதான். இன்னும் சொல்லப்போனால், 325 கோடி என்றால்கூட, அதனுடைய நிருவாகம் தனியாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு இ.ஆ.ப. அலுவலருடைய தலைமையில் திருப்பதி கோயிலினுடைய நிருவாகம் மட்டும் தனியாக நடைபெறுகிறது. எனவேதான் அந்தப் பணிகளை அவர்கள் தொடர்ந்து செய்ய முடிகிறது. ஆனால் நம்முடைய பழனி கோயில் அப்படியல்ல. அதனுடைய நிருவாகம் இணை ஆணையர் மட்டத்தில் இருந்தாலும், அது நம்முடைய 36,324 கோயில்களில் ஒன்று என்றாலும், பழனியில் வருகிற வருமானம் என்பது, 1996-ல் இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் இருந்த வருமானம் 13 கோடி என்றால், இப்போது அது 20 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதிலிருந்து ஒரு நிதி பெறப்பட்டு, அதை வைப்பு நிதியாக வைத்துத்தான், இப்போது கிராமத் திருப்பணிகளுக்கான பணமே தரப்படுகிறது. எனவே 100 கோயில்களினுடைய திருப்பணி, அந்தத் தொகையிலிருந்து வருகிற வட்டியிலிருந்துதான் செய்யப்படுகிறது. எனவே அந்தத் திருப்பணி தொடருகிறது. இருந்தாலும், இதற்குமேல் கை வைத்தால், முதலுக்கே மோசமாகிவிடும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் கோயிலுக்கும் என்ன சம்பந்தம்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி மாதிரி தமிழ்நாட்டிலே பழனி கோயில் ஒரு பணக்கார சாமியாக இருக்கக்கூடிய ஒரு கோயில். ஆனால் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் உள்ள ஏழைக் கடவுள்கள் வறுமைக் கோட்டிற்குக்

[2000 ஏப்ரல் 28

கீழே இருக்கிறார்கள். எனவே இந்த மாதிரி பணக்காரக் கடவுளிடம் இருக்கின்ற பணத்தை எடுத்து, ஏழைக் கடவுள்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமெல்லாம் சமவுடைமைக் கருத்து படைத்தவர்கள்தான். எனவே உயர்ந்த தொகையுள்ள இடத்திலிருந்து, தாழ்ந்த இடத்திற்குக் கொஞ்சம் கொடுத்தால் தவறில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதேபோல உள்ளபடியே பழனி கோயிலில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று கோடி ரூபாய் எடுத்து, வைப்பு நிதியாகப் போடப்பட்டுத்தான்—இப்போது கிராமத் திருப்பணிகளுக்காக—100 கோயில்களுக்குத் திருப்பணி நடக்கிறது என்றால், அது முற்றிலும் பழனி கோயிலில், அந்தப் பணக்காரக் கடவுள் தந்த தொகைதான். அதுமட்டுமல்ல. வேறு சில கோயில்களின் சார்பாக நடத்தப்படுகிற பள்ளிகள், கல்லூரிகள், இன்னும் சொல்லப் போனால், வேறு வகையான நிறுவனங்களுக்குக்கூட, சில நேரம் பழனி கோயிலிலிருந்து கடன் தரப்படுகிறது. ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்குக் கடன் பெறப்பட்டால், பிறகு அது திருப்பித் தரப்படுகிறது. அந்த வகையிலும் பழனி கோயில் பலருக்குப் பயன்பட்டு இருக்கிறது. உள்ளபடியே, பல நலிந்த கோயில்களைத் தூக்கி நிறுத்துவதற்கும், திருப்பணி செய்வதற்கும் பழனி கோயிலினுடைய வருமானம் பயன்படுத்தப்படுகிறது. ஆனாலும் ஒரு வரம்பு இருந்தால்தான் அதுவும் வாழும். எல்லை நீளாமல் இருப்பது எப்போதும் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 434, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**434—**

### குடும்ப அட்டை

***17835—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 28]

தனி நபராக வாழ்பவர்களுக்கு குடும்ப அட்டையை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனி நபராக வாழ்பவர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. தற்போது தமிழகம் முழுவதும் 2,63,154 தனி நபர் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சி தமிழகத்தில் உருவான பிறகுதான், தனி நபர்களுக்கு வழங்கப்படுகின்ற அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அந்த வகையிலே நான் அரசுக்கு நன்றி சொல்லிப் பாராட்டுகிறேன். இருப்பினும், 100 தனிநபர்களுடைய விண்ணப்பங்கள் சேர்ந்த பிறகுதான், அவற்றை ஒன்று சேர்த்து அனுப்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலிருந்து பார்க்கும்போது, மிகவும் காலதாமதமாகின்றது. எனவே, 50 விண்ணப்பங்கள் வந்தாலும்கூட, அவற்றிற்கு குடும்ப அட்டைகள் வழங்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் பழைய குடும்ப அட்டைகளினுடைய எண்ணிக்கை, தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 48 இலட்சத்து 31 ஆயிரத்து 388 தான். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கணக்குப்படி, தமிழ்நாட்டில் இருக்கின்ற குடும்பங்களினுடைய எண்ணிக்கை மொத்தம் 1,47,46,940 தான். ஆனால் இப்போது புதிய அட்டையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியபோது, தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டிருக்கின்ற குடும்ப அட்டைகளுடைய எண்ணிக்கை 1,56,22,594. 2,63,154 தனி நபர் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை கிட்டத்தட்ட 1½ இலட்சம் மனுக்கள்தான் நிலுவையிலே இருக்கின்றன. ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விரைவிலே அவற்றையும் வழங்கச் சொல்லி முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆய்வு முடிந்த பிறகு அவையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 435, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**435—**

### இட ஒதுக்கீடு

***23058—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்தியக் கூட்டுறவு வங்கி சங்கத் தேர்தலில் ஆதிதிராவிடர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 'மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளதாலும், தனி நபர்கள் உறுப்பினர்களாக இல்லாததாலும் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை' என்ற விடைக்குப் பதிலாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைப் படிக்க அனுமதி கோருகின்றேன். ஏற்கெனவே இருந்த முடிவு அப்படி இருந்தது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது புதிய ஆணையிட்டிருக்கிறார்கள். எந்த ஒரு பணியிடத்திற்காக ஆட்களை எடுத்தாலும், அந்த இட ஒதுக்கீட்டு முறையைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படிதான் இப்போது ration கடை முதற்கொண்டு, மத்திய வங்கி வரை அத்தனை இடங்களிலும் இட ஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை சமூக நீதியினுடைய காவலர் என்று போற்றுகின்றோம். 25-3-1998-க்கு முன்னால், திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கியில் இரண்டு பெண்களையும் ஒரு S.T. பிரிவினரையும் நியமிக்கின்ற உத்தரவு இருந்தது. 25-3-1998 அன்று ஒரு துணை விதி திருத்தம் செய்யப்பட்டதால் பெண்களுக்கும், S.T. பிரிவினருக்கும் இருந்த உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமூக நீதியை வலியுறுத்தி வருகின்ற இந்த நேரத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இயக்குநர்களுக்கும் கண்டிப்பாக இட ஒதுக்கீட்டுக் கொள்கை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பட்டயப் பயிற்சி மாணவர்களைச் சேர்க்கும்போதும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்த வேண்டும். ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, mark அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படுவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு, காலியிடங்களை.... (மணியடிக்கப்பெற்றது)



2000 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை கேள்வி கேட்பீர்கள்? 4 கேள்விகளா?

**திரு. மு. அப்பாவு:** எல்லாம் இட ஒதுக்கீடு பற்றியதுதான் ஐயா. இன்னும் ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முக்கியமாக பெண்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் கேட்டீர்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. மு. அப்பாவு:** அதேபோன்று தற்போது பணியிடங்களை நிரப்புவது குறித்து திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் amendment போடப்பட்டுள்ளது. அதிலும் பெண்களையும், இட ஒதுக்கீட்டு முறையிலும் பணி மூப்பு அடிப்படையிலும் ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது பட்டயப் பயிற்சி முடித்தவர்கள், பட்டதாரிகளுக்குத்தான் வாய்ப்பளிக்க வேண்டுமென்று ஒரு புதிய திருத்தத்தை நீங்கள் கொண்டு வந்ததாக அறிகின்றேன். பணி மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவது போன்று, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள இடங்களுக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவ்வாறு நியமிப்பீர்களா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 28

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சும்மா என்ன கேட்கிறீர்கள்? இது என்ன சொற்பொழிவா?

பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க அளவிலே இருக்கின்ற வங்கிகள், நில வள வங்கிகள், நகர வங்கிகள் போன்ற வங்கிகளிலே தனி நபர்கள் உறுப்பினர்களாக இருக்கலாம். அப்படி தனி நபர்கள் உறுப்பினர்களாக இருக்கின்ற வங்கிகளிலே, பெண்களுக்கென்று தனியாக இடமும், ஆதிதிராவிடர்களுக்கு என்று தனியாக இடமும் ஒதுக்கப்பட்டு, இயக்குநர்கள் வந்திருக்கிறார்கள். ஆனால் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில், அதிலே தொடக்க வங்கிகள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் அங்கு பெண்களுக்கோ, ஆதிதிராவிடர்களுக்கோ இடம் ஒதுக்கிட முடியாது. அதிலே தொடக்க அளவிலே அரிசனத் தலைவர்கள் இருப்பார்களேயானால், அவர்களேகூட இயக்குநர்களாக வரலாம். அதுதான் இப்போது இருக்கின்ற நிலைமை. இப்போது மாண்புமிகு உறுப்பினரவர்கள் பணிமூப்பு அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பதிவுமூப்பு அடிப்படையிலே வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருப்பவர்களை பணியிலே எடுக்க வேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோன்றுதான் எடுக்கப்படும். அவ்வாறு எடுக்கிறபோது இட ஒதுக்கீட்டு முறை கண்டிப்பாகப் பின்பற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 436, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**436—**

**நீதிமன்றக் கட்டடம்**

***26933—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 28]

சீர்காழி தொகுதி, சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

உங்களுடைய மேலான அனுமதியுடன் சிறிதளவே திருத்திய விடையை வாசிக்கின்றேன்.

சீர்காழி தொகுதி, சீர்காழியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அரசுக் கட்டடத்திலும் இயங்கி வருவதால்,* தனியாக அவற்றிற்கென்று நீதிமன்றக் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திலே, என்றைக்கு நீதிமன்றம் தொடங்கப்பட்டதோ அன்று முதல் இன்று வரை இயங்கி வருகிறது. அந்த நீதிமன்றத்திலே ஒரு கூடம், மற்றும் நீதித் துறையினுடைய நடுவர் ஓய்வறை ஆகிய இந்த இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. எதிரிலே இருக்கக்கூடிய ஓட்டுக் கட்டடத்திலே அலுவலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. வட்டாட்சியர் அலுவலகமும், நீதித் துறை நடுவர் நீதிமன்றமும் ஒரே கட்டடத்தில் இயங்குவதால் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகின்ற கூட்டமும், நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு வருகின்ற கூட்டமும் பெருகி, சலசலப்பு அதிகமாக ஏற்பட்டு, வருகின்ற மக்களுக்கும், நீதித் துறை நடுவர் நீதிமன்றம் நடத்துவதற்கும் தொந்தரவாக இருக்கிறது. அதேபோல் வட்டாட்சியர் அலுவலகத்திலேயும் இதுபோன்ற தொல்லை இருக்கின்ற காரணத்தினால் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடத்தைத் தனியாக அமைத்துக் கொடுப்பதற்கு, வருங்காலத்தில் நிதி ஒதுக்குகிறபோது சீர்காழிக்கு முன்னுரிமை அளித்து, மறுபரிசீலனை செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வட்டாட்சியர் அலுவலகங்கள் எல்லாம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்துடன் இணைத்துதான் கட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக தென்காசியில்கூட அப்படித்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போன்று அதிலே ஏதாவது நெருக்கடி இருக்குமானால், எதிர்காலத்தில் தனியாக அமைக்க

வேண்டுமென்றால், அதற்கு நிதிநிலை இடம் கொடுக்குமானால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *437*, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**437—**

**விசைத்தறித் தொழில்**

***28603—திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் விசைத்தறித் தொழில் பாதிப்படைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவுளித் தொழில் இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலக அளவில் பாதிப்படைந்துள்ளதால், அதன் விளைவாக தமிழ்நாட்டிலும் விசைத்தறி நெசவுத் தொழில் பாதிப்படைந்துள்ளது. ஆனால் கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ள விசைத்தறி நெசவாளர்களுக்கு அரசு திட்டங்களான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம், சீருடைத் திட்டம் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு தொழில் பாதிப்படையாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் குறிப்பாக அவிநாசி, சோமனூர், பல்லடம் தொகுதிகளிலும், திருப்பூர் தொகுதியிலும், விசைத்தறியை நம்பி பணியாற்றக்கூடிய ஏழை விவசாயிகள் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு என்ன நெருக்கடி ஏற்படுகிறது என்றால்,





கோவை மத்தியக் கூட்டுறவு வங்கியிலும், திருப்பூர் நில வள வங்கியிலும் தொழில் செய்வதற்காக பெறப்பட்ட கடன்களுக்கு, ஜப்தி செய்வோம் என்று ஒரு நெருக்கடியைக் கொடுக்கிறார்கள். முதலிலேயே தொழில் நன்றாக இல்லை என்ற ஒரு நிலையில், மத்தியக் கூட்டுறவு வங்கியும் திருப்பூர் நில வள வங்கியும் கடுமையாக இந்த ஜப்தி நடவடிக்கையிலே இறங்குவது என்பது அந்தத் தொழிலை மேலும் சீரழித்துவிடும் என்பதால், அத்தகைய நடவடிக்கையை நிறுத்தி வைப்பதற்கு மாநில அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *25-4-2000* அன்று மாண்புமிகு உறுப்பினரவர்கள், *9-7-1999* அன்று கேட்ட கேள்விக்கு, இப்படிப்பட்ட விளக்கங்களுக்கு நான் பதில் அளித்திருக்கிறேன். இது அதற்கு முன்பு கேட்ட அதே கேள்விதான். *18-5-1999*-லே இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கும் இதற்கும் உள்ள வித்தியாசம், அதில் காடா துணிகள் தேக்கம் என்று இருக்கிறது. இதிலே விசைத்தறிக்கு ஒரு பெரிய சங்கடம் ஏற்பட்டிருக்கிறது என்ற இரண்டு வார்த்தைகள்தான் வித்தியாசம். பொதுவாக, மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் பெறுகின்ற cash credit விசைத்தறி நெசவாளர் சங்கங்களுக்குத்தான் அளிக்க இயலும். தனியார் விசைத்தறி நெசவாளர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி கடன் அளிப்பது அவர்களுடைய தனிப்பட்ட சக்தியைப் பொறுத்தோ அல்லது வேறு அணுகுமுறையாகவோதான் இருக்க முடியும். இன்னும்கூட சொல்லப்போனால், TIIC-லே வாங்கப்பட்ட கடன்கள் எல்லாம் அடைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் அவற்றையெல்லாம் எப்படி ஒழுங்குபடுத்துவது என்ற ஒரு முடிவு எடுத்தால் 'பெடக்சில்' என்று சொல்லப்படுகின்ற விசைத்தறிச் சங்கம் நம்முடன் உட்கார்ந்து விவாதித்து தங்களுக்கு இருக்கின்ற சங்கடங்களை எல்லாம் முழுமையாக எடுத்துரைத்தால் இதிலும் நிச்சயமாக வெற்றி பெறக்கூடிய ஒரு வாய்ப்பு உண்டு. அதற்கு நம்முடைய பேரவை உறுப்பினரே முன்நின்று செயலாற்றினால் நிச்சயம் அதுகுறித்து ஒரு நல்ல கூட்டத்தை அனைவரும் கலந்துகொள்ளக்கூடிய அளவிற்கு விசைத்தறியாளருக்கென்றே கூட்டி நாம் இதிலே செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

[2000 ஏப்ரல் 28

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகின்றது. சரி, கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நன்றி. அப்படி எடுக்கிறபோதே கூலி நெசவு செய்கிறவர்களை மட்டுமே அழைத்துப் பேசுவதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் செய்யும் உரிய உதவியாக இருக்கும் என்பதால், அத்தகைய தறியாளர்களை அழைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் விசைத்தறிக்குச் சொந்தக்காரர்களோ அவர்களை அழைத்துப் பேசுகின்றபோதுதான் அந்த நெசவாளர்களுக்குள்ள உரிமையை, அந்த நெசவாளர்களுக்குரிய தகுதியை பெற்றுத்தரக்கூடிய வாய்ப்பு உண்டாகுமேயொழிய, தனியாக விசைத்தறியில் கூலிக்கு வேலை செய்பவர்களை மட்டும் அழைத்துப் பேசினால் உண்மையிலேயே அது பயன்படாது என்று நான் கருதுகிறேன். விசைத்தறி உரிமையாளர்களிடம் சம்பளத்திற்கு வேலை செய்கின்ற நெசவாளர்களுடைய நலனைக் குறித்து பேச்சுவார்த்தையிலேயே கலந்து வேலைக்குரிய தகுதியான வருமானத்தை நாம் வாங்கிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே தனியாகக் கூலியாளர்களை மட்டும் அழைத்துப் பேசுவது சரிவராது. அனைவரும் கலந்து பேசினால்தான் சரிவரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 438, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**438—**

**மாணவர் விடுதி**

***30328—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 28]

குடியாத்தம், பரதராமி கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், குடியாத்தம், பரதராமி கிராமத்தில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டரிலே பரதராமி கிராமம் உள்ளது. இங்குள்ள மேல்நிலைப் பள்ளியிலே சுமார் 1500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் 10 கிலோ மீட்டர் சுற்றளவிலிருந்து வந்து படிக்கிறார்கள். இந்த மாணவர்கள் மிகவும் ஏழ்மையான பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் ஆகும். மேலும் இந்த மாணவர்கள் 8 கிலோ மீட்டர் பேருந்து வசதி இல்லாத பகுதியிலிருந்து வந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்கீழ் 972 விடுதிகள் இயங்குகின்றன. அவற்றில் 33 மாணவ, மாணவியர் விடுதிகள் வேலூர் மாவட்டத்தில் மட்டும் இயங்குகின்றன. தற்போது இயங்கும் விடுதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதனாலும், அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள இடத்தில் புதிதாக விடுதிகள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 439, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 28

**439—**

## தொழிற்பேட்டை

***29640—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, அரியனேந்தலில் கட்டப்பட்டு இயங்காமல் இருக்கும் தொழிற்பேட்டைகளை ஏதேனும் வேறு திட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமக்குடி தொகுதி, அரியனேந்தலில் (தொழிற்பேட்டை உரப்புலியில்) உள்ள தொழிற்கூடங்களின் விலையை மேலும் குறைத்து சிறுதொழில் முனைவோருக்கு வழங்கப்படும். விலை குறைத்தும் சிறுதொழில் முனைவோர் தொழிற்கூடங்களை வாங்க முன்வரவில்லையெனில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், டாஸ்மாக் முதலிய அரசு நிறுவனங்களுக்குத் தொழிற்கூடங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திசைவீரன், இருக்கையில் இல்லை. திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை அமைந்திருக்கக்கூடிய 14 ஏக்கர் நிலமும் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ளது. என்னுடைய மனைவியின் குடும்பத்திற்குச் சொந்தமான பூர்வீக இடம் என்பதால் கடந்த ஆட்சிக் காலத்தில் உள்நோக்கத்தோடு ஆர்ஜிதம் செய்து தொழிற்பேட்டையை உருவாக்கினார்கள். அது பூட்டப்பட்ட நிலைமையில் இப்போது இருக்கிறது. எனவே கல்வி இலாகாவிற்கு ஒப்படைத்து ஒரு Polytechnic தொடங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அங்கு 12 ஏக்கர் நிலப்பரப்பிலே 12 தொழிற்கூடங்கள் தனித் தனியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசு தற்போது 4,94,690 ரூபாய் என்ற



2000 ஏப்ரல் 28]

நிலையிலேயிருந்து 3,34,000 ரூபாய்க்குக் குறைத்திருக்கின்றது. இன்னும் அந்தப் பகுதியிலே தொழில் முனைவோர் முன்வந்தால் இதிலேயும் கொஞ்சம் குறைத்து சலுகை விலையிலே அவர்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. அரசு பொதுத் துறை நிறுவனம் எது முன் வந்தாலும் நிச்சயமாக இந்தத் துறை வழங்கத் தயாராக இருக்கின்றது.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான சிறுதொழில் செய்கின்ற தொழில் முனைவர்கள் பரமக்குடி பகுதியிலே அரியனேந்தல் பகுதியில் கட்டப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் தொழில் தொடங்குவதற்கு ஆர்வத்தோடு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரடியாக அங்கே வந்து, அந்தத் தொழில் முனைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி இந்தத் தொழிற்பேட்டையைத் தொடங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997ஆம் ஆண்டிலே நான் ஒருமுறை நேரடியாக வந்தேன். அங்கே பத்திரிகையிலே விளம்பரம் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட இராமநாதபுரம் பொது மேலாளர் அவர்களை அழைத்து யார் யார் தொழில் முனைய முன்வருகிறார்களோ அவர்களுக்கு விலையைக் குறைத்து வழங்கலாம் என்றுதான் 4,94,690 ரூபாய் என்ற விலையிலிருந்து 3,34,000 ரூபாயாகக் குறைத்தோம். அதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே எப்படியும் தொழில் வரவேண்டும் என்பதற்காக. அங்கே கட்டப்பட்ட 12 தொழிற்கூடங்களிலே ஒன்றையுமே யாருமே இதுவரை கேட்க வரவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, இரண்டு முறை பத்திரிகையிலே விளம்பரம் செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல் tender முறையிலேயும், ஏல முறையிலேயும் நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் பலன் கிட்டவில்லை. மீண்டும் மூன்றாவது முறையாக கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு முடிவெடுத்து, ஒரு குழு அமைத்து, இன்னும் விலையை எவ்வளவு குறைக்கலாம் என்று அரசு பரிசீலித்து வருகின்றது. வெகு விரைவிலே அந்த அறிவிப்பு வரும். வந்த உடனே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்வந்தால், நிச்சயமாக அரசு வழங்கும்.

[2000 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 440, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**440—**

**மாற்று வேலை**

***36614—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோழியின வளர்ச்சிக் கழகம் மூடப்பட்டதால், வேலையிழந்தவர்களுக்கு மாற்று வேலை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் மூடப்பட்டதால் வேலையிழந்தவர்கள் பெயர்ப் பட்டியல் அனைத்து அரசு கழகங்களுக்கும், வாரியங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்நிறுவனங்கள் தற்போதுள்ள காலிப் பணியிடங்களிலும், இனி ஏற்படவிருக்கும் காலிப் பணியிடங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் பொருத்தமான நபர்களுக்குப் பணி நியமனம் செய்து, மாற்று வேலைவாய்ப்பு அளிக்கும்படி அதன் மேலாண்மை இயக்குநருக்கு அரசாணை (நிலை) எண் 86, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 19-4-1999-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழியின வளர்ச்சிக் கழகமானது கால்நடைப் பராமரிப்புத் துறையோடு இணைக்கப்பட்டபொழுது பலபேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலும், இன்னும் 147 பேருக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு கருணைத் தொகை மட்டும் கொடுக்கலாமா என்று அரசு கருதுவதாகத் தெரிய வருகிறது. 147 பேர்களுக்கு 147 இலட்சம் ரூபாய் கொடுத்தாலும்கூட, அவர்கள் கருணைத் தொகையைவிட வேலையையே விரும்புகின்றார்கள். எனவே வேறு இலாகாக்களிலே, குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்கள், AAVIN, TAHDCO போன்ற நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க அரசு முன் வருமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 28]

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் மொத்தப் பணியாளர்கள் 283 பேர்கள். இதில் தினக்கூலிப் பணியாளர்கள் 15 பேர்கள்; நிரந்தரப் பணியாளர்கள் 268 பேர்கள். தொழில்நுட்பம் சார்ந்த பணியாளர்கள் 139 பேர்கள். கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் பதவிகளில் உள்ளவர்கள் இரண்டு பேர்கள். ஆக மொத்தம் 141 பேர்களை சத்துணவுத் திட்டத்திற்கு அனுப்பப்படும் முட்டைகளை மேற்பார்வை செய்ய கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு மாற்றம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டு, இதில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த 25 பேர்களை விடுத்து மீதி 114 பேர்கள் 9-7-1999 அன்று கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியமர்த்தப்பட்டனர். மீதியுள்ள 129 பேர்களுக்கு அரசு விதிமுறைகளின்படி தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தை அமல்படுத்துவது என்றும் அதை விரும்புபவர்கள் அதற்கான பயனைப் பெறலாம் என்றும், தன்விருப்ப ஓய்வை விரும்பாதவர்கள் விதிகளைப் பின்பற்றி விடுவிக்கப்படலாம் என்றும் ஆணை வெளியிடப்பட்டது. மேலும் கோழியின வளர்ச்சிக் கழகம் மூடப்படுவதால், தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் செல்ல விரும்புபவர்களுக்கும் தன்விருப்ப ஓய்வில் செல்ல மறுப்பவர்களையும் விதிமுறைகளின்படி பணி நீக்கம் செய்யவும், இந்த இரண்டு விதிமுறைகளின்படி செல்பவர்களுக்கு வேலையிழந்தவர்களின் பெயர்ப் பட்டியல் அனைத்து அரசுக் கழகங்களுக்கும், வாரியங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டு அந்நிறுவனங்களில் தற்போதுள்ள காலியிடங்களிலும், எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் காலிப் பணியிடங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பை அளிக்கும்படி அரசாணையில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கிடையில், இந்த அரசாணையை எதிர்த்து கோழியின வளர்ச்சிக் கழகப் பணியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த 25 பேர் உயர் நீதிமன்றத்தில் 29-4-1999 அன்று தாக்கல் செய்த நீதிப் பேராணை விண்ணப்பத்தின்மீது 23-2-2000 அன்று உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பில் கோழியின வளர்ச்சிக் கழகத்தை மூடுவதற்கு அரசு முடிவெடுத்து ஆணை வெளியிட்டது சரி என்றும், ஆனால் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு மாற்றம் செய்யப்படும் பணியாளர்கள் நேர்மையான முறையில் முதுநிலை பட்டியலின்படி மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பின்படி 22-4-2000-க்குள் அமல்படுத்த வேண்டுமென்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதுதொடர்பான கருத்துரு

[2000 ஏப்ரல் 28

சட்டத் துறைக்கு கூர்ந்தாய்வு செய்ய அனுப்பப்பட்டு பரிசீலனை செய்வதற்கு சிறிது காலம் தேவைப்படுவதால், மேலும் 6 வாரங்கள் கால நீட்டிப்பு வேண்டி அரசின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத் துறையின் கூர்ந்தாய்வுக்குப் பின் நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மீனம்பாக்கம், பள்ளிச் சிறுமி கடத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலைய அதிகாரியின் மகளை ஆட்டோ டிரைவர் கற்பழித்தது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) இப்போது நான் அனுமதித்த சிறப்புக் கவன ஈர்ப்பின்மீது பேசப் போகிறீர்களா? இல்லை நான் அடுத்த பிரச்சினைக்குப் போகவா? ஏனென்றால், நீங்கள் இடையில் எழுந்து gas பற்றி எல்லாம் பேசிக்கொண்டிருப்பீர்கள். அதற்கெல்லாம் அனுமதி கிடையாது. இதில் பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்திலே அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய திருவாளர் ஜோகி நாயுடு என்பவருடைய மகள் 9 ஆம் வகுப்பு மாணவி பழவந்தாங்கல் இரயில்வே சுரங்கப்பாதை பக்கம் போய்க் கொண்டிருந்தபோது பழவந்தாங்கல் எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் சுரேஷ் பாபு என்பவர் அவரிடம் நைசாகப் பேச்சு கொடுத்து, பள்ளியிலே கொண்டுபோய் விடுவதாகச் சொல்லி, இடையிலே கடத்திச் சென்று கற்பழித்துவிட்டதாக வழக்கு எல்லாம் பதிவாகி இருக்கிறது.



2000 ஏப்ரல் 28] [திரு. சி. ஞானசேகரன்]

அந்த நபரும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் இப்போது ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள், வேலியே பயிரை மேய்வதுபோல, பயணிகள் ஏறி அமர்ந்து அதிலே தனியாகப் பயணம் செய்யக்கூடிய நிலையில் அவர்களையே இப்படி கற்பழிக்கிறார்கள் என்று சொன்னால், அப்படிப்பட்டவர்களுக்கு licence கொடுக்கிற முறையை கொஞ்சம் கடுமையாக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்க முடியுமா? அவர்களுடைய antecedents-ஐ, அவர்களுடைய வரலாற்றையெல்லாம் கண்டுபிடித்து, அவர்கள் நல்லவர்கள்தானா என்றெல்லாம் கண்டுபிடித்து, பிறகு licence கொடுக்கின்ற ஒரு முறையைக் கொண்டு வந்தால்தான் இதுபோன்ற வாகனங்களிலே நாமெல்லாம் தைரியமாகப் பயணம் செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்படும். அதேபோல eve-teasing இப்போது நிறைய வந்து கொண்டிருக்கிறது. அதற்கெல்லாம் ஒரு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Eve-teasing இப்போது சென்னையிலே அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. பெண்களுக்குப் போதிய அளவு பாதுகாப்பின்மை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்களை எல்லாம் இரும்புக்கரம்கொண்டு ஒடுக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? அதுபோல ஆட்டோ டிரைவர்களுக்கு licence கொடுப்பதற்கு அல்லது இப்படித் தரம்கெட்டு நடந்துகொள்கிற வாகன ஓட்டிகளை எல்லாம் சீர் செய்வதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் கற்பழிப்பு என்கின்ற ஒரு கதைச் சுருக்கத்தை மாத்திரம் இங்கே சொல்லி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகின்ற அத்தனைபேருமே தீயவர்கள் என்பதைப்போல, காமாந்தக்காரர்கள் என்பதைப் போல, கடத்தல்காரர்கள் என்பதைப் போல ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார். எல்லோருமே நல்லவர்களும் அல்ல, எல்லோருமே கெட்டவர்களும் அல்ல என்ற அந்த தத்துவத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தக் கதைக்கு உள்ள ஒரு flash-back கொஞ்சம் இருக்கிறது. அந்த flash-back-ஐ நான் சொல்வது நல்லது என்று கருதுகின்றேன். அதிகாரிகள் மூலமாகக் கிடைத்த flash-back அது. அது உண்மையா, பொய்யா என்பது இந்தப் பிரச்சினை வழக்குமன்றத்திற்கு வருகிற காரணத்தினால் விரைவிலே தெரிந்துவிடும். இருந்தாலும் எனக்குக் கிடைத்த விவரத்தை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

மீனம்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வானிலை ஆராய்ச்சியாளர் குடியிருப்பு எண் 21-ஏ என்ற முகவரியில் உள்ள ஜோகி நாயுடு என்பவர், 14 வயதுள்ள தன் மகள் உமாமகேஸ்வரி மீனம்பாக்கம் கேந்திர வித்யாலயா பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருப்பதாகவும், 12-4-2000 அன்று பள்ளிக்குச் சென்றவள் வீடு திரும்பவில்லை என்றும், 13-4-2000 தேதி மாலை மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார்.

அந்தப் புகாரின் பேரில் குற்ற எண் 74/2000-ல் பெண் காணவில்லை என்பதற்காக வழக்கு ஒன்றினைப் பதிவுசெய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அதே குடியிருப்பில் எண் 21-பி, வீட்டில் உள்ள தஸ்தகீர் என்பவர் 18 வயதுடைய தன் மகள் மீராபி, அதே தேதியில் காணாமல் போனதாகக் கூறி, அவர் உமாமகேஸ்வரியின் தோழி என்றும் சொல்லி, மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார்.

முற்பகல் 10-50

அதன் அடிப்படையில் மீனம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 75/2000-த்தில் பெண் காணவில்லை என்பதற்கான வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்குகளில் இம்மாணவிகள் எங்கு சென்றிருப்பார்கள் என்று அவர்களுடைய குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், மீனம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த 23 வயதுடைய ஆட்டோ ஓட்டுநர் சுரேஷ்பாபு என்பவரையும் காணவில்லை என்றும், அவருக்கும் உமாமகேஸ்வரிக்கும் இடையே காதல் இருந்துவந்ததாகவும் தெரியவந்துள்ளது. காணாமல் போனவர்கள்பற்றி அனைத்து காவல் நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டு,



ஆய்வாளர் தலைமையில் தனிப் படை அமைக்கப்பட்டு பல இடங்களில் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் 15-4-2000 அன்று மீராபி தன் வீட்டிற்குத் திரும்பினாள். இந்த விவரத்தை மீராபியின் தந்தை தஸ்தகீர் 17-4-2000 அன்று காவல் நிலையத்திலே தெரிவித்ததன் அடிப்படையில் ஆய்வாளர் அந்த மீராபியை அழைத்து விசாரித்தபோது உமாமகேஸ்வரியும், சுரேஷ்பாபுவும் சுமார் 1½ ஆண்டுகளாகக் காதலித்து வருவதாகவும், அவர் சுரேஷ்பாபுவுடன் பல்லாவரம் சென்றதாகவும் தெரிய வந்தது.

ஆய்வாளர், பல்லாவரம் பகுதியிலே தேடியபோது, அவர்கள் இருவரும் செங்கல்பட்டு சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. ஆனால் இதற்கிடையில் 18-4-2000 அன்று மேற்படி இருவரும் மீனம்பாக்கம் இரயிலடிச் சாலையிலே கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

உமாமகேஸ்வரியை பெண் போலீஸ் உதவியோடு விசாரணை செய்தபோது, தனக்கும் சுரேஷ்பாபுவிற்கும் பழக்கம் ஏற்பட்டு, பள்ளிக்குச் செல்லாமல் அவரோடு பல இடங்களில் சுற்றியவுடன் அது காதலாக மாறிவிட்டதாகவும், பிறகு இருவரும் திட்டமிட்டு 12-4-2000 அன்று பள்ளிக்குச் செல்வதாகச் சொல்லி, மீராபியுடன் சுரேஷ்பாபுவைச் சந்தித்து அவரது ஆட்டோவில் மாங்காடு கோயிலுக்குச் சென்று, அவருடைய நண்பர்கள் முரளி, அருள் ஆகியோரைச் சந்தித்து கோயில் வாசலில் நின்று திருமணம் செய்துகொண்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அனைவரும் பிறகு பாண்டிச்சேரிக்குச் சென்றதாகவும், தானும் சுரேஷ்பாபுவும் Lodge-ல் ஓர் அறையிலும், மீராபி, முரளி மற்றும் அருள் ஆகியோர் மற்றொரு அறையிலும் இரண்டு நாட்கள் தங்கியதாகவும், அப்படித் தங்கியபோது, சுரேஷ்பாபுவும், தானும் உடலுறவு, கொண்டதாகவும், பின்பு 14-4-2000 அன்று திருப்பதி சென்று அங்கு அனைவருக்கும் அறை கிடைக்காததால் முரளி, அருள் இருவரும் சென்னைக்குத் திரும்பிவிட்டதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மீனம்பாக்கம் காவல் துறையினர் தங்களைத் தீவிரமாகத் தேடுவதாகத் தொலைபேசி மூலம் தகவல் தெரிந்ததும், 15-4-2000 அன்று, தாங்கள் மூவருமே மீனம்பாக்கம் வந்ததாகவும், பிறகு தானும், சுரேஷ்பாபுவும் சுரேஷ்பாபுவின் வீட்டிற்குச் சென்றதாகவும் தெரிவித்திருக்கிறார்.

சுரேஷ்பாபுவினுடைய அம்மா தங்களைச் சேர்க்கவில்லை என்பதால் சுரேஷ்பாபுவினுடைய நண்பர் வீட்டில் தங்கி, மறுநாள் பல்லாவரம் வந்து அங்கு ஒரு நண்பருடைய வீட்டிலே தங்கி, 18-4-2000 அன்று தன் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவே, சுரேஷ்பாபுவுடன், மீனம்பாக்கம் வந்தபோது காவல் துறையினரிடம் பிடிபட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

Minor பெண்ணாகிய உமாமகேஸ்வரியை பெற்றோரின் அனுமதியின்றி அழைத்துச் சென்றது கடத்தல் குற்றமானதாலும், Minor பெண்ணோடு உடலுறவு கொள்வது கற்பழிப்பு குற்றமானதாலும், வழக்கின் சட்டப் பிரிவு 366(அ) பிரிவு 376 இ.த.ச.-வாக மாற்றப்பட்டு சுரேஷ்பாபு கைது செய்யப்பட்டு 19-4-2000 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமியான உமாமகேஸ்வரி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவ்வழக்கிலே, சுரேஷ்பாபுவிற்கு உதவியாக இருந்தவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது அப்பகுதியிலே எந்தப் பதட்டமும் இல்லை. இதுதான் கதை. இவ்வளவுதான் நான் ஞானசேகரனுக்குச் சொல்ல முடியும்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) திருப்பூர் சுற்றுச் சாலை அமைக்கும் பணி நிலை

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு official-ஆக business இருக்கிறது. பிறகு உங்களைப் பேச அழைக்கிறேன். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

மூன்று முறை ஒத்திவைக்கப்பட்ட பேரவை விதி 55-ன்கீழ் வரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. முதலில், "திருப்பூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தேங்கிக்கிடப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து"—திரு. சுப்பராயன், இங்கே கவனிக்கிறீர்களா, இல்லையா? என்னிடம் வந்து, 'நான் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பை எடுத்துக் கொள்ளுங்கள்' எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லுவது, இப்போது நான் உங்களுடைய அறிவிப்பை எடுத்துக்கொண்டால் நீங்கள் எங்கேயோ





பேசிக்கொண்டிருக்கிறீர்கள் — திரு. கே. சுப்பராயன் அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருப்பூர் சுற்றுச் சாலைப் பணிகள் காலதாமதமாவது' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பூர் நகரைச் சுற்றி சுற்றுச் சாலை அமைக்கும் பணியானது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பணி. மாநிலச் சாலைகள் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் ஒப்புதலுடன், மைய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் செயலாக்க, அரசினால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் மைய அரசு அளிக்கும் 50 விழுக்காடு கடன் தொகையாகும். இப்பணியானது 7 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, இரு தொகுப்புகள் இரண்டு வெவ்வேறு ஒப்பந்தக்காரர்களிடமும், மீதமுள்ள 5 தொகுப்புகள் ஓர் ஒப்பந்தக்காரரிடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சாலைகளின் மொத்த நீளம் 57.2 கி.மீ. மொத்தம் உள்ள சிறு பாலங்கள் 96. மேலும் நொய்யல் ஆற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலமும் இதில் அடங்கும். இப்பணியின் செயலாக்கத்தில் 1997 ஆம் வருடம் டிசம்பர் மாதம் கோவை மாநகரில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் சிறிது சுணக்கம் ஏற்பட்டது. குண்டு வெடிப்புச் சம்பவத்தால் வெடிமருந்துக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் கருங்கற்கள் உடைப்பது தடைப்பட்டது. மேலும் பொது மக்களிடையே ஏற்பட்ட பீதியின் காரணமாக கல் சுரங்கங்களில் வேலை ஆட்கள் வராததாலும், சாலைப்பணியிடத் தளத்தில் கூலி ஆட்கள் வருகை தராததாலும் சிறிது தாமதம் ஏற்பட்டது. மேலும் வேலையைத் தொடங்கும் முன் வேலைதளத்தில் அமைக்கப்பட்டிருந்த பல துறைகளை சார்ந்த மின் கம்பங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், குடிநீர் வசதி குழாய்கள் ஆகியவை மாற்றியமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும், அவற்றை

நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டதாலும் சாலைப் பணியில் முன்னேற்றம் தாமதமாகியது. எனினும் துறையின் சார்பில், துரித முன்னேற்றம் இல்லாத காரணத்திற்காக ஒப்பந்தக்காரரிடம் விதிமுறைகளைப் பின்பற்றி ரூ. 46,000 அபராதக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் நாள் ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 7 தொகுப்புகளில், இரு தொகுப்புகளில் உள்ள பணிகள் (பால வேலை மற்றும் சாலை வேலை) முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 5 தொகுப்புகளில் வேலையின் முன்னேற்றம் ஒப்பந்தக்காரரால் மேலும் தாமதமானதால் அவரின் மூல ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தக்காரரின் செலவிலேயே மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, வேறு ஒப்பந்தக்காரர்களிடம் வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. அனைத்துப் பணிகளும் 30-4-2000-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-55

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதில் குறிப்பிட்ட கால வரம்புக்குள் பணிகள் முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நகரத்திற்குள்ளே வருகின்ற கனரக வாகனங்களை வேறு வழியிலே திருப்பிவிடுவதற்குத்தான் சுற்றுச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் திருப்பூர் சுற்றுச் சாலை 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. அணைப்பாளையத்திலே இருக்கக்கூடிய இரயில்வே பாலம், கூலிப்பாளையம் இரயில்வே crossing நொய்யல் நதி ஆகிய இந்த மூன்று இடங்களிலும் கனரக வாகனங்கள் செல்லவே முடியாது. அதிலும் இரயில்வே கீழ்ப் பாலத்தில் ஒரு லாரிகூடச் செல்லமுடியாது. ஆனால் ring road என்று சொல்கிறபோது, அந்த ring road எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்படுகிறதோ, அந்த நோக்கத்திற்குப் பொருத்தமானதாக நடைமுறையில் அது இல்லாததுதான் நடைமுறை அனுபவமாக இருக்கிறது. எனவேதான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நீங்கள் மத்திய அரசிடம் பேசி, அதை அங்கீகரித்து, அதனுடைய இரண்டாம் கட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால்தான் ring road மெய்யான உள்ளடக்கத்திற்குப் பொருத்தம் உள்ளதாக அமையும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள, முன்மொழிவு நிலையில் உள்ள இரண்டாம் கட்டப் பணிகள் குறித்து மத்திய அரசிடம், மாநில அரசு 50 சதவீதம் மத்திய அரசு 50 சதவீதம் என்ற அடிப்படையில் பேசி ஒப்பந்தத்திற்கு வந்து இரண்டாம் கட்டப் பணிகளையும் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சுற்றுச் சாலை என்பது முதல் கட்டத்தில் 57.2 கிலோ மீட்டர் தொலைவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கு மத்திய அரசு 50 சதவீதம், அதாவது 7.50 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு 50 சதவீதம், அதாவது ரூ. 7.50 கோடியும் முதலீடு செய்து அந்தத் திட்டம் இப்போது முடிகிற நிலையிலே இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது. இரண்டாவது பகுதியாகும். அது ஏறத்தாழ 55 கிலோ மீட்டர் வருகிறது. சாலைகள் மட்டும் 55 கிலோ மீட்டருக்கு ரூ. 26 கோடி ரூபாயும், இரயில்வே மேம்பாலங்கள் இரண்டுக்கு ரூ. 13 கோடியும், அதேபோல உயர்மட்ட ஆற்றுப் பாலங்கள் நான்கிற்கு ரூ.11 கோடியும், ஆக மொத்தம் ரூ. 50 கோடி அதற்குத் தேவைப்படுகிறது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டத்தை முடித்த பிறகு இரண்டாம் கட்டமும் மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புகு உறுப்பினர் கேட்டதைப்போல, அந்தப் பகுதியிலே இருக்கிற வியாபாரப் பெருங்குடி மக்களும், திருப்பூர் நகர்மன்றத் தலைவர் திரு. செல்வராஜ் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள்.

நான் நொய்யல் ஆற்றுப்பாலத்தை அங்கே திறக்கிறபோது அந்த நிகழ்ச்சியிலேகூட திரு. சுப்பராயன் அவர்கள் கேட்டார்; திரு. செல்வராஜும் கேட்டார்; மற்றவர்களும் கேட்டார்கள். எனவே அதையும் அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இப்போது 50:50 என்ற நிலைமை மாறி 100 சதவீதமும் மத்திய சர்க்கார் கடனாக வழங்குகின்ற ஒரு கொள்கை மத்திய அரசிலே எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இதுகுறித்து அரசு பரிசீலிக்கிறது. விரைவான முடிவு எடுக்கப்படும்.

## (ஆ) வேலூர், பாதாள சாக்கடைத் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, "வேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேறாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; "வேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேறாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

வேலூர் நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டிய பூர்வாங்க அறிக்கைகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனம் மூலம் கிர்லோஸ்கர் ஆலோசனை நிறுவனத்தினை கலந்தாய்வுக்குரியவராக நியமனம் செய்து, ரூ. 49.71 கோடியில் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. திட்டச் செலவினை நகராட்சி கடனாகப் பெற வேண்டும். கடனைத் திருப்பித் தர ஏதுவாக கீழ்க்கண்ட கட்டண விகிதங்கள் நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும்:

| | வைப்புத் தொகை (இணைப்பு ஒன்றுக்கு) | மாதாந்திரக் கட்டணம் (ரூபாயில்) | எதிர்பார்க்கப்படும் இணைப்புகள் |
|---|---|---|---|
| வீட்டு உபயோகம் | 3000 | 175 | 26,534 |
| இதர உபயோகம் (வணிகம் மற்றும் தொழில்) | 8000 | 175 | 5,482 |





இந்த அளவுக்கு கட்டணத் தொகைகள் வசூலிப்பது சாத்தியமா என்பது தற்போது வேலூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

நுகர்வோர் பிரதிநிதிகளுடன் நகராட்சி விவாதித்து கட்டண விகிதங்கள், நுகர்வோரால் ஏற்கப்படுமேயானால், திட்டம் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனம் கிர்லோஸ்கர் கம்பெனி மூலமாக ஓர் ஆய்வினை நடத்தி, ஏற்கெனவே ரூ. 49.71 கோடியில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. நாங்கள் வெகுநாட்களாகக் கோரி வருகின்ற திட்டம் இந்தத் திட்டம். ஆனால் எங்களுடைய நகராட்சி மிகவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற காரணத்தினாலே, 49.71 கோடி ரூபாயை செலவழிக்கக்கூடிய நிலையில் நகராட்சி இல்லை. வேலூர் நகர மக்களும் அவ்வளவு பணத்தை வைப்புத் தொகையாகக் கட்டக் கூடிய நிலையில் இல்லை. ஏனென்றால் ஒவ்வொருவரும் வைப்புத் தொகையாக ரூ. 3000 கட்ட வேண்டுமென்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிற பாதாள சாக்கடைத் திட்டத்திற்குக்கூட அவ்வளவு ரூபாய் வைப்புத் தொகையாகக் கேட்கவில்லை. அதாவது மாதத்திற்கு 175 ரூபாய் ஒவ்வொரு நபரும் இணைப்புக் கட்டணம் கட்ட வேண்டுமென்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு தொகையை எங்களால் செலுத்த முடியாத காரணத்தாலே, வேலூர் நகர மக்களுடைய நெடுநாள் கோரிக்கையான அந்தத் திட்டத்தை நிறைவேற்றும்முகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கட்டணத் தொகையையும் குறைத்து, வைப்புத் தொகையையும் குறைத்தால்தான் எங்களால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ரூ. 30 கோடி மானியத்தைக் கொடுத்து—கட்டணத் தொகையையும் வைப்புத் தொகையையும் குறைத்து—திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பேருந்து நிலையம் அமைத்தல், பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்தல் போன்றவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேகத்தின் அடிப்படையில் இந்தத் துறை செய்ய இயலவில்லை. அதற்கு மிக முக்கியமான காரணம், அரசியல் குறுக்கீடு; தனிப்பட்டவர்களுடைய, வணிகர்கள் போன்ற ஒருசிலருடைய குறுக்கீடுதான். அரசியல்வாதிகளும் சிலபேர் மக்களைக் காப்பாற்றுவதாகக் கருதி அவர்களுக்கு உதவி செய்வதைப்போல இந்தத் திட்டங்களைத் தடுக்கிற நிலையை உருவாக்குகிற காரணத்தால்தான் பல நகராட்சிகளில் இப்படிப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றிட அந்தக் கடன் பெற்று, முறையாக கடனை அடைக்கக்கூடிய தகுதி இருந்தும்கூட, செயல்பட முடியாமல், திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஆக்கபூர்வப் பணிகளைத் தொடராமல் இருக்கின்ற சூழ்நிலை தற்போது இருந்து கொண்டிருக்கிறது. Alandur pattern-ஐ மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள். இங்கே வாழ்கிற மக்களைவிட வேலூரில் வாழ்கிற மக்கள் எந்தவகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்பது நாடறிந்த உண்மை. ஏதோ மக்களுக்காகப் பரிந்து பேசுகிறோம் என்று எண்ணி அந்த மக்களுக்குக் கிடைக்கக்கூடிய இலாபத்தைத் தடுத்து நிறுத்துவது என்பது நல்லதல்ல.

நான் இந்த அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஏறத்தாழ *26,534* இணைப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். *3,000* ரூபாய் வைப்புத் தொகை என்பது சாதாரண காரியம். இதை அவரவர்களுடைய தெருவில் செய்யவில்லையே என்று வழியில் நின்று மறித்துகூடக் கேட்கிறார்கள். இது பல இடங்களில் நடக்கிறது. ஆனால் இப்படித் தலையிடுவதால்தான் அவையெல்லாம் தடுத்து நிறுத்தப்படுகின்றன என்பது என்னுடைய சொந்த அபிப்ராயம். தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன். நகராட்சி மன்றங்களில் இந்தத் தீர்மானங்கள் வைக்கப்பட்டு, அவர்கள் அதைப் பரிசீலித்து ஒத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு கேட்டிருக்கிறது. கூடுமானவரையில் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று அங்கேயிருந்தும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு *15* ஆண்டு காலம்தான் தவணை. அதிலேகூட





ஒன்று கேட்டிருக்கிறார்கள். *3* வருடங்கள் முதலில் வட்டி இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் சரியானால், அதுபற்றி முதல்வர் அவர்களிடத்திலே கேட்டுத் தெரிந்து, அதையாவது செய்வதற்கு முயற்சி செய்யலாம் என்று கருதுகிறேன். தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திட்டத்தைக் கெடுத்துவிடாமலும், அந்த நகரத்திலே இருக்கிற நல்ல எண்ணம் கொண்ட மக்களை மாற்றிவிடாமலும், அந்த நகராட்சி மன்றம் எடுத்திருக்கிற முடிவுக்கு எதிர்மறையாய் இல்லாமலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலூருக்கு மானியம் கொடுப்பதாக இருந்தால், முதலில் அமைச்சர், மதுரைக்குக் கொடுத்துவிட்டுத்தான் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பட்டியலே என் கையில் இருக்கிறது. நேரம், காலம் கருதித்தான் நான் இதைக் குறிப்பிடவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவரவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொன்னபிறகு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) அதற்காக இன்னொரு கேள்வியா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை நான் கெடுக்காமல் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தைக் கேட்டுக்கொண்டு இருப்பவனே நான்தான். நெடுநாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிற திட்டம் இது. ஆலந்தூரில் இருக்கக்கூடிய மக்கள் மாநகராட்சியையொட்டி இருக்கக் கூடியவர்கள். என்னுடைய வேலூரிலே இப்போது வியாபாரம் படுத்துவிட்டது. மழையில்லாமல் விவசாயம் போய்விட்டது; அங்கிருக்கக்கூடிய மக்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கக்கூடிய காரணத்தாலேதான், மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்வது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் — நீங்கள் மதுரைக்கு மானியம் வாங்கிக்கொள்ளுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை — எங்களுக்கும் கொடுத்துவிட்டு, நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள். *30* கோடி ரூபாய் மானியம் கொடுத்துவிட்டீர்கள் என்றால், திட்டத்தை

[திரு. சி. ஞானசேகரன்] [2000 ஏப்ரல் 28

இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடித்துவிடக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அந்தத் திட்டத்தை எப்போது முடித்துக் கொடுப்பார்கள் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் திட்டத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்து இருக்கிறோம்; எப்போது முடித்துக் கொடுப்பீர்கள் என்று அவர் கேள்வி எழுப்புகிறார். நானும் எதிர்க்கட்சியிலே பல ஆண்டு காலம் இங்கே உட்கார்ந்து இருக்கின்றேன். இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் நான் சொன்னதே இல்லை. இப்போதுதான் திட்டத்தைப்பற்றிப் பேசினோம், அவர் இறுதியிலே கேட்கிற கேள்வி, இதை எப்போது முடித்துக் கொடுப்பீர்கள் என்பதாகும். இதற்கான பதிலை என்னால் எப்படிச் சொல்ல முடியும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்திருக்கவே வேண்டாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இருந்தாலும், நான் ஒன்றைச் சொல்லிவிடுகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிந்துகொள்வதற்காகச் சொல்கிறேன். இவர் இப்படி ஒரு கோரிக்கையை வைத்து, என்னை அழைத்து, அவர், அதுபோல முடியுமா என்று கேட்க ஆரம்பித்தால் இங்கு 10, 20 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும். நிச்சயமாக அது என்னால் இயலாது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## 4. தகவல் கோரல்

### (அ) அரசு மருத்துவமனை மருந்தாளுநர்கள் வேலை நிறுத்தம்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற மருந்தாளுநர்கள் கடந்த 17-4-2000 தேதியிலிருந்து கிட்டத்தட்ட 11 நாட்களாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய 5 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருக்கிற காரணத்தால், பல அரசு மருத்துவமனைகளில் Operations நடக்கவில்லை, நோயாளிகளுக்கு மருந்துகள்கூட ஒழுங்காகக் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.



2000 ஏப்ரல் 28] [திரு. பி.ஆர். சுந்தரம்]

*முற்பகல் 11-05*

26 ஆம் தேதியிலிருந்து அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த உண்ணாவிரதம் மூன்றாவது நாளாக நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒரு நபர் மயக்கமடைந்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் வந்திருக்கிறது. அவருடைய நிலைமைகூட மிகவும் மோசமாக இருக்கிறது என்ற தகவலும் வந்திருக்கிறது. ஆகவே சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இல்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிற காரணத்தால், அந்த மருந்தாளுநர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்தி, அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்யவேண்டுமென்று உங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு யாரும் பதில் சொல்லத் தேவையில்லை. (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் சொல்லி ஆயிற்று. என் அனுமதி இல்லாமல் பேசிவிட்டீர்கள். நான் அதைக்கூட அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவில்லை. உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்கள் அனுமதியோடுதான் பேசினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள், பேசப் போகிறேன் என்று அறிவிப்பு கொடுத்துவிட்டுப் போய்விட்டீர்கள். நீங்கள் பேசி ஆயிற்று, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி ஆயிற்று, உட்காருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பேன். நீங்கள் இதற்கு மேலே பேசினால், அதை நான் அவைக் குறிப்பிலிருந்து எடுப்பேன், உட்காருங்கள்.

### (ஆ) பொது விநியோக உணவுப் பொருட்கள் விலை உயர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களை மிகவும் பாதிக்கக்கூடிய விஷயம், பொது விநியோகத் துறையிலே இருக்கக்கூடிய உணவுப் பொருள் வழங்குகின்ற விஷயமாகும். நேற்று மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழக

உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. விடுதலை விரும்பி அவர்களும், திரு. வி.பி. துரைசாமி அவர்களும் உணவுப் பொருள்கள் விலை உயர்வு குறித்து மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய உணர்வு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருப்பது, உண்மையிலேயே பாராட்டத்தக்க அம்சம் ஆகும். என்றாலும்கூட, அந்த உணர்வு முழுமையான, உண்மையான உணர்வு என்ற பட்சத்திலே நம்முடைய அவையிலே அதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்ப அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தேவையில்லாத பிரச்சினை. பாராட்டுகின்ற மாதிரி தாக்குவது. நான் இதையெல்லாம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அப்படியானால், நீங்கள் பேசுவது உண்மையான உணர்வா? ** உட்காருங்கள்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி
### (ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

### அ) கோரிக்கை எண் 32—வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, *2000-2001* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *32*-வீட்டு வசதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. *67,47,40,000*/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1934*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **"வேலூர் மாவட்டம், வேலூரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட** வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4153*, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **"ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி கிராமத்தில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டி விநியோகிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட** வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4596*, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1662*, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **"திருப்பூர், முதலிப்பாளையம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் விநியோகிக்க இருக்கும் வீட்டுமனைகளை விரைந்து வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட** வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய *32* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000*/-ல் ரூ. *100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3585*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி, கூத்தாநல்லூர் நகராட்சிப் பகுதியில் அரசுப் பணியாளர்களுக்குப் போதிய வாடகைக் குடியிருப்புகள் இல்லாததால் புதிதாக அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2217, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதியில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2612, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1245, திரு. க. மணிவர்மா.



**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கிராமப்புறங்களிலும் வீடு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3512, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2746, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக கிராமப் புறங்களில் வீடு கட்ட வழங்கப்படும் கடன் தொகையை ரூ. 30 ஆயிரமாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3107, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, "To discuss the need to provide developed housing plots to the public at Hosur through Tamil Nadu Housing Board". I move—

"That the sum of Rs.67,47,40,000/- allocated under Demand No.32-Housing be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3730*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டையில் புதிய வீட்டு வசதி வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2397*, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1737*, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நில உடைமையாளர்களுக்கு சந்தை விலை கொடுத்து நிலத்தைப் பெற்று, தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து அவற்றை மேம்படுத்தப்பட்ட மனைகளாகப் பிரித்து பயனீட்டாளர்களுக்குக் குறைந்த விலையில் பகிர்ந்தளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3258*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் அனைத்துத் தர மக்களுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4151*, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கிராமப் பகுதிகளிலும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2818*, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *67,47,40,000/*-ல் ரூ. *100/*- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2922*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பாபநாசம் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவது பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4223, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1752, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வில்லிவாக்கம் தொகுதி, நெசப்பாக்கம் ஜெயலலிதா நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,47,40,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 33 — நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33- நகர்ப்பகுதி வளர்ச்சி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 38,51,22,00/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1917, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரைச் சுற்றி வேறு ஒருவழிச் சாலை பாலாற்றையொட்டி ஏற்படுத்தி Ring road அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்." (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கொஞ்சம் ஏமாந்தால் இந்த நாற்காலியிலே உட்கார்ந்துவிடுவீர்கள்போல் இருக்கிறது. வெட்டுத் தீர்மானம் எண் 4155, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1661, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப் பகுதிகளில் அமைந்துவிட்ட அங்கீகாரமற்ற வீட்டுமனைப் பிரிவுகளை அங்கீகரித்து இனி அங்கீகாரமற்ற மனைப் பிரிவுகள் உருவாகாதவாறு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3583, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2221, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சிப் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2618, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஜம்பை, சலங்கபாளையம், ஆப்பகூடல், ஒலகடம் ஆகிய பேரூராட்சிகளில் மிகவும் மோசமாக உள்ள சாலைகளைச் செப்பனிட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3513, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 38,51,22,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3106, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, "To discuss about the policy matter" I move—

"That the sum of Rs.38,51,22,000/- granted under Demand No.33 - Urban Development, be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2398, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1739, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப்பகுதிகளில் கழிவுப் பொருட்கள் எரிக்கப்பட்டு சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3190, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் விற்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2912, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,51,22,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) பொது விநியோக உணவுப் பொருட்கள் விலை உயர்வு—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order கேட்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே*** என்கிற வகையிலே நீங்கள் ஒரு குறிப்பைச் சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ***என்று கேட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** உங்களுடைய வாயிலிருந்து அப்படி வரக்கூடாது. ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு என்ன வார்த்தை போடலாம்? சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி எடுத்துவிடுகிறேன்.

---

@ 163 முதல் 214 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 - வீட்டு வசதி—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 33 - நகர்ப்பகுதி வளர்ச்சி—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32-வது எண் வீட்டு வசதி மானியக் கோரிக்கையானது உள்ளாட்சித் துறை, குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதித் துறை, சென்னைப் பெருநகர் திட்டக் குழுமம் ஆகிய துறைகளோடு ஓரளவுக்கு சம்பந்தப்பட்டு இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆனால் சென்ற ஆண்டு வழங்கப்பட்டதைக் காட்டிலும் இந்த ஆண்டு 37 கோடி ரூபாய் குறைவாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்குண்டான காரணத்தை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தேசிய வீட்டு வசதிக் கொள்கையானது தனியார் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு உதவி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கையில் அமரவும். அமைதி காக்கவும். திரு. வி.கே. லட்சுமணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** தேசிய வீட்டு வசதிக் கொள்கையானது தனியார் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமேயொழிய அரசாங்கமே வீட்டைக் கட்டுகின்ற பணியிலே இறங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. நான் அதை உங்களுக்கு இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். "The Government has to create a facilitating environment for growth of housing activity rather than itself taking on the task of building" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே வீட்டு வசதி வாரியமானது 90 சதவீதம் வீடு தேவைப்படுகிற நலிந்த



பிரிவினருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிற பணியோடு நிறுத்திக் கொண்டு, நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற அந்தப் பணியினை தனியாரிடம் ஒப்படைப்பது நல்லது. அப்படி ஒப்படைப்பதால் அழகான, வலுவான நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தனியார் யாரும் முன்வராத காரணத்தால்தான் அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. இப்போது வீடுகளைக் கட்டுவதற்காக மனைகளாகக் கொடுக்கக்கூடிய அந்த நிலையையும் இப்போது வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-15*

**திரு. வி.கே. லட்சுமணன்:** அண்டை மாநிலமான கர்நாடகாவிலே B.O.T. முறையிலே இப்போது வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே அந்த முறையைத் தமிழக அரசும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் வசம் அதை ஒப்படைக்கின்றபோது அந்த வீடுகள் வலுவாகவும் அழகாகவும் இருப்பதாக நான் சொன்னேன்.

அண்மையிலே நம்முடைய பேரவை உறுப்பினர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற புதிய விடுதியைப்பற்றி பல சர்ச்சைகள் எழுந்தது உண்டு. இந்த விடுதியானது, 240 குடியிருப்புகளைக் கொண்டது. ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு குடியிருப்பும் 1,553 சதுர அடி கொண்டது. அரசாங்கம் இதற்காக செலவிடப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிற தொகை ஏறத்தாழ 47 கோடி ரூபாய். இதையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, ஒரு சதுர அடிக்கு 1,200 ரூபாய் என்று கணக்கு வருகின்றது. எனக்குத் தெரிந்த அனுபவம் உள்ள நல்ல பொறியியல் வல்லுநர்களைக் கேட்டது மட்டுமல்லாமல், நானே அந்த விடுதியை நேரிலே சென்று, அங்கே இருக்கிற விலையுர்ந்த பொருட்களை எல்லாம் பார்த்தேன். எவ்வளவு விலையுயர்ந்த பொருட்களை அங்கே நீங்கள் போட்டிருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக ஒரு சதுர அடிக்கு 800 ரூபாய்க்கு மேல் செல்வதற்கு வாய்ப்பே கிடையாது. ஏனென்றால், நிலம் இலவசமாகக் கிடைக்கிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கருத்தைச் சொல்லி, முதலமைச்சர் அதைப்பற்றி அறிக்கையாகக்கூடக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே 240 குடியிருப்புகளின் மொத்தப் பரப்பு 3 இலட்சத்து 82 ஆயிரத்து 36 சதுர அடி. கட்டுமானச் செலவு சதுர அடிக்கு 567 ரூபாய் என்றால், வெறும் வீடுகள் மட்டுமல்ல; அங்கே Library, air-condition போன்ற பல்வேறு வசதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் சேர்த்தாலும் ஒரு சதுர அடிக்கு 567 ரூபாய்தான் வருகிறது.

அதுமட்டுமல்லாமல் இந்த விடுதியில், சாதாரணமான கட்டடங்களிலே இல்லாத சிறப்பு அம்சங்களாக சலவைக்கல், அலமாரிகளுக்கு மரக்கதவு அமைத்தல், வெளிப்புற அழகமைப்பு, சமையலறை மேடைக்குப் பளிங்குக் கற்கள், மின்விசிறிகள், மின் கருவிகள் போன்றவை நிறுவுவதற்காக 5.88 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் சேர்த்தால்கூட கட்டுமானச் செலவு சதுர அடிக்கு 720 ரூபாய்தான் வருகிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா வீடுகளுக்குமே கதவுகள் உண்டு; ஜன்னல்கள் உண்டு; அலமாரிகள் உண்டு. அந்தக் கணக்குகளை எல்லாம் சேர்த்துத்தான் மாண்புமிகு திரு. லட்சுமணன் அவர்கள் சொல்கிறார்கள். எனவே சதுர அடிக்கு 1,500 ரூபாய் என்பது உலகத்திலேயே இல்லாத விலை; தமிழகத்திலே எந்தக் கட்டடத்திற்கும் அவ்வளவு விலை கிடையாது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதல்மைச்சர் அவர்கள் சதுர அடிக்கு ஆகிற செலவு என்று கணக்கிடுகிறபோது, மற்ற செலவுகளை எல்லாம் சேர்த்து—சதுர அடிக் கணக்கு அல்ல; Contract-ஏ வெவ்வேறு. ஒரே Contractor-ஆக இருந்தாலும்கூட, சதுர அடி கணக்குக்குச் சொல்லப்படுகிற தொகை மிகவும் குறைவு. அவர்கள் எல்லாவற்றையும் சேர்த்து உள்ள தொகையை வைத்து சொல்கிறார்கள்.

**திரு. ச. அழகிரி:** இப்போது சதுர அடிக்கு எவ்வளவு சொல்கிறீர்கள்? அரசாங்கத்தினுடைய கணக்கு என்ன?



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** சிறப்பு வசதிகள் எல்லாம் இல்லாமல் 567 ரூபாய்தான் ஆகிறது. சிறப்பு வசதி எல்லாம் சேர்த்து 720 ரூபாய் ஆகிறது. அது இல்லாமல், Cement சாலைகள் அமைத்தல், பூங்கா அமைத்தல், வங்கிக் கட்டடம் கட்டுதல், Generator அமைத்தல், Lift பொருத்துதல், தீயணைப்புச் சாதனங்கள் அமைத்தல், Furniture கொடுத்தல் ஆகியவையெல்லாம் சேர்த்து 7.85 கோடி ஆகிறது. ஆகவே, இந்தச் செலவு எல்லாம் 19.40 கோடி ஆகும். இவற்றையெல்லாம் சேர்த்தால் சதுர அடிக்கு 720 ரூபாய் 85 பைசாதான் ஆகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** உங்கள் துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் கொடுத்த குறிப்பை வைத்துக்கொண்டு...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் இந்த வீண் வேலையைச் செய்வது அவர்களுடைய அறிவுக்குப் பொருத்தமானது அல்ல.

முற்பகல் 11-20

**திரு. வி.கே. லட்சுமணன்:** இருந்தாலும்கூட இதையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்ததிலே, கண்டிப்பாக இதற்கு 1200 ரூபாய் ஆக முடியாது என்பதுதான் தெரியவருகிறது. நான் கேட்க விரும்புவது எல்லாம், இதற்கு ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. விசாரணைக் கமிஷன் தேவையில்லை. அந்தப் பொறியாளர்களை என்னிடத்திலே வரச் சொல்லுங்கள்; சபாநாயகர் இருக்கிறார்; புள்ளி விவரங்கள் இருக்கின்றன; கட்டப்பட்ட கட்டடம் இருக்கிறது; ஏற்கெனவே தந்த அறிக்கை இருக்கிறது. எல்லாவற்றையும் வைத்து அந்தப் பொறியாளர்களுக்கு உள்ளபடியே தெளிவு, அறிவு ஏதாவது இருக்குமானால், அவர்களை நிரூபிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக நாம் வீடு கட்டுகின்ற நேரத்திலே வீட்டிலே அலமாரி வைப்பதற்கு என்று பல நிலைகளிலே, அதற்கான கட்டட Contractor-கள் பணம் செலவு செய்வார்கள். அதுபோல வீடு கட்டுவதற்கு மற்றும் இதர வசதிகள் போன்றவற்றை எல்லாம் சேர்த்துதான் இந்த 720 ரூபாய் வந்திருக்கிறது என்று நாங்கள்

சொல்லியிருக்கிறோம். அதுதான் சரியான மதிப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்குத் தவறான தகவலைத் தந்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதுமட்டுமல்ல. இது சட்டசபை தொடர்புடைய ஒரு கட்டடம்; சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கட்டப்படுகிற கட்டடம். சபாநாயகர் பார்த்து அது சரிதானா என்று தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு கட்டடம். சட்டசபையிலே நமக்குத் தேவையான அளவுக்கு ஆய்வு செய்வதற்கு குழுக்கள் இருக்கின்றன. அந்தக் குழுக்களிலே வைத்து வரவு-செலவுக் கணக்கைப் பார்க்க நீங்கள் விரும்பினால், அந்தக் குழுக்கள் மூலம் பார்க்கலாம். சட்டசபைக்கு மேற்பட்டு, இதை ஆய்வு செய்யக்கூடிய தகுதி வேறு யாருக்கும் இல்லை. அதைத் தவிர, சட்டசபை சம்பந்தப்பட்ட உரிமையோடு கூடிய பிரச்சினை இது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடத்தைக் கட்டியிருப்பது Hindustan Steel Works Construction Limited. இது ஒரு மத்திய அரசினுடைய நிறுவனம். 4 பெரிய நிறுவனங்கள் - Larson and Toubro, East Coast Constructions, P.G. Sidke Construction, Hindustan Steel Works Construction Limited ஆகிய இந்த 4 நிறுவனங்கள் போட்டி போட்டு கொடுத்த tender-ல் மத்திய அரசு கட்டட நிறுவனம்தான் குறைந்த tender-ஐக் கொடுத்து, கட்டி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடத்தை அவர்கள் நேரடியாகக் கட்டவில்லை. பல பேருக்கு அவர்கள் தனியாக contract கொடுத்து இருக்கிறார்கள். இருந்தாலும்கூட நான் இதைச் சொல்வதற்குக் காரணம்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். யாருக்கு வேண்டுமானாலும் அவர்கள் Sub-tender கொடுத்ததாக இருக்குமானால், அது வேறு. நாம் ஏற்றுக்கொண்ட Contract-னுடைய எல்லையை மீறி, அவர்கள் எதைச் செய்தாலும் அதற்கு நாம் பொறுப்பல்ல. நம்முடைய Contract தொகை என்ன, எதற்காகத் தரப்பட்டது என்பதற்கான விவரங்கள், முழு விவரங்கள் அரசாங்கத்திடத்திலே இருக்கின்றன.



**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, generators, அலமாரிகள், Lawns, garden இவற்றையெல்லாம் கணக்குப் போட்டாலும்கூட ஒட்டுமொத்தமாக 29 கோடி ரூபாய்தான் வருகிறது; 30 கோடி என்று வைத்துக்கொண்டாலும், அரசு கொடுத்து இருக்கிற கணக்கிற்கும் இதற்கும்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, யார் வேண்டுமானாலும் கணக்கு போட்டுச் சொல்வது என்று சொன்னால், அப்புறம் அதற்கு முறையே கிடையாது. Estimates Committee இருக்கிறது. சபாநாயகர் மூலமாக Estimates Committee-யிலே வையுங்கள். அந்த Committee மூலமாக நீங்களே ஆய்வு நடத்துங்கள்; எதிர்கட்சித் தலைவரும் இருப்பார் என்று எதிர்பார்க்கிறேன்; உங்களுடைய கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களும் இருப்பார்கள். அந்த Estimates Committee ஆய்வு செய்து, தவறு என்று சொன்னால், அதற்குப் பின்னர்தான் நீங்கள் குற்றம் சொல்ல வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற சில மாதங்களுக்கு முன்பு சென்னைப் பெருநகர் திட்டக் குழுமம், Development Control Rules-க்கு விரோதமாகக் கட்டப்படுகிற கட்டடங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக முறைப்படுத்தவில்லை என்று சொன்னால், இடித்துவிடுவதாக அவர்கள் Notice அனுப்பியிருந்தார்கள். சென்னையிலே 7 இலட்சம் கட்டடங்கள் அதுபோல இருக்கின்றன. அதிலே பாதிக் கட்டடங்கள் முறைப்படுத்தப்படாமல் இருக்கின்ற கட்டடங்கள். அதிலே சுமார் 7 ஆயிரம் பேர்தான் முறைப்படுத்த விண்ணப்பம் செய்திருந்தார்கள். அதிலேகூட 500 பேர்கள்தான் முறையாக அதற்கு அபராதத் தொகையைக் கட்டியிருக்கிறார்கள். சில பேர் விண்ணப்பம் செய்யவில்லை; சில பேர் அந்த அபராதத் தொகையைக் கட்டவில்லை. நாங்கள் கேட்க விரும்புவதெல்லாம், ஒரு கட்டடம் கட்டி, அது D.C. Rules-க்கு விரோதமாக இருந்தால் 3 மாதங்களுக்குள்ளாக Notice அனுப்ப வேண்டும். 10, 15 ஆண்டுகளாக இந்தத் துறை Notice அனுப்பாத காரணத்தாலே அவர்கள் D.C. Rules-க்கு விரோதமாகக் கட்டடத்தைக் கட்டியிருக்கிறார்கள். எனவே அரசு அபராதத் தொகையை வசூலிப்பதிலே தோல்வியடைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆந்திர மாநிலத்திலே இப்படி வசூலிப்பதற்குப் பதிலாக ஆயிரம் சதுர அடிக்குள் இருந்தால் அதற்கு இவ்வளவு

அபராதம் என்றும், அதற்கு மேலே இருந்தால், இவ்வளவு அபராதம் என்றும் தனித்தனியாகப் பிரித்து lumpsum penalty போடுகின்ற காரணத்தினாலே அவர்களுக்கு அங்கே சுலபமாக வசூல் ஆகின்றது. நம்மைப் பொறுத்தமட்டில் இந்த regularisation scheme என்பது தோற்றுவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையால் அரசு இதற்கு என்ன செய்ய இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10, 15 ஆண்டுகளாக, நீண்டகாலமாக இவையெல்லாம் வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் அரசு இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்தது. ஹைதராபாத் நகரத்தைப் பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சியைப்போல ஒரு மாநகராட்சியோ அல்லது 'A' Grade என்ற அளவிற்குக் கிடையாது. இங்குதான் குழுமம் இருக்கிறது. அங்கு குழுமமே கிடையாது. மற்றொன்று. இங்கே விதிக்கப்பட்டிருக்கிற கட்டணத் தொகை பெங்களூரில் விதிக்கப்பட்டிருக்கிற கட்டணத் தொகைக்கு ஏற்புடையதாக இருக்கிறது. கட்டணத் தொகை அதிகமாக இருக்கிறது என்று சொல்லி, சில கட்டட வல்லுநர்கள் உயர் நீதிமன்றத்திலே விண்ணப்பித்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திலே இந்த வழக்கு இருக்கிற காரணத்தினாலேதான் இந்தப் பணிகளில் சிறிது தடை ஏற்பட்டு இருக்கின்றது. வழக்கு முடிந்த பிறகு நிச்சயமாக அனைத்துக் கட்டடங்களையும் வரன்முறைப்படுத்துகிற அளவிலே அரசு, இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் திட்டக் குழுமத்திலே D.C. Rules இருக்கின்றன. ஆனால் அதற்கு இணையான விதிகள் D.T.C.P. அலுவலகங்களிலே கிடைப்பது இல்லை. நான்கூட நேற்றைக்குத் தொலைபேசியிலே பேசியபோது அப்படிப்பட்ட விதிகள் இங்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதனுடைய விளைவு என்னவென்று சொன்னால், யாரேனும் ஒருவர் சென்னைக்கு வெளியிலே — கட்டடம் கட்ட வேண்டுமென்று எண்ணி கட்டடத்தைக் கட்டுகிறபோது அவர் இஷ்டம் போல் கட்டிவிடுகிறார்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், நானே நேரடியாகச் சொல்லி ஆங்கிலத்திலே மட்டுமல்லாது தமிழிலேயும் அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் நேற்று யாரிடம் கேட்டார், யார் இல்லை என்று சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியுள்ளதோடு, வரவேற்பறையிலே இதன் நகல்களை வைத்திருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறோம். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதிலே நான் தனிக் கவனம் செலுத்தினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த விதிகளையெல்லாம் கட்டுகிறவர்கள் புரிந்துகொள்கிற அளவிலே, எளிமைப்படுத்தி அச்சிடப்பட்டு புத்தகங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிகள் என்று நான் சொல்வது Building Rule அல்ல. Lay-out Rule. Lay-out Rule இன்னும் அச்சடிக்கப்படவில்லை. அதேபோன்று saleable copies எங்களிடத்தில் இல்லையென்று நேற்றைக்கு என்னிடத்திலே அந்த அலுவலர்கள் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம் ஒரு project தயாரிக்கிறபோது வெறும் Building Rule மட்டும் போதாது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Lay-out approval-க்கான விதிகளை வைத்துத்தான், அலுவலர்கள் Lay-out-ஐ approve செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நம்முடைய அரசு transparency அரசு என்று பேசுகிறோம். அந்த விதிகளை ஒரு புத்தகமாக அச்சடித்துக் கொடுத்துவிட்டால், அவர்கள் விதிகளுக்கு முரணாக நடந்துகொள்ள மாட்டார்கள். விதிகளையொட்டி நடந்துகொண்ட பின்னால் அபராதம் போடுவது என்பது தேவையற்றதாக இருக்கும். எனவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவுசெய்து, என்ன விதிகளை அரசு போட்டாலும் அதைப் புத்தகமாக அச்சடித்து விநியோகம் செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சென்ற முறை Apartment Ownership Act என்று ஒரு சட்டத்தினை நாம் இயற்றினோம். அந்தச் சட்டமானது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக Ownership Flat Act வேண்டுமென்று அன்றைக்கே நான் கேட்டிருந்தேன். அப்படி இல்லாவிட்டாலும்கூட, இரண்டையும் இணைத்து ஒரு Comprehensive Act-ஐ நாம் கொண்டு வந்தால், கண்டிப்பாக அதன் மூலமாக வீடு கட்டிக் கொடுக்கின்றவர்களுக்கும், வீட்டு உரிமையாளர்களுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

சென்னையிலே ஏறத்தாழ 40 சதவீத மக்கள் குடிசைப் பகுதிகளிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நாம் சட்டமன்றத்திலே சொன்னோம். புறம்போக்கு நிலத்தில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் பட்டா கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் புறம்போக்கு நிலமாக இருந்தாலும், கண்டிப்பாக நமக்கு பட்டா கிடைக்கும் என்று ஆவலோடு இருக்கிறார்கள். அந்த மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் சரியான குடிநீர் வசதி இல்லை, கழிப்பிட வசதியில்லை, சாலை வசதியில்லை. இப்படி பல்வேறு அடிப்படை வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுப்பதோடு மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், கர்நாடக அரசில் முத்திரைத்தாள் சட்டத்தை அடியோடு மாற்றியிருக்கிறார்கள் என்று. அதை நாமும் இங்கே கடைப்பிடிப்பதன் மூலமாக, இங்கே ஒரு குடும்பத்தின் மத்தியிலே சொத்துக்களைப் பரிமாற்றம் செய்கிறபோது, பாகப்பிரிவினை செய்கிறபோது அது மிக எளிதாக இருக்கும். அதனுடைய நகலை நான் ஏற்கனவே அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அப்படிச் செய்வதன் மூலமாக இந்த வீடு கட்டும் பணி மிக விரைவாக நடைபெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்றும் சொல்லிக் கொண்டு, கோவையில்.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறேன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவையிலே நிர்மலா கல்லூரி எதிரில் கல்லுக்குழி என்ற ஓர் இடம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. அந்த இடத்திலே வாழ்கிற மக்கள், தங்களுக்கு பட்டா வேண்டும், வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை அரசு வாங்கி அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தமிழக அரசு ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் மிகப் பெரிய திட்டத்தை குறிக்கோளாகக் கொண்டு நிறைவேற்றி வருவது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி இணையம், ஊரக வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்குத் தகுந்தமாதிரி வீடுகளைக் கட்டிக்கொடுத்து, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவு செய்து வருவது மிகவும் அற்புதமான செயலாகும்.

தேசிய வீட்டு வசதிக் கொள்கை அடிப்படையில் குறைந்த செலவில் பொருத்தமான கட்டடப் பொருட்களைக் கொண்டு சிறந்த தொழில் நுணுக்கத்துடன் வீடுகளைக் கட்டித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இவற்றைப் பூர்த்தி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமுதாயத்தில் அனைத்துத் தரப்பினரும் அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடன் வாங்கக்கூடிய விலையில் வீட்டு வசதி வாரியம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய

ஒன்றாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் முன்முகப்பு தோற்றங்கள் சிறந்த கட்டட வல்லுநர்களைக் கொண்டு சீரமைக்கப்பட்டு கட்டடங்கள் எல்லாம் இப்போது நல்ல தரமுள்ளதாக கட்டப்பட்டு வருகின்றன என்றாலும்கூட, கட்டடத்தினுடைய உட்புற அமைப்பு நல்லமுறையிலே finishing செய்து விற்றால் மற்ற தனியார் கட்டடம் கட்டுகின்ற கட்டுமான நிறுவனங்களோடு போட்டியிட்டு வாரியம் வியாபாரத்தைப் பெருக்க முடியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கட்டடத்திற்குப் பயன்படுகின்ற கட்டுமானப் பொருட்கள் அனைத்தையும் தரக்கட்டுப்பாடு பரிசோதனை செய்து அதைப் பயன்படுத்தினால் கட்டடங்கள் நல்ல வலுவுள்ளதாகவும் நீண்டகாலத்திற்கு உழைக்கின்ற வகையிலும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1970-71* ஆம் ஆண்டில் ரூ.*4.83* கோடியாக இருந்த வாரியத்தின் முதலீட்டுச் செலவு *1999-2000* ஆம் ஆண்டில் *250* கோடியாக உயர்ந்திருப்பது வாரியத்தினுடைய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். வாரியம் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.*30,001*-லிருந்து ரூ.*66,000* வரை உள்ளவர்களுக்கு ஒரு வீட்டின் விலை அதிகபட்சமாக 1¼ இலட்ச ரூபாய் என்று நிர்ணயித்து விற்பனை செய்து கொண்டிருக்கிறது. அவ்வாறு நிர்ணயித்துள்ள உச்சவரம்பைக் குறைத்து ரூபாய் *24,000*-லிருந்து ரூபாய் *48,000* வரை உள்ளவர்களுக்கும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மேட்டூர் தொகுதியில் பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான காலியிடங்கள் நிறைய இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் ஆர்ஜிதம் செய்து வீட்டு வசதி வாரியம் சார்பிலே வீடுகளைக் கட்டி—மேட்டூர் அனல்மின் நிலையத்தில் பணிபுரிகிற *3000*-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வீட்டு வசதியின்றி இருக்கிறார்கள்—நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் அனைவரும் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டத்தை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கொளத்தூர் ஒன்றியத்தின் தலைநகராக இருக்கிற கொளத்தூர் மிகப் பெரிய வணிக ஸ்தலமாகும். கர்நாடக



மாநிலத்திலுள்ள வணிகர்கள் எல்லாம் கொளத்தூரிலே வந்து வணிகம் செய்துவிட்டுச் செல்கிறார்கள். அந்தப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகளைக் கட்டி விற்பனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நங்கவள்ளி ஒன்றியத்திலுள்ள ஜலகண்டபுரம், வனவாசி மற்றும் நங்கவள்ளி பேரூராட்சிப் பகுதிகளில் நெசவாளர்கள் நிறைய வாழ்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், அவர்கள் அந்த வீடுகளை வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். எனவே அந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-35*

மேலும் பி.என். பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிப் பகுதிகளில் நிறைய அரசு நிலங்களை—அங்கே புறம்போக்கு நிலங்கள் உள்ளன— தனியார் ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி, அதிலே நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியில் இருக்கின்ற மால்கோ மற்றும் கெம்ப்ளாஸ்ட் நிறுவனங்களினுடைய ஊழியர்கள் பயன் அடையும் விதத்திலே—அவர்கள் எல்லாம் இந்த வீடுகளை வாங்கிக்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வாழ்பவர்களுக்கு, அரசுக்குத் தேவைப்படாத பட்சத்தில் அந்த நிலத்தை அவர்களுக்கே பட்டா வழங்கி விடலாம் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததால், மேட்டூர் நகரத்திலே மட்டும் சற்றேறக்குறைய *5,000*-க்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைகிறார்கள். இந்தத் திட்டத்தை அவர்கள் மிகவும் வரவேற்று வாழ்த்துகிறார்கள். *50* ஆண்டுகாலமாக பல்வேறு அரசியல் கட்சிகள் கோரிக்கை வைத்தும் நிறைவேற்றாத நிலையில் இந்தத் திட்டத்தை நம்முடைய முதல்வர் நிறைவேற்றிக் கொடுத்ததற்காக, அவர்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நம்முடைய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், இப்போது அகில இந்திய அளவிலே மிகப் பெரிய பாராட்டுப் பரிசைப் பெற்றிருக்கின்றது. அதற்காக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு என்ற அடிப்படையிலே, குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற முறையிலே, கூட்டுறவுத் துறையின் மூலமாக கடன் வசதி செய்யப்பட்டு, தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலேயும், குக்கிராமங்களிலேயும், சிறப்பான முறையில் இத்துறை இயங்கி வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், ஊரக வீட்டு வசதிக் கழகம் போன்ற இயக்கங்களின் சார்பாக, L.I.C., HUDCO, வணிக வங்கிகள் மூலமாக நிதி உதவிகளைப் பெற்று, தமிழகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலேயும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 874 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், வட்ட அளவிலே 195 சங்கங்களும், வீட்டு வசதி இணையத்தின் சார்பாக 726 சங்கங்களும் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. புதிய சங்கங்களையும், தொடர்ந்து திறந்துகொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக எனது அரவக்குறிச்சியில் இரண்டு வீட்டு வசதிச் சங்கங்கள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, அரவக்குறிச்சியிலே வட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கும், பள்ளப்பட்டியிலே கட்டட கூட்டுறவுச் சங்கத்திற்கும் அனுமதி அளித்து, திறந்து கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக தமிழக அரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு சிறிய வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரிகின்ற பணியாளர்கள் அரசு அலுவலர்களாகப் பணிபுரிகின்ற நிலையிலும், முறையான சம்பளம் எங்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை என்றும், கடன் வழங்குகின்ற தொகையினுடைய அடிப்படையிலே ரூ. 1 கோடி அல்லது ரூ. 2 கோடி என்று ஒதுக்கப்படுகின்ற நிதியினுடைய அடிப்படையிலே சம்பளம் வழங்கப்படுகிறது என்றும், சம்பளத்தை முறைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை குறித்த கோப்புகள் பதிவாளரிடத்திலே தேங்கியிருப்பதாக, கிடப்பில் இருப்பதாக அவர்கள் எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர், கலைஞர் எல்லாத் துறையில் உள்ள மக்களுக்கும்



எவ்வாறு குறைகளை நீக்கி அவர்களுக்கு நல்லது செய்து கொண்டிருக்கிறார்களோ அதேபோன்று சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறையில் பணிபுரிகின்ற அலுவலர்களுடைய சம்பளத்தை நீங்கள் கருணைகூர்ந்து முறைப்படுத்தித் தர வேண்டுமாய் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இப்போது தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலேயும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் சார்பிலே தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுத்திருக்கின்றீர்கள். என்னுடைய கரூர் மாவட்டத்திலே பொதுப் பணித் துறை தங்கும் விடுதியில் அமைச்சர் பெருமக்களோ அல்லது உயர் அதிகாரிகளோ வந்து தங்குகின்ற நேரத்திலே அங்கே 2 அறைகள் மட்டும் இருக்கின்றன. எனவே வீட்டு வசதித் துறையின் சார்பிலே அந்தப் பகுதியிலே கூட்டுறவு Housing Guest House ஒன்றை கட்டிக் கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே பணிவன்போடு கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரை வீட்டு வசதி இணையமானது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 22 வருடங்களாக தேர்தலே நடக்காது இருந்த இந்த இணையத்தின் தேர்தலைச் சிறப்பாக நடத்தினார்கள். கடந்த 31-8-1998 அன்று நடைபெற்ற தேர்தலிலே மரியாதைக்குரிய என்னுடைய அன்பு நண்பர் செங்கை சிவம் அவர்கள் இந்த இணையத்தினுடைய பெரும் தலைவராகப் பொறுப்பேற்றார்கள். அவ்வாறு அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு இணையத்தை மிகத் திறமையாக நடத்தி இப்போது ஏறத்தாழ ரூ. 2,700 கோடி கடன் வழங்கியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோது துறையினுடைய அமைச்சர் அவர்களையும் அந்த இணையத்தினுடைய தலைவர் அவர்களையும் ஏன், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும் இந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்திய கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் துணைத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள ஒரு செய்தியைப் பார்க்கின்றபோது நம்முடைய அரசுக்கும், அதனுடைய அமைச்சருக்கும், கழக அரசுக்கும், ஏன் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் பாராட்டுகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். பிறகு அகில உலகக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் தலைவராக பசிபிக், ஆசியா, கண்டத்திலே

தொழில் நுட்ப நிபுணர் குழு உறுப்பினராகவும் மாண்புமிகு செங்கை சிவம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இது தமிழக அரசுக்கும், கழகத்தினுடைய தலைவருக்கும் பெருமை சேர்க்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோன்று செங்கை சிவம் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அகில இந்திய அளவிலே சிறந்த முறையிலே செயல்பட்டதற்கிணங்க தொடர்ந்து 8 ஆண்டுகள் HUDCO விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே கிராமிய வீட்டு வசதி திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக HUDCO-வும் குஜராத் அரிஓம் ஆஸ்ரமும் முதல் பரிசாக ரூபாய் 1 இலட்சத்தை வழங்கியிருக்கின்றன. அந்த 1 இலட்சத்தைக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இணையத்தினுடைய பெருந் தலைவர் செங்கை சிவம் அவர்கள் வழங்கி தமிழக அரசுக்குப் பெருமை சேர்த்திருப்பதை எண்ணிப் பார்க்கின்றபோது உண்மையிலேயே தமிழகத்தினுடைய மக்கள் பாராட்டு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

மேலும் தமிழகத்திலே நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த உடனேயே கடன் தொகையைப் பெறுவதற்குரிய வழி வகைகளை இந்த இணையமும் கூட்டுறவுச் சங்கங்களும் செய்து கொண்டிருக்கின்றன என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் நம்முடைய தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு சிறப்பாக இணையம் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புறச் சங்கங்களுக்குத் தற்போது நிதி நிலையை உயர்த்தி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே எடுத்து வைத்ததற்கிணங்க ரூ. 7 இலட்சம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கிராமிய வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் உயர்ந்த பட்சமாக ரூ. 2 இலட்சம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பழுது பார்ப்பதற்காக, புதுப்பித்துக்கொள்வதற்காக 1 இலட்சம் ரூபாய் இப்பொழுது கடன் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வீட்டு வசதி வாரியத்தால் இப்போது கட்டப்பட்டு இருக்கின்ற வீடுகள் இன்னும் சில மாவட்டங்களிலே விற்பனையாகாமல் தேங்கியிருக்கின்றன. குறிப்பாக கரூரிலேகூட வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் இன்னும் விற்கப்படாமல் இருக்கின்றன. விண்ணப்பித்தவர்கள் விரைவிலேயே குடிபோவதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் முறையாக மேற்கொண்டு ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.





அதேபோன்று சென்னையிலே அடையாறு, மயிலாப்பூர், திருவான்மியூர் பகுதிகளிலே இருக்கக்கூடிய சிறுபான்மை மக்களாகிய இஸ்லாமிய மக்கள் 50,000 பேர்கள் வாழ்கின்ற பகுதிகளிலே கபரஸ்தான் (இடுகாடு) வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். சென்னை பெசன்ட் நகரிலே இந்துக்களுக்கான electrical சுடுகாடு ஒன்று இருக்கிறது. அதற்கு அருகிலே வீட்டு வசதித் துறையைச் சார்ந்த நத்தம் புறம்போக்கு 9 ground இடம் இருக்கிறது. அந்த இடத்தில் கபரஸ்தான் (அடக்க ஸ்தலம்) அமைக்க வேண்டும் என்று கேட்டு விண்ணப்பித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் (மணியடிக்கப்பெற்றது) பார்வை செய்து அதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமாய் சிறுபான்மைச் சமுதாய மக்கள் சார்பாக வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-20

அடுத்து, C.I.T. Nagar பகுதியில் 1956 ஆம் ஆண்டு ஏறத்தாழ 7,472 வீடுகளையும், வீட்டுமனைகளையும், குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** கடைசியாக ஒரேயொரு விஷயம், ஒரேயொரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** பேச்சை முடித்து விடுகிறேன், ஒரேயொரு நிமிடம் சார், ஒரேயொரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், போதும், இவ்வளவு நேரம் படித்தது போதும்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker, Sir, I thank you for giving me this opportunity to participate on behalf of the B.J.P. in the discussion on the Demand for Housing and Urban Development for the year 2000-2001. The slogan 'Providing a house for each family by this

Government' is really appreciable. By implementing this slogan slowly, this department will be able to provide houses for all the people in Tamil Nadu. The Government formulated a policy to provide houses for the poor, downtrodden, low income group, middle income group and higher income group. Tamil Nadu Housing Board was started about 39 years back and it was able to provide nearly 3,80,900 dwelling units so far. In 1970-71, the capital expenditure of the Housing Board was Rs.4.83 crores only. It has increased to 250 crores in the year 1999-2000.

Regarding rental quarters to the Government Servants; construction of about 2144 quarters is not sufficient. Because, lot of quarters are needed for Government Servants. So, it should be increased and police personnel also should be given preference to live in the rental quarters. Police people are not allotted these quarters. So, I request the Hon. Minister to consider and allot rental quarters to Sub-Inspectors and Head Constables also.

There is a good scheme in the Budget for the slum dwellers. Slum dwellers are given lot of preferences. For Economically Weaker Sections, nearly Rs.440 crores worth of flats have been constructed. For Low Income Group, nearly 1631 units, for Middle Income Group 4732 units and for Higher Income Group nearly 4165 units have been constructed and it is really appreciable.

For small and medium towns, nearly Rs.211.70 crores worth of 61 Housing Schemes generating nearly 11,011 houses and 10,324 developed plots is really appreciable. In addition to the Co-operative Housing, Rural Housing, Urban Housing Scheme and lot of other bodies are financing the construction of the houses in the State. At the same time, I am happy to note that they have provided nearly 4273 houses at a cost of Rs.4.03 crores in Periyar Memorial Samathuvapurams. I am really appreciating it, Sir, and I request the Hon. Minister to see that the quality those houses is also improved.

Slum Clearance Board was started by Hon. Chief Minister in 1970, because he knew the difficulties of the poor people. It is doing yeoman service to the poor people in the low lying areas. I appreciate that and I request this to be extended to the villages also. Whenever we go to the



interier south of Tamil Nadu, we see lot of huts, in every village. So, atleast this scheme be extended to the villages also.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கல்நார் வீடுகள் சென்னை மாநகராட்சி, மற்றுமுள்ள மாநகராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இதையும் வருங்காலத்தில் முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I am really very happy that fire proof housing scheme is to be extended to all the villages. They have constructed small huts. We can change it with asbestos sheets so that their life will be safe. So, I request the Hon'ble Minister to see that such types of houses are provided in all the areas.

Coming to the other point, Sir, I note that 25% of the Urban population are really living in the slum areas. To resettle slum families, the Board has sought the grant assistance of Rs.613.50 crores from the Centre. I hope the Centre will definitely give the money for the benefit of slum dwellers. I also come to understand that the Eleventh Finance Commission has been requested to sanction Special Problem Grant assistance to resettle 9,000 slum families. I hope our Honourable Prime Minster will definitely consider the request and see that it is sanctioned, Sir.

*பிற்பகல் 12-25*

Coming to the other point, the Honourable Chief Minister has announced that free pattas would be given to the houses constructed 10 years back. I come to understand that in the Municipal and Corporation areas, they are going to collect the cost of the land from those who are dwelling in Government lands. I request the Honourable Chief Minister to give exemption to the poor people from the collection of the cost of land in these areas.

Ring Road work was started 5 years back at Hosur, i.e. connecting N.H. 7, from Anand Electronics to Moolgondapalli, for about 8 K.Ms. But it was stopped abruptly. The congestion at Hosur is very much due to heavy vehicle traffic. I request you to see that the road work is started once again, Sir.

Lands are being taken by the T.N.H.B., from the people and they are not being utilised for the purposes of T.N.H.B. I come to understand that one gentleman has asked the Board to return about 13 cents of land given by him. It is said that it is only a triangle bit. The Board has also not utilised that land for their purposes. He has got another half acre of land adjacent to this one and he is not able to enter the other land. So, I request the Honourable Minister to see that such lands which are not utilised by the Housing Board, are returned to the owners. I request you to examine this particular case. (Gong was sounded)

I will conclude, Sir. Regarding Urban Development, Chennai is one of the Mega cities in India. In 1991, the population in Chennai was about 38 lakhs. By 2001, it will be about 70 lakhs. Lot of good Schemes have been drawn up to improve Chennai. For example, Outer Ring Road to Chennai, connecting all roads is being formed. Some other good schemes have also been announced in this Demand,Sir. I am really happy about them.

I would like to point out one thing about New Town Development Authority at Hosur. There is abnormal delay in giving house sites an developed plots to the weaker sections. You must have to fix some time-limit for approval of blue-prints. If they want to give notification, they must give within one month. Otherwise, it would deem to have been approved. I request you to fix a time-limit for approval of blue-prints, so as to avoid delay.

I come to understand that Rs.1½ crores is available under the Town Development Authority. I request you to see that the amount is diverted for development of towns, viz., for Stadium, Bus-stand, Roads and other Public facilities.

Before I conclude, I would like to say that the Housing Board is doing yeoman service to the people. I request you to extend these services to the huts which are there, by providing asbestos sheets so that they would be fire-proof houses. Thank you very much.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.



***திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கியமைக்கு உங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, தொகுதிக்கு ஏற்றாற்போல் கொஞ்சம் நேரமும் ஒதுக்கித் தர வேண்டுமென்று முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன். 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி ஒரு தலைக்கு 0.50 ஹெக்டேர் என்று இருக்க வேண்டிய இடம் தமிழ்நாட்டிலே 0.20 ஹெக்டேர் இருக்கிறது என்றும், இது 2001 ஆம் ஆண்டில் வளருகின்ற மக்கள் தொகைக்கேற்ப 0.17 ஹெக்டேராகக் குறையும் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அதற்குக் காரணம் நகர்ப்புறப் பகுதி அடைகின்ற வளர்ச்சியைப் பொறுத்து மக்கள் தொகைப் பெருக்கம் அதிகமாக நகர்ப்புற பகுதிகளுக்கு வந்துவிடுகின்ற காரணத்தினால், இந்த நிலை ஏற்பட்டு, நகர்ப்புறத்திலே 34 விழுக்காடு மக்கள் சேருகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா மக்களும் ஒரே பகுதியிலே வந்து சேர்ந்துவிட்டால் அவர்களுக்காக ஒரு திட்டம் தீட்டி, இந்தப் பெருநகரப் பகுதிகளுக்கு ஏற்றாற்போல் மற்ற இடங்களையும் வளர்ச்சியடையச் செய்வதன் மூலமாக, நகரப் பகுதிகளாக மாற்றுவதன் மூலமாக மக்கள் எல்லாம் ஒரு பகுதிக்கு வந்து சேருகிற நிலையை மாற்றுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12-30*

குறிப்பாக நம்முடைய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக மறைமலைநகர் பகுதியை, துணை நகர வளர்ச்சித் திட்டமாக எடுத்துக்கொண்டு 2,100 ஏக்கர் இடத்தை மேம்பாடு செய்வதற்காக கொள்கைத் திட்டமாக எடுத்துக்கொண்டு, 20 ஆண்டு காலத்திலே ஒரு இலட்சம் மக்கள் அந்த இடத்திலே வாழ்வதற்கான வாய்ப்பினை உருவாக்க, இதுவரையிலே 1,400 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்தி வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள் மற்றும் 2,032 குடியிருப்புகளை மேம்பாடு செய்ய 47.05 கோடி ரூபாய் செலவு செய்திருப்பது பாராட்டத்தக்கதாகும், இது கொள்கை விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டப்பட்டிருப்பதற்கு ஏற்றாற்போல் நடைமுறைப்படுத்தப் படுகிறது என்றால் அது மிகையாகாது. எனவே நம்முடைய வீட்டு வசதித் துறையின் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், வாரச் சந்தைகள் அமைக்கவும்,

அதைப்போல சீரமைக்கவும், உள்ளாட்சித் துறைக்கு 30 இலட்சம் ரூபாய் வரையிலே கடன் தருகிறார்கள்.

அடுத்து இருக்கிற சாலைகளை அகலப்படுத்துவதற்கும், புதிய சாலைகளை அமைப்பதற்கும் 1999-2000 ஆம் ஆண்டில் 20 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 433 இலட்சம் ரூபாய் தந்திருப்பது பாராட்டுக்குரியதுதான். உள்ளாட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் வீட்டு வரைபடத்தை அனுமதிக்கு அனுப்புகிறபோது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒரு பெரும் தொகையினை செலுத்துகின்றன. அதைப்போல் மனைப் பிரிவுகளுக்குக் கூட செலுத்துகின்றன. ஆனால் அதிலிருந்து குறிப்பிட்ட விழுக்காடு தொகை ஊராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு வந்து சேர்வதில்லை. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஊராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு உரிய விழுக்காட்டுத் தொகையை செலுத்துமேயானால், அவர்களுக்கு உரிய பங்குத் தொகை சேருமேயானால் ஊராட்சி, பேரூராட்சியினுடைய வளர்ச்சி அது பெரும் வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால், அதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து முதல்நிலை, இரண்டாம் நிலை நகராட்சிகள் பூங்காக்களைப் பாதுகாப்பது சம்பந்தமானது. மாலை நேரங்களிலே வயது முதிர்ந்தவர்கள் பொழுது போக்குவதற்கும், குழந்தைகள் விளையாடுவதற்கும், நூல் நிலையங்கள் இருக்கிற இடங்களிலே புத்தகங்களைப் படிப்பதற்கும் வாய்ப்பாக 2.50 இலட்சம் ரூபாய் அளித்து — அதிலே 50 சதவீதம் வீட்டுவசதித் துறையின் மூலமாகவும், 50 சதவீதம் நகராட்சியும் அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. — தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட எல்லையில் இருக்கிற கிழக்குத் தாம்பரத்தில் இருக்கிற ஒரு பூங்காவிற்கு அதை அளிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பிலே என்னுடைய தொகுதியிலே, திருமயிலையிலேயிருந்து வேளச்சேரி வரையிலும் 10.60 கிலோ மீட்டர் தூரம் வரையிலான இரயில் போக்குவரத்திற்கு ரூபாய் 733 கோடியில் நம்முடைய மாநில அரசு இரண்டு பங்கும், மத்திய அரசு ஒரு பங்குமாக செலவழித்து அந்தப் பணி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



அதைப்போலவே 250 கிலோ மீட்டர் நீளத்தில் எட்டு அரச் சாலைகள் 212.54 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பதற்கு நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு எனது பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போலவே நீர்வழிகள், வடிகால்கள் மேம்பாட்டுத் திட்டம், போன்றவற்றிற்காக 300 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இத்திட்டத்தில் பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆறு, கொசஸ்தலையாறு, அடையாறு ஆறு, வேளச்சேரி கால்வாய் போனறவை அடங்கியுள்ளன. இப்போது அங்கெல்லாம் ஓட்டு வங்கி இருப்பதால் வாங்கிய கடனைத் திருப்பித் தரவேண்டாம் என்றுகூட மறியல் செய்கிற ஜனநாயகம் முற்றிவிட்ட காலம் இது. எனவே இந்த ஆறுகளைச் சீரமைப்பதன் மூலமாக, நீர்வழிக் கால்வாய்களைச் சீரமைப்பதன் மூலமாக, மிகப் பெரிய சுற்றுச்சூழலை சீரமைக்கிற பணி நடைபெறுகிறது. அது மட்டுமல்ல. வெள்ளக் காலங்களிலே மக்கள் மத்தியிலே போய் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அதிகாரிகள், அரசுக்குச் செலவு உண்டு பண்ணுகிற அளவிலே அவர்களுக்கு நிவாரணங்கள் அளிக்க வேண்டும் அரிசி அளிக்க வேண்டும் வேட்டி, புடவை அளிக்க வேண்டும் பணம் அளிக்க வேண்டும் என்ற நிலையை மாற்றுவதற்கு இந்த ஆக்கிரமிப்புகள்தான் காரணம் என்பதால் இந்த நீர்வழிச் சாலைகளை எடுக்கிறபோது, நீர்வழிக் கால்வாய்களைச் சுத்தப்படுத்துகிறபோது, இங்கொன்றும் அங்கொன்றும் என்று இல்லாமல் அங்கு இருக்கிற மக்களை வேறு இடத்திற்குக் குடியமர்த்திவிட்டு மிகச் சீரிய முறையில் அதை அமைத்துத் தர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் சற்றொப்ப 6 கிராமங்கள் பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் இருக்கின்றன. பக்கிங்காம் கால்வாயில் பாதியை அடைத்துக்கூட வீடு கட்டி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏழைகளா என்று கேட்டால் அங்கே குடியிருக்கிற ஏழைகள்தான் அப்பாவிகள். அந்த வீடுகளைத் தடுத்து 500 ரூபாய் 600 ரூபாய்க்கு வாடகைக்கு விட்டிருக்கிற தாதாக்கள்தான் போராட்டம் என்று வருகிறார்கள். சில அரசியல் தலைவர்களை அணுகுகிறார்கள். அவர்கள் ஊர்வலங்கள் வருகிறார்களே தவிர, அங்கே குடியிருக்கிற மக்களுக்கு எடுத்துச் சொல்லி, நாம் மாற்று இடம் மாற்று வீட்டு வசதி தருவோம் என்று சொன்னால், அவர்கள் அங்கு செல்லத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

அடுத்து மாமல்லபுரத்தில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பாக வளர்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, Master Plan போட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அது சுற்றுலா மையம் என்கிற காரணத்தால் மக்கள் வருகிறார்கள். அங்கே உள்ள பேருந்து நிலையம்கூட வசதியாக இல்லை. அதையும் செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதித் துறையின் மூலமாக ஏழைகளுக்கு ரூ.12,000 முதல் ரூ.25,000 வரையிலே கடன் தருவதற்குத் திட்டம் கொண்டுவந்தோம். கடந்த ஆண்டு முதல் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தக் கடன் தருவதை நிறுத்திவிட்டிருக்கின்றன. அதை நம்பி basement போட்டவர்கள் எல்லாம் அதோடு நின்றுகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மனைகள். வீட்டு வசதித் துறையாக இருந்தாலும், குடிசை மாற்று வாரியமாக இருந்தாலும் மனைகளைப் பிரித்து அவற்றை மக்களுக்கு குறைந்த விலையில் விநியோகிக்கிறோம். நடுத்தர மக்களுக்கு அதற்கேற்றவாறு விலை போட்டு விநியோகிக்கிறோம். அப்படி விநியோகிக்கிற நேரத்தில் அந்த இடத்தை மேம்பாடு செய்கிறோம். Infrastructure வசதி எல்லாம் செய்து கொடுக்கிறோம். ஆனால் நாம் வாங்குகிற கடனுக்கு பணத்தை செலவழித்தாக வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த இடத்திலே சாலைகள் அமைக்கிறோம், கால்வாய்கள் அமைக்கிறோம், மரங்களை நடுகிறோம். அப்படி மேம்பாடு செய்ததற்குப் பின்னாலே வாங்கியவர்கள் அங்கே வீடு கட்டிக்கொண்டு குடி வருவதற்குப் பல நாட்கள் ஆகின்றன. அப்படி ஆகின்ற காரணத்தாலே, உள்ளாட்சி மன்றங்களுக்கு அவை ஒப்படைக்கப்படுவதில்லை. அப்படி ஒப்படைக்கப்படாமல் இருந்துவரும் குடியிருப்புகளுக்கு சாலைகள் இருப்பது இல்லை. வீட்டு வசதித் துறையையோ, குடிசை மாற்று வாரியத்தையோ கேட்டால் நாங்கள் சாலைகளுக்காக பணத்தைச் செலவழித்துவிட்டோம்;. வாங்கிய கடனை அடைத்துவிட்டோ;. எனவே, எங்களால் முடியாது என்கிறார்கள். ஆனால் உள்ளாட்சி மன்றங்கள் எங்களுக்கு சாலையை நல்ல முறையில் ஒப்படைத்தால்தான் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும் என்று சொல்கிறார்கள். நம்முடைய வணக்கத்திற்குரிய சென்னை



மாநகராட்சியினுடைய மேயர் அவர்களும் நானும் 154-வது வட்டத்திலே பெரியார் நகர் என்ற பகுதிக்கு மக்கள் குறை கேட்கச் சென்றிருந்தோம். அந்த நகர் சற்றொப்ப 25 ஆண்டுகளாக இருக்கிற நகர். நம்முடைய குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக அதை ஏற்றுக்கொண்டு கொஞ்சம் அபிவிருத்தி செய்தார்கள். ஆனால் அந்தப் பகுதியை மாநகராட்சிக்கு ஒப்படைக்கவில்லை. அப்படி ஒப்படைக்காத காரணத்தால் இதுவரை மாநகராட்சி எந்தவிதமான பணியையும் அங்கே செய்ய முடியாத ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. (மணியடிக்கபெற்றது)

ஐந்து நிமிடங்கள்கூட நான் பேசவில்லை. என் தொகுதிப் பிரச்சினைக்கே நான் வரவில்லை. நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பாதாள சாக்கடைத் திட்டத்தை முதலில் எடுத்துக்கொள்ளுங்கள், மற்றவற்றைப் பிறகு பார்க்கலாம் என்று சொல்லி, பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றியாகிவிட்டது. ஆனால் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு வெட்டுகின்ற பாதை கட்டணமாக சென்னை குடிநீர் வடிகால் வாரியம் தந்திருக்கிற பணத்தையாவது நீங்கள் மாநகராட்சிக்குச் செலுத்துவதன் மூலமாக மாநகராட்சி அதை மேம்பாடு செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப்போல, வழக்கு மன்றங்களிலே வழக்குத் தொடுத்துள்ள மனை உரிமையாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வருகின்றபோது விலை ஏற்றப்படுவது உண்மைதான். அந்த விலையைக்கூட கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு நீங்கள் வட்டியும் கூட்டு வட்டியும் போட்டிருக்கிறீர்களே, அதைத் தள்ளுபடி செய்தால், கோடிக்கணக்கான ரூபாய் வருமானமாக வரும். என்னுடைய தொகுதியில்கூட திருவள்ளுவர் நகர் பகுதியில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதைப்போல குடிசை மாற்று வாரியத்திலே பல இடங்கள் இருக்கின்றன. கக்கன் நகர் இருக்கிறது, கொட்டிவாக்கத்தில் எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதி இருக்கிறது, புழுதிவாக்கம் பகுதி இருக்கிறது, பீர்க்கங்கரணை பகுதி இருக்கிறது, கோவிலம்பாக்கம் பகுதி இருக்கிறது. அங்கெல்லாம் பணம் செலுத்துவதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வட்டியும், கூட்டு வட்டியும் கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். நான் போய்க் கேட்டால் 'NABARD'-க்கு நீ வட்டி கொடுப்பாயா என்று கேட்டார்கள். வட்டியை நான் கொடுக்கப்

போவதில்லை —NABARD-க்கு என்பது உண்மைதான். ஆனால், வட்டி தராத காரணத்தால் அந்தக் குடியிருப்பைக் காலி செய்ய முடியுமா என்று கேட்டால், அதை இந்த அரசு காலி செய்யாது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 ஆண்டு போனால் சொந்தமாக ஆக்கிவிடுவார். அப்படிப்பட்ட மனோபாவம் படைத்தவர் நம்முடைய முதல்வர். ஏழை எளியவர்கள்மீது அக்கறை கொண்டிருக்கிற முதல்வர். ஆகவே நீங்கள் வட்டியை மட்டும் தள்ளுபடி செய்துவிட்டு கடனை மட்டும் கட்டவிட்டால் நாளை முதல் அரசு செலுத்துகிற வட்டி மிச்சப்படும் அல்லவா? எனவே இன்றுவரை இருக்கிற வட்டியைத் தள்ளிவிட்டு, அந்த முதலை மட்டும் பெறுவதன் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாயைப் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

மிகவும் இயற்கை எழில் நிறைந்த பகுதி ஒட்டியம்பாக்கம் மலை, ஏரி, இடையில் இருக்கிற சமவெளிப் பகுதி அது. 77-லிருந்து 90 ஏக்கர்வரை பரப்புள்ள அரசுக்குச் சொந்தமான பகுதி. அதை ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்பாக வீட்டு வசதித் துறையோ, குடிசை மாற்று வாரியமோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே நான் இந்த அவையில் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எங்கெல்லாமோ போய் மனையை வாங்கிவிட்டு, வழக்கு மன்றத்திற்குச் செல்வதைவிட, மிகச் சிறந்த சமவெளிப் பகுதியாக இருக்கிற, இயற்கை எழில் கொஞ்சும் அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். கொட்டிவாக்கம் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மனைப் பிரிவுகள் அமைக்கப்பட்ட இடத்திலே ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொது இடத்தை ஒருவர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார். அதற்கான வரைபடங்களை எல்லாம் நான் அதிகாரிகளிடத்திலே தந்திருக்கிறேன். ஆனால் இதுவரை அந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு அந்த ஆக்கிரமிப்பை உடனடியாக அப்புறப்படுத்தி, அந்த இடத்தை பொது மக்கள் உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து கண்ணகி நகர் என்ற பகுதியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3050 குடியிருப்புகளை நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவு நாளிலே திறந்து வைத்தார்கள். அந்த இடத்திலே 4-வது வகுப்பு வரையிலே படிக்கக்கூடிய பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கிருக்கிற மக்கள் குறைந்தபட்சம் எங்களுக்கு 6-வது வகுப்பு வரையிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த வசதியை நீங்கள் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே மனைகளைப் பிரிக்கின்றபோது, வீடுகளை அளிக்கிறபோது, அந்த மக்களுக்கு உரிய முறையிலே எடுத்துச் சொல்லி, வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்றால் 'வழக்கு மன்றத்திலே இருக்கிறது' என்று அப்போதே எடுத்துச் சொல்ல வேண்டும்'. —agreement-ல் கையெழுத்து போடும்போது பார்க்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதோடு, மனைப் பிரிவுகளை அமைக்கிறபோது, அவற்றை அப்போதைக்கப்போது உள்ளாட்சி மன்றங்களுக்கு நீங்கள் ஒப்படைப்பு செய்வதன் மூலமாகத்தான் வளர்ச்சி அடைய முடியும். அந்த முடிவுகளை எடுத்து உள்ளாட்சி மன்றங்களுக்கு அவற்றை ஒப்படைக்க வேண்டும். இதுவரை ஒப்படைக்காமல் இருப்பவற்றையும் ஒப்படைக்கக்கூடிய வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**HONOURABLE DEPUTY SPEAKER:** Tmt. Anne D' Monte.

***TMT. ANNE D' MONTE:** Hon. Deputy Speaker, Sir, there is just one point I would like to raise today regarding the plea for housing to the Anglo Indian community. On few occasions I have raised this plea, but no action whatsoever has been taken so far. I have not had any positive reaction from the Government as regards my plea for housing for this community.

The housing problem of the Anglo-Indian Community is very critical. There are 500 families who live in thatched hutments and are unable to pay high rents. They are at the mercy of landlords who demand an advance between Rs. 5,000/- to Rs. 10,000/-. I have already made this appeal suggesting the allotment of tenements from Slum Clearance Board. Almost everyday people belonging to this community are begging for a place to stay. Is it not possible for this Government to allot at least 5%

[Tmt. Anne D' Monte] [2000 ஏப்ரல் 28

of the tenements constructed, to this community? I make this earnest appeal with the hope that at least now the Government will respond and make available slum tenements. My suggestion earlier on for setting up an Anglo-Indian Colony could not materialise due to non-availability of land. Wherever I tried to locate the land, it was not made available for several reasons. My only hope is in getting a quota of tenements which they need immediately. I am not in any way exaggerating when I say that this is a very pressing need. I request the Government to come to the aid of this small minority community. I would be completely indebted if housing is provided to my community.

Thank you, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

*பிற்பகல் 12-45*

***திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியங்களின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இந்தச் சிறப்பான திட்டத்தை உருவாக்கித் தந்தார்கள். அந்த அடிப்படையில் என்னுடைய பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக பல வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியிலே அன்பு நகர், பெருமாள்புரம், பொதிகை நகர், தாமிரபரணி காலனி, திருநகர் ஆகிய 1 முதல் 5 phases, அதைப்போல, வி.என். சத்திரம் கிராமத்தில் Stage 1, Stage 2, Stage 3, அதைப்போல phase 7-ல் பொன்விழா நகரும் உருவாகி இருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டங்களைப் பொறுத்தமட்டில் இப்போது phase-5-ல் இருக்கக்கூடிய திருநகர் என்கிற பகுதிக்கு 1993 ஆம் ஆண்டு 24 ஏக்கர் நிலம் தனியாரிடத்திலேயிருந்து கைப்பற்றப்பட்டது. அப்படி கைப்பற்றப்பட்ட நேரத்தில் இரண்டு condition-கள் சொல்லப்பட்டன. அது தனியாரிடத்திலே வாங்கப்பட்ட காரணத்தால், 5 ஆண்டுகளுக்குள் அதனுடைய வழக்குகள் முடிக்கப்பட்டு ஒரு தொகை கட்டப்பட வேண்டும் என்றும், இந்த வழக்குகளைப் பொறுத்தமட்டில் இப்பொழுது



2000 ஏப்ரல் 28] [திரு. முகம்மது கோதர் மைதீன்]

நிர்ணயித்திருக்கிற தொகையைவிட ஒரு கூடுதலான தொகையைக் கட்ட வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. அதிலே 5-1/2 cent நிலம் ஒரு வீட்டுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்த 5-1/2 cent நிலத்திற்கு 7,200 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. மேம்பாட்டுச் செலவு என்கிற அடிப்படையில் 22,200 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆக, இந்த இரண்டையும் சேர்த்து 29,400 ரூபாய் 5-1/2 cent நிலத்திற்கென்று 1993 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இப்போது வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அங்கே இருக்கக்கூடிய அந்த வீட்டிலே வாழக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய அறிவிப்பில் நீங்கள் 4,49,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியிலே ஒரு பழமொழி உண்டு. 10 வட்டிக்கு யாராவது அவசர நிமித்தம் காரணமாக ஒருவரிடத்திலே கடன் வாங்கினால், யாரிடத்திலே வாங்கியிருக்கிறார் என்று கேட்பார். '10 வட்டிக்காரன் இடத்திலே நான் வாங்கியிருக்கிறேன்' என்று சொன்னால், 'நீயும் போய், உன்னுடைய சொத்தும் போய்விடும்' என்று சொல்வார்கள். அதைவிட அதிகமான நிலையிலே அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு 29,400 ரூபாய் என்று முதலிலே சொல்லப்பட்டதற்குப் பின்பு, தற்போது 4,49,000 ரூபாய் 5-1/2 cent-க்குக் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல ஒவ்வொரு stage-லும் இருக்கின்றவர்களுக்கு 5 இலட்சம், 3-1/2 இலட்சம், 7 இலட்சம் ரூபாய் என்று இப்போது அதிகமான தொகை நிர்ணயிக்கப்பட்டிருப்பது என்பது, நியாயத்திற்கும், தர்மத்திற்கும் மாறான செயல் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல வீட்டு வசதி வாரியத்தினரால் 1992 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட தாமிரபரணி காலனி என்கிற பகுதியிலே அதற்கான வழக்குகள் முடிக்கப்பட்டு இப்பொழுது தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு முதலிலே நிர்ணயம் செய்த விலையைவிட 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டு, அவர்களெல்லாம் நம்முடைய வாரியத்தின் சார்பாக நிர்ணயிக்கப்பட்ட தொகையைக் கொடுத்துவிட்டார்கள். கொடுத்துவிட்டதற்குப் பின்பு, அவர்கள் பத்திரத்தைக் கேட்கிறபோது, அதிகாரிகள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பத்திரங்களைக் கொடுப்பதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பத்திரங்களை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருநகர் பகுதிக்கு நிர்ணயித்திருப்பதுபோல Stage 1-லிருந்து 5 வரை உள்ள பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்களும், வி.என். சத்திரத்திலே 1, 2, 3 பகுதியிலே உள்ள மக்களும், பொன்விழா நகரில் இருக்கக்கூடிய மக்களும் இப்படிப்பட்ட நிலைமைகள் தங்களுக்கும் உருவாகிவிடுமோ என்கின்ற அச்சத்தில், பாளையங்கோட்டையில் வீட்டுவசதி வாரியத்தில் வீடு வாங்கி இருக்கின்றவர்களெல்லாம் பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளிலெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும். நியாயத்தின் அடிப்படையில் பார்க்க வேண்டுமென்று சொன்னால், 29,400 ரூபாய் என்று இருப்பதை இன்னும் 10%, 20% கூட்டினால் அது நியாயம். ஆனால் அப்படியில்லாமல் 29 ஆயிரத்து 400 ரூபாய்க்குப் பதிலாக அவர்கள் 4,49,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இதனை அவர்கள் கட்டவில்லையென்று சொன்னால், '18 சதவீதம் வட்டியோடு உங்களிடத்திலேயிருந்து நாங்கள் வசூலிப்போம்' என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், இப்படிப்பட்ட ஒரு கடுமையான நிலையிலே நாங்கள் பணம் செலுத்த முடியாதவர்களாக இருக்கிறோம்; ஆகவே நாங்கள் செலுத்திய பணத்தை அரசாங்கம் தந்துவிட்டால் நாங்கள் அந்த வீடுகளைக் காலி செய்துவிட்டுச் செல்கிறோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் எடுத்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

இன்னும் ஒன்று. 1993-வது ஆண்டு திருநகருக்காக நிலத்தைக் கையகப்படுத்தும்போது அதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட தொகை 300 ரூபாய். (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசுக்கு எந்தவிதத் தகவலும் இதுவரை வரவில்லை. அரசுக்கு அவர்கள் முறையீடு செய்தால் நிச்சயம் இதுகுறித்து ஆராய்ந்து தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீட்டு வசதி வாரியத்தினுடைய அதிகாரிகளால் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த notice கூட என்னிடத்திலே இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்னும் ஒன்று. அந்த இடத்தைக் கையகப்படுத்தும்போது அரசின் சார்பாக அதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையே 300 ரூபாய்தான். 5 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கை முடித்திருப்பார்களேயானால் ஓரளவிற்கு நியாயமான தொகையை அந்த நிலத்தினுடைய உரிமையாளருக்குக் கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் நான் கேள்விப்பட்டவரை, வழக்குகள் எல்லாம் நிலுவையில் இருக்கின்றபோதே வாரியத்தின் சார்பாக இப்படி 4,49,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால், அது தனியார்களை ஊக்குவிப்பதற்காக அதிகாரிகள் செய்யக்கூடிய ஒரு தவறான காரியம் என்று அங்கே இருக்கக்கூடிய மக்கள் நினைக்கிறார்கள். ஆகவே என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய அந்த மக்களுடைய நியாயமான கோரிக்கைகளை தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of clarification. Chennai Metropolitan Development Authority ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கிற கட்டடங்களை முறைப்படுத்துவதற்காக ஒரு திட்ட அறிக்கையைத் தயார் செய்து அதன் மூலமாக எந்தெந்தக் கட்டடங்கள் முறையில்லாமல் கட்டப்பட்டிருக்கின்றனவோ அவற்றுக்கு ஒரு தண்டனைத் தொகையைப் போட்டிருக்கிறார்கள். அதைப் படித்துப் பார்க்கிறபோது ஆச்சரியமாக இருக்கிறது. இது சரிதானா என்பதனை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக, மேற்கு மாம்பலத்திலே கதவு எண் 14, சீனிவாசப் பிள்ளை தெருவில் 468.09 SQ. metre building deviation-ல் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லி அதை முறைப்படுத்துவதற்கு, regularise செய்வதற்கு 43,29,800 ரூபாயை தண்டனைத் தொகையாகப் போட்டிருக்கிறார்கள். கட்டடம் 4600 சதுர அடி என்று வைத்துக்கொண்டால், ஒரு சதுர அடிக்கு

500 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும்கூட, மொத்த மதிப்பீடு 23 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. கட்டடத்தினுடைய மதிப்பே 23 இலட்சம் ரூபாய் வருகிறபோது அதனை முறைப்படுத்துவதற்கு 43,29,800 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால், துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஏதாவது யோசனை செய்துதான் இவ்வாறு போட்டிருக்கிறார்களா? இப்போது கட்டட உரிமையாளருக்கு இரண்டே வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று, அவர் நீதிமன்றம் செல்ல வேண்டும். அல்லது கட்டடத்தினை C.M.D.A.-விடம் ஒப்படைத்துவிட வேண்டும். இதைத் தவிர அவருக்கு வேறு வழியே கிடையாது.

பிற்பகல் 12-55

எனவே உடனடியாக நான் இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்தினுடைய வழக்கு முடியட்டும் என்று சொல்கிறார்கள். அது முறையல்ல. நீங்களே இதைத் திரும்பப்பெற வேண்டும். இதைப்போன்ற பிரச்சினைகளுக்கு ஆந்திராவிலே ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அந்த அரசாங்கம் ஒரு வழிமுறையைக் கையாளுகிறது. அது என்னவென்றால், இதைப்போல முறைப்படுத்துவதற்கு ஆயிரம் சதுர அடிக் கட்டடம் என்றால், பத்தாயிரம் ரூபாய் கட்டினால் போதும்; முறைப்படுத்திக் கொடுத்துவிடுகிறோம் என்று அவர்கள் ஒரு சட்டம் வைத்திருக்கிறார்கள். அதைப்போல சட்டங்கள் எளிமையாக இருக்க வேண்டுமேயொழிய, கட்டடத்தினுடைய மதிப்பே 23 இலட்சம் ரூபாய் என்று வருகிறபோது, அதற்குத் தண்டனைத் தீர்வையாக 43 இலட்சம் ரூபாய் போட்டால் இதற்குப் பெயர்தான் துக்ளக் தர்பார் என்று சொல்வது. எனவே இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் உடனடியாக இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக கட்டி அனுமதி வழங்கப்படாமல் இருக்கிற கட்டடங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்ற உணர்வோடுதான், அதற்கு fine போடுவதைப் போலத்தான் இந்தத் தொகையை நிர்ணயித்திருக்கிறார்கள். இதை நிர்ணயிக்கிறபோது, இதற்கு முன்பு பெங்களூர் மாநகரத்திலே இருக்கிற அதே விதிகளைப் பின்பற்றி இங்கு நாம் இந்தக் கட்டணங்களை உருவாக்கியிருந்தோம். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல,



பல்வேறு கட்டட உரிமையாளர்களும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் அதிகமாக இருக்கிறது என்ற புகார்களை அடிக்கடி, இந்த அரசிடம் எடுத்து வைத்திருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்த சூழலில் எந்த முடிவும் எடுக்காத நிலை இருந்து வந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பல்வேறு இடங்களிலேயிருந்தும் இதுபோன்ற மனுக்களும், விண்ணப்பங்களும் வந்திருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்து, அதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். மேலும், எதிர்க்கட்சித் தலைவர், அதுபோல மற்ற கட்சி உறுப்பினர்களோடு சேர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலேயே வெகுவிரைவிலே ஒரு கூட்டத்தைக் கூட்டி, எந்த அளவிற்கு நாம் நிதியை நிர்ணயிக்கலாம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம் என்று முதல்வர் அவர்களும் அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆகவே வெகுவிரைவிலே இந்த நிதி நிர்ணயம் குறித்து முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றுமுள்ள உறுப்பினர்களைக் கலந்துபேசி, இதற்குரிய முடிவுகளை அறிவிப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காரியம் கெட்டுப்போக வேண்டுமென்றால், ஒரு Committee போட்டால் அது கெட்டுப் போகும் என்று சொல்வார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இல்லை, இல்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவரைவிட எங்களுக்கு இதிலே மிக்க அக்கறை இருக்கிறது. ஏனென்று சொன்னால், இது அரசாங்கத்திற்கு வருகிற வருவாய். 280 கோடி ரூபாய் போட்டு வரவில்லையே என்று வருகிற வருவாய். நாங்களும் அதிகாரிகளை முடுக்கிவிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். எப்படியும் இந்த நிதி அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்பதிலே மிகுந்த கவனத்தோடு முதல்வர் அவர்களும் இருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து பெங்களூரிலே இருக்கிற விதிமுறையை நாம் பின்பற்றினோம். இதிலே சில சங்கடங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்களும் மற்றவர்களும் சுட்டிக்காட்டியிருக்கிற சூழலில் — Committee போடுவதாக இல்லை — ஒரே நாளிலேகூட உட்கார்ந்து உடனடியாக,

வெகுவிரைவிலே இதுபற்றி முடிவெடுக்க முடியும். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் காலம் இருக்கிறபோது, வெகுவிரைவிலே முடிவு எடுக்கமுடியும் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரையும் சேர்த்து ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். Committee கிடையாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இதுகூட முதலமைச்சரே சொல்லி அவருடைய அனுமதியோடு அறிவிக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு. முதலமைச்சரே உறுதியளித்திருக்கிறார். நிச்சயமாக இது விரைவில் செய்யப்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவரே அறிவித்திருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் செல்ல வேண்டுமென்றால், மாமண்டூர் வழியாகத்தான் அமைச்சர் செல்ல வேண்டும். எண்ணூர் வழியாகச் செல்ல வேண்டுமென்கிற அவசியம் கிடையாது. இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் வேண்டாம், யாரும் வேண்டாம். இன்றே அவர்கள் அமர்ந்து, அவர்களுடைய துறை அதிகாரிகளுடன் கலந்துபேசி, ஏனென்றால் அரசாங்கத்திற்குப் பணம் வேண்டுமென்ற அவசர நிலை இருக்கிறபோது, ஓர் ஆயிரம் சதுர மீட்டருக்கு அவர்கள் deviation-ல் கட்டியிருந்தால், 10 ஆயிரம் ரூபாய் fine என்று சொன்னால், அதற்குப் பெயர்தான் fine. Fine என்பது அதுதான்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைச் சேர்த்துக்கொள்வதிலே ஏன் உறுப்பினர் அவர்களுக்கு அவ்வளவு பயம் என்று எனக்குத் தெரியவில்லை. இது கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஏனென்றால், வரைமுறைப்படுத்துகிறபோது மற்றவர்களையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் செய்கிறோம். நாங்களாக செய்கிறபோது பெங்களூரிலே இருக்கிற ஒரு முறையைப் பின்பற்றி அப்படியே செய்தோம். இதிலே தவறுகள்



இருக்கின்றன என்பதை நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிற காரணத்தினால், அதைப்பற்றிக் கலந்துபேசுவதிலே எந்தத் தவறும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. அவர்களுடைய கருத்துக்களையும் உங்களைப் போன்றவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு, முதலமைச்சர் அவர்கள் விரைவில் முடிவெடுத்து, இதற்கான அறிவிப்பை அறிவிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான காரியத்துக்கு அபராதம் விதிக்கிறோம் என்றால் மேற்கொண்டு அந்த மாதிரியான தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான். இதுவரையில் கட்டடங்களைக் கட்டியிருக்கிறவர்கள் எதையும் மதிக்காமல், எந்த விதியையும் மதிக்காமல், நல்லது கெட்டதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கட்டியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு அபராதம் போட்டால், அதையும் சேர்த்துக் கட்டிக் கொள்வோம் என்ற எண்ணத்தில் இப்போதும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு கடுமையான அபராதம்தான் போட வேண்டும். அதற்காக வாதாடுவதோ அல்லது Committee போடுவது என்பது தப்பு என்றோ சொல்லக்கூடாது. எல்லோரும் சேர்ந்து கூடி, உட்கார்ந்து பேசி, முடிவெடுக்க வேண்டுமென்றுதான் சொன்னார். Committee-யையே நாம் கொச்சைப்படுத்தினால் இங்கே எத்தனை Committee-கள் நாம் போட்டிருக்கிறோம்? அதைத் தயவுசெய்து உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார். (குறுக்கீடு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நேரம் ஆகிறது. (குறுக்கீடு)

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதிலளிக்க வேண்டும். திரு. வி.கே. லட்சுமணன்.

*பிற்பகல் 1-00*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திட்டங்களையெல்லாம் நிர்ணயிக்கிற C.M.D.A. தன்னுடைய அலுவலகத்தை எலும்பூரில் கட்டி இருக்கிறது. Fly-over-ல் இருந்து எந்த அலுவலகத்திற்கும் பாதை இருக்கக் கூடாது என்பது விதி. ஆனால், எழும்பூரில் இருக்கிற Fly-over-லிருந்து நேரடியாக C.M.D.A.-வுக்கு ஒரு பாதை இருக்கிறது. இது மட்டும் விதி மீறல் இல்லையா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளைப்பற்றியும், பாதிக்கப்பட்ட பல்வேறு தொடர்புடையவர்கள் வழக்குத் தொடர்ந்து இருப்பதைப்பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி வழக்குத் தொடரும்போது அரசின் சார்பாக அல்லது துறையின் சார்பாக வழக்குமன்றத்தில் என்ன counter சமர்ப்பிக்கப்பட்டது? அது அரசினுடைய கொள்கையை விளக்கக்கூடியதாக இருக்கிறதா? மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி இல்லாமல் கட்டியவர்களுக்கு எல்லாம், அவர்கள் மீண்டும் இப்படிச் செய்ய முடியாத அளவுக்கு அல்லது மற்றவர்கள் செய்ய முடியாத அளவுக்கு யோசனை செய்து இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியென்று சொன்னால், நீங்கள் சமர்ப்பித்த counter-ல் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? வழக்கு மன்றத்திற்கு என்ன விளக்கம் தந்திருக்கிறீர்கள்? அதேநேரத்தில் வழக்குமன்றத்தில் உங்களுடைய விளக்கத்தைத் தருவதற்கு முன்பு துறையினர் உரிய அமைச்சரிடத்திலே கலந்து பேசிக்கொண்டார்களா? உங்களுக்குள்ளே ஒரு co-ordination இருந்ததா? அதற்குப் பிறகுதான் நீங்கள் வழக்குமன்றத்தில் உங்களுடைய விளக்கத்தைத் தந்திருக்கிறீர்களா? எதுவுமே இல்லாமல் துறை ஒரு பக்கம் போகிறது; அமைச்சருக்கும் தெரியவில்லை என்றால், அது நியாயமானதல்ல.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்குத் தெரியவில்லை என்று சொல்லி தட்டிக்கழிக்கிற பழக்கத்தில் நான் பேசவில்லை. அவருக்கே தெரியும்; பெங்களூரில் உள்ள முறையை நமது அமைச்சரவையிலே வைத்து



எடுக்கப்பட்ட முடிவு; அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவு; அந்த முடிவிற்குப் பிறகுகூட தொகை அதிகமாக இருக்கிறது என்று பலரும் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினால், அதை மறுபரிசீலனை செய்வதற்கு ஒரு Committee அமைக்கப்படும் என்றுதான் சொல்லி இருக்கிறேனே தவிர, அமைச்சருக்குத் தெரியாது; நீதிமன்றத்திலே கொடுக்கவில்லை என்றெல்லாம் தானாகக் கற்பனை செய்துகொள்ளக்கூடாது. நீதிமன்றத்திலேயும் இதற்கான விவாதங்கள் எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, ஒரு முறை தவறு செய்தவர்களுக்கு அபராதம் விதிக்கிறபோது அபராதத் தொகை அதிகமாக இருக்க வேண்டும் என்பது விதிதான். அதில் ஒன்றும் தவறு இருக்க முடியாது. ஆனால் அந்த அபராதத்தை வசூலிப்பதிலே பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கிற காரணத்தினாலும், அபராதத்தை அமல்படுத்த வேண்டுமென்று அனைவரும் எண்ணுகிற காரணத்தாலும், அதை மறுபரிசீலனை செய்யலாம் என்று எண்ணுகிறோமே தவிர, செய்த திட்டமே, நோக்கமே தவறு என்று சொல்வது சரியல்ல. அத்தகைய தவறு எதுவும் இதிலே இருப்பதாக நான் நினைக்கவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் அரசு தவறு செய்தது அல்லது உங்களுக்குள்ளே ஒரு co-ordination இல்லை என்பதையெல்லாம் ஒரு கேள்வியாகத்தான் எழுப்பியிருக்கிறேனே தவிர, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இவ்வளவு விஷயங்கள் இருக்கின்ற இந்தத் துறையிலே, இவ்வளவு வழக்குகள் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, முறையான ஆலோசனை, முறையான கருத்துப் பரிமாற்றத்திற்குப் பிறகு நீங்கள் counter file செய்தீர்களா? அந்த counter-ல் என்ன சொல்லியிருக்கிறீர்கள்?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஏற்கெனவே எடுத்த முடிவு, அறிவிப்பு, அந்த அடிப்படையிலே அபராதம்—இவற்றைத் தான் நீதிமன்றத்திலே வலியுறுத்துவதற்குத்தான் அரசு வாதாடும். ஏற்கெனவே விவாதித்து எடுத்த முடிவை நடைமுறைப்படுத்துவதிலே சில இடர்ப்பாடுகள் இருக்குமானால், அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு எந்த வகையான மாற்று வழி காணலாம் என்பதுதான் குழுவிலே ஆலோசிக்கப்பட இருக்கிறதே தவிர,

நீதிமன்றத்திலே அரசாங்கத்தினுடைய முடிவைத்தான்—Stand of the Government—வலியுறுத்தி வாதாடுவதற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது; அதைத்தான் அரசு வழக்கறிஞர்கள் செய்வார்கள்.

மற்றும் ஒன்று. அபராதம் விதிப்பது என்பது, ஒரு தவறு செய்ததற்காக மட்டும் அபராதம் விதிப்பது என்ற முறையிலே அல்ல; மற்றவர்கள் இதே முறையைப் பின்பற்றி, இந்த அளவு அபராதம் கட்டினால் போதும்; ஆகவே விதிகளை மீறிச் செய்யலாம் என்று கருத இடம் தருவதாக இருக்கக் கூடாது. இன்றைக்கும் பல பேர் அந்த நோக்கத்திலே இருக்கிறார்கள். அந்த நோக்கம் வளராமல் தடுப்பதும் அந்த அபராதத்தின் நோக்கம். ஆகவே அந்த அடிப்படையிலே, மேலும் தொடர்ந்து இப்படிப்பட்ட முறைகேடுகள் வளராமல் இருந்தால்தான் C.M.D.A.-வினுடைய நோக்கம் நிறைவேறும். அந்த அடிப்படையில், எந்த அளவுக்கு அபராதம் விதிப்பது; மேலும் எப்படி இந்த முறைகேடு வளராமல் தடுக்கலாம் என்று ஆலோசனை வழங்குவதற்குத்தான் முதலமைச்சர் அவர்கள் மற்றவர்களைக் கலந்து பேச இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார். (குறுக்கீடு) திரு. அப்துல் லத்தீப், நேரம் ஆகிக்கொண்டே போகிறது. (குறுக்கீடு) அமைச்சர் பேச வேண்டும்.

**THIRU M. ABDUL LATHEEF:** My point is whether you have taken a policy decision and what are the norms that you have fixed? My point is whether you have taken a policy decision; whether the Government has given a clearance to the department people or to fix up - say the fine, or whatever it may be; it is a question of arbitrary. That's what I would like to....

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Nothing is arbitrary. It is the Governments decision based on a policy accepted by the Cabinet and therefore it is not arbitrary. It is beings implemented. But when being implemented, when it is not practically convenient for the people to pay fine and all that, the Government may reconsider. But in the Court, the Government will be defended on the basis of the policy, already approved by the Cabinet.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழகிரி மற்றும் மற்ற உறுப்பினர்கள் கூறிய இந்த விவரங்களைக் கேட்டுவிட்டுப் பேசுகிறார்கள். (ஒரு தாளை அவைக்குக் காண்பித்தார்). மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இது ஒரு கொள்கை முடிவு. பேப்பரில் அதைப் பற்றி விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்காமல் பேசுவதை வைத்துக்கொண்டு நீங்கள் விவாதத்திலே கலந்துகொண்டால் இப்படித்தான் இருக்கும். It is a policy decision taken by the Government in the Cabinet itself, as I have already said. ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) தயவுசெய்து உறுப்பினர் அமைதியாக இருக்க வேண்டும்.

**THIRU M. ABDUL LATHEEF:** I am only asking a responsible question.

**HON. Dr. K. PONMUDI:** You are not putting a responsible question. (Interruption); You are not asking a responsible question; You have to put a responsible question.

(மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி மற்றும் திரு. ம. அப்துல் லத்தீப் இருவரும் நின்றுகொண்டு நேருக்கு நேர் பேசிக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருவரும் என்னைப் பார்த்துதான் பேச வேண்டும். நேரடியாகப் பேசிக் கொள்ளக்கூடாது.

**THIRU M. ABDUL LATHEEF:** I am asking the question with full sense of responsibility. I am asking a very very pertinent question and you are bound to explain.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** சரி. அதைத்தான் சொல்கிறேன். நான் சொல்கிறபோது இது கொள்கை அளவிலே, அமைச்சரவையிலே எடுக்கப்பட்ட முடிவு. அந்த முடிவின் அடிப்படையிலே சில சிக்கல்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

நீதிமன்றத்திலே இதற்காக வழக்கினைத் தொடுத்திருக்கிறார்கள். அரசுத் துறை நாங்கள் எடுத்திருக்கின்ற முடிவுப்படி நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிறது என்று சொல்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நீங்கள் பார்த்துவிட்டு.....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நாங்கள் பார்த்துவிட்டுத்தான் பேசுகிறோம். தெரிந்ததால்தான் பேசுகிறோம். (குறுக்கீடு) தெரிந்ததால்தான் பேசுகிறோம். நீங்கள் பேசுகிறபோது கொள்கை முடிவு எடுத்திருக்கிறார்களா, நீதிமன்றத்திலே வாதிட்டிருக்கிறார்களா என்று கேட்ட செய்திகளெல்லாம் பத்திரிகையிலே வந்த செய்திகள், விளம்பரப்படுத்தப்பட்ட செய்திகள். இவை இரண்டாண்டு காலமாக நீதிமன்றத்திலே எடுத்துக்கொள்ளப்படாமல் தேதி குறிப்பிடப்படாமல் தள்ளிவைக்கப்பட்டிருக்கிற வழக்குகள். ஆகவே இதில் தீர்ப்பு வர வேண்டும்;. நீதிமன்றம் நீண்டகாலம் தள்ளிவிடக்கூடாது, உடனடியாக முடிவெடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைவரையும் அழைத்துப்பேசி உடனடியாக தீர்வு காணவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பார்த்துவிட்டுத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நன்றி, நன்றி.

(திரு. ம. அப்துல் லத்தீப் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லத்தீப் அவர்கள் உட்கார்ந்துகொண்டு பேசக்கூடாது. நீங்கள் மூத்த உறுப்பினர். நீங்கள் தயவுசெய்து மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். (குறுக்கீடு) பிற்பகல் ஒரு மணி ஆனாலே எல்லோரும் tension ஆகிவிடுகிறீர்கள். டாக்டர் செல்லக்குமார் பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசைப்பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழையெளிய மக்களுக்கு அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கு ஓலைகளை மாற்றிவிட்டு, கல்நார் வேயப்படுகின்ற திட்டத்திற்கு இப்போது செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது அமெரிக்கா போன்ற நாடுகளில் Asbestos sheet — கல்நார் என்கின்ற.... (குறுக்கீடு)



(திரு. ம. அப்துல் லத்தீப் உட்கார்ந்துகொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** The matter is already over உட்கார்ந்துகொண்டு திரும்பத் திரும்ப பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? நீங்கள் மூத்த உறுப்பினர், உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள், அதற்கான விளக்கத்தினை அமைச்சர் கொடுத்துவிட்டார். அதற்குப் பிறகு மறுபடியும் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? டாக்டர் செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்போது Asbestos sheet-ஐ அமெரிக்காவிலே தடை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், விஞ்ஞான ரீதியாக, மருத்துவ ரீதியாக, இந்தக் கல்நார் மூலமாக புற்றுநோய் வரக்கூடிய வாய்ப்பு அதிகம் என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் மேலை நாடுகளிலே Asbestos sheet-ஐப் பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்வது, இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்கள், குடியிருப்பதற்கான வீடுகளுக்கு வேயப்படுகின்ற கல்நார் எனப்படுகிற Asbestos sheet-க்கு பதிலாக cement concrete வீடுகளை அவர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

பொதுவாக குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் இப்போது பல்வேறு வீடுகள் இடிபட்ட நிலையிலே இருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்த்து பராமரிக்க முன்வர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

*1998-99* ஆம் ஆண்டிற்கான Audit report இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் "It was noticed in Audit that the tenders for works were received only from few persons, say two or three or even one. This would need to be examined immediately and correct list of

registered contractors......." என்று Audit report-லே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒப்பந்தங்களைக் கோருகிறபோது அது வெளிப்படையான ஒப்பந்தங்களாக இருக்க வேண்டுமென்று அரசு கொள்கை ரீதியாக எடுத்துச்சொல்லியிருக்கிறது. பல்வேறு காலகட்டங்களிலே இந்த அவையிலேகூட நாம் விவாதித்து இருக்கிறோம். ஓரிடத்திலும் நாம் single tender கொடுத்தது இல்லை என்கிற வாதத்தை இந்த அவையில் வைத்திருக்கிறோம். பல மணி நேரங்கள் வாதம் நடந்திருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தினுடைய Audit Report 1998-99-ல், அவர்களே single tender கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருசில நபர்களுக்கு மட்டும்தான் மீண்டும் மீண்டும் ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் சொல்லி அவர்கள் அரசுக்கு ஒரு ஆலோசனையாகக்கூட ``Efforts would therefore need to be taken to give wide publicity in order to attract competitive rates" என்று அதிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இந்த ஆட்சியில் ஒரு முறைகூட ஒப்பந்தங்கள் single tender-ஆகக் கொடுத்தது இல்லை என்று இந்த நாட்டு மக்களுக்கு இந்த மன்றத்தின் மூலமாகத் தெரியப்படுத்தியிருக்கிறோம். ஆனால் Audit Report-ல் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இதற்கான பதில் என்ன என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, single tender என்று சொல்லப்படுவது பொதுவாக விளம்பரம் செய்யாமல் தனிப்பட்டவர்களை அழைத்து `Nomination' முறையில் single tender கொடுத்தால் அது தவறு. ஒருவேளை விளம்பரம் செய்தும்கூட சில காரியங்களுக்கு ஒரே ஒரு tender வருமானால், அப்படி வருகிறபோது single tender என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகாது. விளம்பரம் இல்லாமல் தனிப்பட்ட ஒருவருக்கு அல்லது ஒரு Contractor-க்கு முறைப்படி என்ற பெயரால் அவருக்கு மட்டும் தருகிறபோது single tender is offensive. ஒருவேளை விளம்பரம் செய்தும் நான் சொல்வது அந்த விவரங்களைப் பார்த்துச் சொல்லவில்லை, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற காரணத்தால் சொல்கிறேன். — விளம்பரம் செய்தும் ஒரே ஒரு tender வருமானால் அது தவறு என்று கருதுவதற்கு வாய்ப்பில்லை.



***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த வேலை single tender மூலம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல முடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். 1998-99 ஆம் ஆண்டுக்கான Audit Report-ல் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோலதான் உரிய விளம்பரத்தைச் செய்யாத காரணத்தால்தான் இதுபோன்று ஒரு நபர், இரண்டு நபர் கலந்துகொள்கின்ற வாய்ப்பு ஏற்பட்டு, அதன்மூலமாக வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அதில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது எந்தப் பணியில் என்று சொல்லுங்கள் என்று சொன்னால் நீங்கள் Auditor-ஐத்தான் கேட்க வேண்டும்.

அடுத்து இந்த அவையிலே பலமுறை பேசப்பட்டிருக்கிறது. கொடைக்கானல் நகரியத்தினுடைய விதிமுறைகளை மீறி மூன்று Hotel-கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய அந்த நடவடிக்கை, தெரிந்தே செய்த ஒரு தவறு என்று நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். கடந்த ஆட்சியில் வணிகத்திற்காக என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் இரண்டு மாடிக் கட்டடங்கள் --- Hotel கட்டலாம் என்று அந்த நகரியம் அனுமதி கொடுத்தபிறகு, அதையும் மீறி இன்னும் 4 மாடிகள் கட்டுவதற்கு அந்த அரசு அனுமதி கொடுத்தது என்பதை ஊழலுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று தனி நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு இப்போது இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையை கடந்த ஆட்சியில் இருந்த அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் பெற்றுக் கொடுத்திருக்கிறீர்கள். இந்த ஆட்சியில் உயர் நீதிமன்றத்தினுடைய கண்டிப்பையும் தெரிந்து கொண்டு, Supreme Court-னுடைய கண்டிப்பான தீர்ப்பையும் தெரிந்துகொண்டு விதிமுறைகளையெல்லாம் மீறக்கூடாது என்பதை முழுமையாகத் தெரிந்துகொண்ட பிறகு, தனி நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டது என்பதையும் தெரிந்துகொண்ட பிறகு அந்தத் தனி நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் மூலமாக முன்னாள் முதலமைச்சர் தண்டனை பெற்று இருக்கிறார் என்பது தெரிந்தும், தெரிந்தே ஒரு தவறு, மூன்று Hotel-களுக்கு இப்போது அனுமதி கொடுத்திருக்கிறீர்களே, நான் மிகத் தெளிவாகக் கேட்கிறேன். தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் திரைப்படத்தின் மூலமாக ஒன்றைச் சொன்னார்கள். 'ஒரு தவறு

செய்தால் அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்று சொல்லியிருக்கிறார். நான் அதைத்தான் இந்த மன்றத்தில் கேட்க விரும்புகிறேன். தெரிந்தே செய்தது ஒரு தவறு அல்ல, மூன்று தவறுகள் தொடர்ந்து செய்த — அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன் என்று சொன்னார்கள். — இந்த அமைச்சர் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று இந்த அரசை நான் பல முறை கேட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டு 1993 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடைக்கானல் முழுமைத் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடாது என Kodaikanal Builders Association உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் இருந்ததால், கொடைக்கானல் பகுதியில் நிலப்பயன் மாற்றம் கோரிய நிகழ்வுகள் குறித்து கடந்த சில ஆண்டுகளாக முடிவு எடுக்க முடியாமல் இருந்தது. ஜூலை 1999-ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்தான் நிலப்பயன் மாற்றம் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. ஆகவே கொடுக்கக்கூடாது என்பதல்ல. இது கட்டடத்திற்கு அனுமதி அளிப்பது அல்ல. இது நிலப்பயன் மாற்றம்தான். அது மட்டுமல்லாமல் இதிலே இருக்கின்ற அதிகாரிகள் நடைமுறையைப் பின்பற்றாததன் காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ஆணைகளை இரத்து செய்தார்களே தவிர, இதில் வேறு எந்தத் தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய கேள்வி மிகத் தெளிவான கேள்வி. அதிகாரிகள் தவறு செய்தார்கள், அதிகாரிகள் சரியான வழிமுறைகளைக் கையாளவில்லை என்று சொன்னால், ஓர் அரசாணையை அதிகாரிகள் மட்டுமே செய்துவிட முடியாது, பிறப்பித்துவிட முடியாது. அமைச்சருடைய ஒப்புதல் இல்லாமல் அரசாணையை எந்த நிர்வாகத்தாலும் செயல்படுத்த முடியாது. எனவே மூன்று அரசாணைகள் அமைச்சருடைய ஒப்புதலோடு இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், எப்படி அதிகாரிகளை மட்டும் நீங்கள் தனிப்பட்ட முறையிலே தனிமைப்படுத்த முடியும்?



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை வெளியிட்ட பிறகு அறிவிக்கை வெளியிட வேண்டும். அது சட்டத் துறைக்குச் சென்று மீண்டும் அமைச்சரிடம் வந்து வெளியிட்ட பிறகுதான் அந்த நிலப்பயன் மாற்றம் செல்லுபடியாகும். ஆனால் அதற்கு முன்பாகவே, முதலமைச்சர் அவர்கள், அதிகாரிகள் அதிலே சரியான நிலையை உருவாக்காததால் அதை இரத்து செய்துவிட்டார்கள். இதில் எங்கே தவறு நடந்திருக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கேள்வி, மிகத் தெளிவான கேள்வி. ஒரு அரசாணையை அமைச்சர்.....

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை வெளியிட்ட பிறகு அறிவிக்கை வெளியிட்டால்தான் அந்த உத்தரவு செல்லுபடியாகும். அறிவிக்கை வெளியிடாதபோது தள்ளுபடி செய்வதற்கு முதலமைச்சருக்கோ, அமைச்சருக்கோ உரிமையிருக்கிறது; சட்டத் துறைக்கு உரிமையிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன் Notification என்பது வேறு, G.O. என்பது வேறு. எங்களுடைய தொழிலாளர் நல... (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். என்னைக் கொஞ்சம் பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி, நீங்கள் கேட்கும்போது உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள், அழகிரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சருக்கும் பொறுப்பு இருக்கிறது. அவர் பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** நான் பேசிய பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு சொல்லுங்கள். எங்களுடைய தொழிலாளர் நலத் துறையிலேகூட வாரியங்கள் அமைப்பது சம்பந்தமாக G.O. போடுகிறோம். G.O. போட்டதற்குப்

பிறகுகூட நடைமுறைச் சிக்கல் ஏற்படலாம். G.O. போட்டு, Notification போட்ட பிறகு Gazette-ல் வெளியாக வேண்டும். இதற்கிடையில் நடைமுறையிலே சில சிக்கல்கள் ஏற்படலாம். அப்படி ஏற்படுகிறபோது Rectification, அவை திருத்தப்படும். அதுதான் நடந்திருக்கிறது.

**திரு. ச. அழகிரி:** அதுபற்றிக் கவலையில்லை. அரசாணையில் அமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறாரா என்பதுதான் என்னுடைய கேள்வி....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். அவை முன்னவர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அரசாணை பிறப்பிக்கப் பட்டது என்பதாலே, கடந்த காலத்திலே நடைபெற்றது போன்று குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருப்பதற்குக் காரணம், அந்தநாள் முதலமைச்சரே அதற்குத் துணையாக இருந்து, ஒரு தவறான நடவடிக்கைக்கு இடம் கொடுத்த காரணத்தாலும், நீதிமன்றத்திலே ஏற்கெனவே பெறப்பட்ட தீர்ப்புக்கு மாறாக நடைபெற்ற காரணத்தாலும், அது குற்றச்சாட்டாக வழக்குக்குச் சென்றது. இது அப்படி அல்ல. ஒரு கருத்து சரியா, தவறா என்பதில் தவறான கருத்துடன்கூட ஒரு அதிகாரியோ, மற்றவர்களோ முடிவெடுக்கலாம். அது தவறா இல்லையா என்று தெரிகிறபோது, தவறு என்று கருதியவுடன் அதற்காக அதை G.O.-வாக செயற்படாமல் நிறுத்தி வைத்த நிலையில், இது குற்றச்சாட்டுக்கு உரியதல்ல; ஏனென்றால் committed offence அல்ல. ஏற்கெனவே நடைபெற்றது committed offence. அதுவும் procedure-லே குறுக்கிட்டு அப்படி ஒரு முடிவு ஏற்கத் தேவையில்லை என்பதால்தான் முதலமைச்சர் அதை நிறுத்தி வைத்திருக்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில் இது கட்டடம் கட்டுவதற்குக் கொடுக்கப்பட்ட அனுமதி அல்ல. இது land transfer-தான். Commercial-ஆ, Residential-ஆ என்று கொடுப்பதுதான். அந்த மலையைப் பொறுத்தவரையில் (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். தயவு செய்து கேட்டுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) நான் பதில் சொல்லிவிடுகிறேன். அந்த மலையைப்



பொறுத்தவரையில் சில விதிகள் இருக்கின்றன. நான் விவரத்தைச் சொல்கிறேன். அதற்குப் பிறகு சொல்லுங்கள். தயவுசெய்து கேட்டுக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) தவறே நடக்கவில்லையே. முதலமைச்சர் இதைத் திருத்தியதுகூட.... (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) எனக்கு உரிமையில்லையா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும். அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது. (குறுக்கீடு) அமைச்சர் சொல்லி முடிக்கட்டும், அவரைச் சொல்லவிடாமல் தடுத்தால் எப்படி?

பிற்பகல் *1-20*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இதிலே தவறு இல்லை என்பதைச் சொல்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆணையை நிறுத்தி வைத்ததற்குக் காரணமே, இதிலே ஏதோ தவறு.... (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அழகிரி அவர்களுக்கு, அமைச்சர்கள் எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. அவர் பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** விளக்கம் சொன்னதற்குப் பிறகு, தவறு இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்லட்டும். சொல்லி முடித்த பிறகு கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்கிறார். அவர் பதில் சொல்லிவிட்ட பிறகு நீங்கள் கேளுங்கள், இப்போது உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இப்போது அதற்குதான் பதில் சொல்கிறேன். அந்த விதியைப் பொறுத்தவரையில், land transfer என்பது ஒரு கட்டடம் கட்டலாமா, agricultural purpose-ஆ, building purpose-ஆ, commercial purpose-ஆ என்று மாற்றிக் கொடுப்பதா என்றுதான் மாண்புமிகு அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார். அதுபோன்று வழங்குவதில் தவறில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அதை ஏன் நிறுத்தியிருக்கிறார் என்று சொன்னால், இந்த அனுமதியைக்

கொடுத்துவிட்டால் பின்னால் இதை வைத்துக்கொண்டு 5 மாடிக் கட்டடங்கள், Hotel-கள் கட்டுவதற்கு முன்வருவார்கள் என்று முன்கூட்டியே தெரிந்த காரணத்தால், விதிமுறையிலே தவறு என்று அறிவித்தார்களே தவிர, செய்திருப்பதில் ஒன்றும் தவறு கிடையாது. எதிலேயும், கட்டடம் கட்டுவதற்கு முன்பாக அது agricultural land-ஆ, commercial land-ஆ என்று பார்த்து அனுமதி வழங்குவது வழக்கம். கொடைக்கானலிலே அவர்கள்கூட ஓர் அடுக்கு மாடிக் கட்டலாம். சென்னையை ஒட்டியிருக்கின்ற கடற்கரை ஓரத்திலேகூட இரண்டு மாடிக் கட்டடம் கட்டக்கூடாது என்று விதி இருக்கிறதே தவிர, ஓர் அடுக்கு மாடியைக் கட்டலாம். அதுமாதிரி கட்டுகிறபோது, அது commercial-லா agricultural-லா என்று நிலப் பிரிவினை செய்வதற்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறாரே தவிர, கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் அது தவறு. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேகூட ஏன் முதலமைச்சர் அதை தவறு என்று நிறுத்தினார் என்றால், அதை நிறுத்தியதற்குக் காரணமே, procedural flaw இரண்டு செயலாளர்கள் அனுமதித்தபின், Chief Secretary-க்குப் போகாமல் வந்திருக்கிறது. ஆக procedural-ஆகவும் தவறு நடந்திருக்கிறது. இந்த அடிப்படையில் அனுமதித்துவிட்டால் மேலும் கட்டுவதற்கு வருவார்கள் என்று உத்தேசித்து முதலமைச்சர் அவர்கள் அதை நிறுத்தியிருக்கிறார்களே தவிர, அதிலே ஏதோ தவறு நடந்துவிட்டதாக எந்தவிதமான கருத்தும் கிடையாது.

**திரு. சி. ஞானசேகரன்:** கையெழுத்து போட்ட பிறகு நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய வாதமே? ஆகவே அது உண்டா, இல்லையா என்பதற்கு மட்டும் நேரடியாகப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அரசாணையில் வேறு என்ன தவறு இருக்கிறது? அரசாணையைப் போட்டிருக்கிறார். போட்டதற்குப் பிறகு procedure-ல் தவறு. இதை அனுமதித்துவிட்டால் மேலும் பல தவறுகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு அதை நிறுத்தியிருக்கிறார். அமைச்சர் செய்யும்போது, எந்தத் தவறான உள்நோக்கமோ, எந்தத் தவறோ காரணமாகக் கிடையாது. இதுபோன்று கொடுத்தது கட்டடம் கட்டுவதற்கான அனுமதியல்ல. It is only land transfer. Agricultural land-லிருந்து commercial purpose-க்குப் போகலாம் என்பதுதானே தவிர..... (குறுக்கீடு)



**திரு. ச. அழகிரி:** Land transfer கொடுக்கக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அப்படிக் கிடையாது. அதுமாதிரி கொடுக்கக்கூடாது என்று எந்த விதியிலேயும் கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமாதிரி விதிமுறைகள் கிடையாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்கு policy decision எடுக்கக்கூடிய உரிமை இல்லை என்றால் அதற்குப் பெயர் அரசாங்கமா? (மேசையைத் தட்டும் ஒலி) We have got every right to take any policy decision. அதற்குப் பிறகு அதிலே தவறுகள் நடைபெற்றால்தான் நீங்கள் குற்றம் சாட்டலாம். அந்த policy decision-லேயே தவறுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற காரணத்தால்தான், அது முறையாக நடைபெற்றால்கூட, தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் அதை மறுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. சி. ஞானசேகரன், திரு. ச. அழகிரி, டாக்டர் அ. செல்லக்குமார் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே நேரத்தில் 4 பேர் எழுந்து பேசினால் யார் பேச்சை record செய்வது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த ஒரு தகவல். ஏற்கெனவே கொடைக்கானலிலே, எந்தெந்த நிலங்களை எப்படியெல்லாம் வகை செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு Committee இருக்கிறது. அந்தக் Committee அதை reject செய்த பிறகு, அந்தத் துறையில் இருக்கிற அமைச்சர் அவர்களே ஒரு G.O. போட்டிருக்கிறார்கள் என்ற ஒரு தகவல் எனக்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி விளக்குமாறு நம்முடைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் Committee-க்கு அதுமாதிரி முடிவு எடுப்பதற்கும், recommend செய்வதற்கும், மறுப்பதற்கும் அதிகாரம் இருக்கிறது. அந்தக் Qommitte-க்கு ஒன்றும் அதிகாரம் இல்லாமல் இல்லை. ஆனால் அரசாங்கம் Appellate Authority.

ஒருவேளை அரசாங்கத்தில் இருக்கிற அமைச்சரோ, செயலாளரோ, அதிகாரிகளோ அந்தக் கருத்தை, முடிவை ஏற்றுக்கொள்ளாமல், இன்னொரு முடிவைச் சொல்லலாம். முடிவு சொல்லக்கூடாது என்றால் பிறகு அரசாங்கம் வேண்டியதில்லை. அந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்றால், முதலமைச்சர் மறுக்கலாம். ஆகவே இது ஒரு முறையில் ஏற்பட்டதே தவிர, ஏற்கெனவே அந்த ஆட்சியில் நடைபெற்றதைப்போல நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட முடிவுக்கே மாறாக ஓர் அரசாங்கம், விதிமுறைகளுக்கு மாறாக ஒரு முடிவெடுத்து வழக்குக்கு ஆளாகியது போன்றது அல்ல. இது அப்படிப்பட்ட குற்றச்சாட்டு அல்ல. கருத்து வேறுபாடு இருக்கலாம். கீழே இருக்கிற அதிகாரிகள் ஒத்துக்கொண்டிருக்கத் தேவையில்லை; அந்தக் குழுவேகூட அப்படி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கத் தேவையில்லை என்று யார் வேண்டுமானாலும், எந்தக் கருத்தை வேண்டுமானாலும் சொல்லலாம். எண்ணங்கள் அளவிலே இருந்ததே தவிர offence — குற்றம் என்று சொல்வதற்கோ அல்லது குற்றச்சாட்டு என்று சொல்வதற்கோ அதிலே இடம் கிடையாது.

பிற்பகல் *1-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** It is only a matter of re-classification, not for permission. *(குறுக்கீடு)* இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) ஏன், நான் சொல்லக்கூடாதா? இருங்கள். ஒரு நிமிடம் இருங்கள். G.O. போடவில்லை என்று அமைச்சர் மறுக்கவில்லையே? போட்டேன் என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பின்பு, தவறு என்று தெரிய வந்த பின்பு இரத்து செய்திருக்கிறார்கள். அவ்வளவுதான். எனவே அதை விட்டுவிட்டு அடுத்த point-க்கு வாருங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிறது.

**திரு. ச. அழகிரி:** நேரத்தைப் பற்றி நினைக்காதீர்கள். நேரத்தை extend-செய்யுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள்; ஒரு policy decision எடுப்பதற்குக்கூட இந்த அரசாங்கத்திற்கு உரிமை இல்லையா என்று நான் கேட்கிறேன்; உங்களுடைய அரசாங்கத்தில் policy decision எடுத்து பிறகு அரசாணை போடுகிறீர்களா அல்லது அரசாணை போட்டபிறகு policy decision எடுப்பீர்களா என்பதை நான் அவை முன்னவர் அவர்களிடமிருந்து கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேச வளர்ச்சிப் பணிகளை முறைப்படுத்த, ஆலோசனைகள் வழங்க 1990-ல் HACA Committee அமைக்கப்பட்டது. அது ஓர் ஆலோசனைக் குழுதான். அது Statutory Body அல்ல. அரசாங்கத்தில் அதை ஏற்கவோ, மறுக்கவோ உரிமையுண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியைப் பொறுத்தவரைக்கும், அவ்வாறு விதிமுறைகளை வைத்திருப்பதே, அதனுடைய அமைதியான சூழல் கெட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான். எனவே அடிப்படை என்ன என்று சொன்னால், வணிகத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்திலேதான் வணிக வளாகம் எழுப்பப்பட வேண்டும். மக்களின் அமைதியான சூழலுக்கு என்று ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியிலே வணிக வளாகத்திற்கு அனுமதி கொடுக்க முடியாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் M.M.D.A.—வினுடைய தலைவராகக்கூட கடந்த காலத்திலே இருந்திருக்கிறேன். ஒரு குழுவாக இருந்தால், அந்தக் குழு சில ஆலோசனைகளை வழங்குகிறபோது, பல்வேறு அடிப்படைகளை வைத்து வழங்குகிறது. அந்தக் கருத்தைச் சொல்ல அந்தக் குழுவிற்கு அதிகாரம் உண்டு அல்லது உரிமை உண்டு. அரசாங்கம் அதற்கு மேல் தீர்மானிக்கிறது. அரசு தீர்மானிக்கக் கூடாது என்பதல்ல. அரசு தீர்மானித்த தீர்மானத்தையும், முதலமைச்சர் இந்தத் தீர்மானம் தேவையில்லை என்று சொல்வதற்கு முதலமைச்சருக்கு முழு அதிகாரமுண்டு. அரசாங்கம் என்பது தனிப்பட்ட ஓர் அமைச்சரோடு முடிவதில்லை. இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சருக்கு அனைத்துப் பொறுப்புகளும் உண்டு. ஆகவே அது தொடர்ந்து நிலம் பற்றிய அந்தக் கொள்கையைத் தளர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் கருதினார்கள். அந்த முடிவு எடுக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *20* நிமிடங்கள் ஆகின்றன. சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) *20* நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதாவது,

classification என்று சொல்வது, அடிப்படை, ஓர் அமைதியான சூழலையே கெடுப்பதற்கு, அந்தப் பிரச்சினை குறித்து.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பற்றியும் எனக்குத் தெரியும். அடிப்படைச் சூழலைப் பற்றியும் எனக்குத் தெரியும். எந்தெந்தக் காலத்திலே மாற்றப்பட்டது என்றும் தெரியும். மாண்புமிகு உறுப்பினருக்கு அதை மாற்றக் கூடாது என்று சொல்ல, எப்படிக் கருத்து உரிமை இருக்கிறதோ, அதேமாதிரி மாற்றுவதற்கும் எங்களுக்கு உரிமை இருக்கிறது. இது கருத்து உரிமை. ஓர் அரசாங்கம் நடத்துகிறபோது, அப்படி ஒரு கருத்து கொள்வதற்கு இடமிருக்கிறது. அந்தக் கருத்தை ஏற்று நிறைவேற்றுவதால் யாராவது பாதிக்கப்பட்டார்கள் என்றால் அப்பொழுதுதான் குற்றச்சாட்டு வரும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order. Classification of land-ஐ மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு எப்பொழுதும் உரிமை இருக்கிறது. உதாரணமாக, சென்னைக் கடற்கரையில் ஓர் இடத்தை உபயோகிக்க வேண்டுமானால் — எதையும் உபயோகிக்கக் கூடாது என்று இருக்கிறது. பேரறிஞர் அண்ணாவிற்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-க்கும் கல்லறை எழுப்பினோம். Relax பண்ணித்தான் செய்தோம். அதேமாதிரி, கன்னியாகுமரி கடற்கரையில் காமராஜருக்கு நினைவுச் சின்னம் எழுப்பினோம். உண்மையிலேயே அதை உபயோகிக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கம் சொல்கிறது. அதை change பண்ணிச் செய்தோம். Government has the right to change the classification.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்திலே நானேகூட, என்னுடைய கல்வித் துறை பற்றி ஒரு முடிவு எடுக்கிறேன். எடுத்த முடிவை பொதுமக்கள் வரவேற்கமாட்டார்கள் என்று முதலமைச்சர் கருதினால், அன்பழகனைக் கூப்பிட்டு, உடனே அந்த முடிவை நிறுத்தி வைக்கலாம். ஆகவே அப்படி நிறுத்தப்பட்டதே தவிர, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கிறபோது, குற்றச்சாட்டு வராது. கருத்துக்கள் தரும் நிலையில் at every stage ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு decision — முடிவு எடுக்கக்கூடிய நிலை உண்டு. இறுதி முடிவாக முதலமைச்சர் அவர்கள் அதை நிறுத்தி வைத்த நிலையில் அதில் குற்றச்சாட்டு ஏற்படுவதற்கு இடம் இல்லை. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, 22 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து, "பேச அனுமதி கொடுங்கள், mike கொடுங்கள்" எனக் கூக்குரலிட்டனர்.)

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்மானப் பெரியாரின் அருமைத் தொண்டர், தமிழாய்ந்த அண்ணாவின் அன்புத் தம்பி, தமிழினமும், தமிழர்களும் வாழ்வதற்குத் தளராமல் கணினி என உழைத்து வரும் இனமான ஏந்தல்,

(தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே பேச அனுமதி கொடுங்கள் எனக் கூக்குரலிட்டனர்.)

எங்கள் தமிழ் இணையம், ஒப்பாரும் மிக்காரும் இல்லா உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ், ஐந்தாவது முறையாக, இந்தப் பெருமைமிக்க பேரவையில், புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்து 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** எங்களுடைய கட்சி உறுப்பினருக்குப் பேச அனுமதி கொடுக்காததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர். அதைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய தேசிய லீக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பேச அனுமதி கொடுக்காததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** அதன் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற நல்லதொரு வாய்ப்பினை வழங்கிய வான்புகழ் அய்யன் வள்ளுவனுக்கு வானுயரச் சிலை அமைத்து, வையகம் போற்ற வாழ்வாங்கு வாழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தளபதி மேயர் அவர்களுக்கும், தங்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர், உடுக்க உடை கொடுத்தோர் மானம் காத்தோர், இருக்க வீடு கொடுத்தோர், வாழ்வு கொடுத்தோர்' என்ற அடிப்படையில், 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' எனும் தேசிய வீட்டு வசதிக் கொள்கையின் உன்னதக் குறிக்கோளை தன்னகத்தே கொண்டு, அந்தக் குறிக்கோளை அடைவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கூட்டுறவு வீட்டு வசதி இணையம், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், ஊரக வீட்டு வசதிக் கழகம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், நகர் ஊரமைப்புத் துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவை மிகுந்த முனைப்போடும், சிறப்போடும் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், கடந்த *39* ஆண்டுகளில் *3,80,900* குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. *1970-71* ஆம் ஆண்டுகளில் ரூ.*4.83* கோடியாக இருந்த வாரியத்தின் முதலீட்டுச் செலவு, படிப்படியாக உயர்ந்து, இந்த நிதியாண்டில் ரூ.*270* கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வளர்ந்துவரும் நாகரீகத்திற்கேற்ப தற்கால மக்களின் விருப்பத்திற்கும், வசதிக்கும், சுவைக்குமேற்ப, புகழ்பெற்ற கட்டடக் கலைஞர்களைக் கொண்டு, குடியிருப்புகளை அழகான வெளிப்புறத் தோற்றத்தோடு உருவாக்கியிருக்கிறது.



மக்கள் குறை தீர்க்கும் மனுநீதிச் சோழனாக ஆண்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்தி, இதுவரை *7,686* மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்திடம் குடியிருப்பு அல்லது மனை பெற்றவர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்குவதில் பல ஆண்டுகளாக நிலவி வந்த நடைமுறை இடர்ப்பாடுகள் களையப்பட்டு, மாவட்ட வாரியாக இப்போது முகாம்கள் நடத்தப்பட்டு *73,200* விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைத் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் பயன்பெறும் வகையில், சென்னை-திரு.வி.க. நகர், சர்மா நகர், பீளமேடு, திருப்பூர், மதுரை-பசுமலை, பைக்காரா காலனி, சிவகாசி-கோபுரம் காலனி, சிம்கோ காலனி மற்றும் காரனேசிங் காலனி ஆகிய பகுதிகளில் *9,600* ரூபாய் செலுத்துவோருக்கு *2,930* வாடகைக் குடியிருப்புகள் வழங்க உத்தரவிடப்பட்டு, இதுவரை *1,245* விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்ட, தன்னிறைவுத் திட்டங்களின் மூலம் வீட்டுமனை பெற்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு உதவும்பொருட்டு, வாரியமே வீடுகளை முதன் முதலாகக் கட்டித் தருகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி, முதல் முயற்சியாக சென்னை திருவூரில் *70* வீடுகள், *131.33* இலட்சம் ரூபாய் செலவில் கட்டும் திட்டம், I.C.I.C.I. வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

மதுரை அனுப்பானடியில் ரூ.*32.35* இலட்சம் செலவில் *22* வீடுகளும், மதுரை அவனியாபுரத்தில் ரூ. *47.37* இலட்சத்தில் *31* வீடுகளும் கூட்டுறவு வங்கியின் உதவியுடன் கட்டப்பட உள்ளன. இத்திட்டத்தின் கீழ் வங்கிகள் வழங்கும் கடன் தொகையை நேரடியாக வீட்டு வசதி வாரியம் பெற்று வீடுகளைக் கட்டிக் கொடுக்கும். கடனுக்கான தவணைத் தொகையை ஒதுக்கீடுதாரர் நேரடியாக வங்கிக்குச் செலுத்த வேண்டும். கடன் தொகை முழுவதும் கட்டி முடிக்கப்பட்டவுடன் வங்கியின் சம்மதம் பெற்று கிரயப் பத்திரம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாரியத்தால் கட்டப்படும் வீடுகள் தரம் வாய்ந்தவையாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசு நிறுவனங்களான வருமான வரித் துறை, சுங்க வரித் துறை, தொலைபேசித் துறை, மத்திய நீர்வள ஆணையம் மற்றும் இந்தியன் ஆயில் நிறுவனம் ஆகியவை வீடுகளை வாங்கியிருக்கின்றன.

மனிதனின் அத்தியாவசியத் தேவையான வீட்டு வசதியை அளிப்பதற்கு வீட்டு வசதி வாரியத்தைப் போலவே, வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களும் இணையமும் பெரும் பங்காற்றி வருகின்றன. நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு வீட்டு வசதி வழங்குவதற்காக 874 தொடக்க நிலை நகர கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், 195 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் ஆக மொத்தம் 1,069 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன.

அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்குவதிலே, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தொடங்கப்பட்டு கடந்த 41 ஆண்டுகளில், இதுவரை 9,88,260 வீடுகள் கட்டுவதற்கு ரூ.2763.42 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 41 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.1,294.07 கோடியாகும். ஆனால் தமிழ்நாட்டு முதலமைச்சராக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக பொறுப்பேற்றுள்ள இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ரூ.1,469.35 கோடி கடன் வழங்கி, 114 விழுக்காடு அளவுக்கு சாதனையைப் படைத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 20,000 வீடுகள் கட்ட நிதியாண்டில் ரூபாய் 350 கோடி அளவுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கும் அதிகமாக 20,827 வீடுகள் கட்ட ரூபாய் 364 கோடி கடன் வழங்கி, 104 விழுக்காடு சாதனையும் செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

HUDCO நிறுவனம் ஆண்டுதோறும் வழங்கி வரும் முதல் பரிசினை இந்த ஆண்டும் கூட்டுறவு வீட்டு வசதி இணையம் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் 1998-99 ஆம் ஆண்டில் ரூபாய் 20.15 கோடி அளவுக்கு லாபத்தை ஈட்டியுள்ளதோடு, உறுப்பினர்களுக்கு 15 விழுக்காடு ஈவுத் தொகை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதைப்போலவே HUDCO நிறுவனமும், அரி ஓம் ஆஸ்ரம டிரஸ்ட்டும் இணைந்து நடத்திய போட்டியில், கிராமிய வீட்டு வசதித் திட்டத்தில், சிறந்த வீடுகளை சிறப்பானதாகவும், சிக்கனமாகவும் கட்டியதற்காக தருமபுரி மாவட்டம் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் பரிசு பெற்றிருக்கிறது.

நாட்டிற்கு நல்ல பல திட்டங்களை நாளும் வழங்கி வரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏழைகள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்ட தமிழ்நாடு ஊரக வீட்டு வசதிக் கழகத்தைத் தொடங்கினார்கள்.

1999-2000 ஆண்டில் 2000 வீடுகளை பீடித் தொழிலாளர்களுக்காகக் கட்ட தொழிலாளர் நல வாரியம் ஒப்படைத்துள்ளது. இதில் தற்போது திருநெல்வேலி, வேலூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களில் ரூபாய் 5.28 கோடி மதிப்பீட்டில் 1,552 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 448 வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுக்குமாடி வீடுகளுக்கு அருகினிலே ஓலைக் குடிசைகள்—ஓலைக் குடிசைகளின் உள்ளே ஏழை இதயங்கள், 'அடடா! இதுபோன்ற வீடுகள் என்றேனும் நமக்கும் கிடைக்குமா? இயலுமா?' என ஏங்கித் தவித்த ஏழைகளின் கனவு நனவாகும் வகையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட நம் இதயம் கமழும் இனிய முதல்வர் ஆற்றல்மிகு கலைஞர் அவர்கள் 1970-ல் ஆரம்பித்து வைத்ததுதான் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். சென்னை நகரில் மட்டும் இதுவரை 59,599 குடியிருப்புகளும், பிற மாவட்டங்களில் 7,660 குடியிருப்புகளும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்டு இருக்கின்றன. சென்னை மாநகரின் மொத்த மக்கள் தொகையில் 35 விழுக்காட்டிற்கு மேலாக குடிசைகளில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக இந்த வாரியம் திட்டமிட்டிருக்கிறது.

மைய அரசின் பத்தாவது நிதிக் குழு வழங்கிய ரூபாய் 60 கோடி சிறப்பு மானியத் தொகையைக் கொண்டு, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ரூபாய் 31 கோடி மதிப்பீட்டில் 3,084 குடியிருப்புகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, வீட்டு வசதி, போக்குவரத்து, சாலை வசதி, தொழிற்சாலை வசதி மற்றும் மனித வாழ்க்கைக்குத் தேவையான இதர வசதிகளை சமச்சீரான வகையில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டி அந்த வகையில் நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்த வகையில் நகர் ஊரமைப்புத் துறையின் மூலம் மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள், புறநகர் வளர்ச்சித் திட்டங்கள், தொன்மை வாய்ந்த நகர் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்து, அவ்வப்போது நிலவிடும் தேவைக்கேற்ப மாறுதல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகரம், நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று, சீர்மிகு சென்னையாய், மேயர் அவர்களுடைய சிங்காரச் சென்னையாய் மாறி வருகிறது. சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகரப் பகுதிகள் அடங்கிய எல்லையில் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டில் 95 இலட்சமாகப் பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைகளை தொலைநோக்குப் பார்வையுடன் அணுகி, ஆக்கபூர்வமான வகையில் திட்டங்களைத் தீட்டி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பணியாற்றி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது சென்னை கடற்கரை-திருமயிலைவரை செயல்பட்டு வரும் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை, வேளச்சேரிவரை நீட்டித்து, இரண்டாம் கட்டப் பணிகள் ரூபாய் 733 கோடி செலவில் மிக வேகமாக நடந்தேறி வருகின்றன. இப்பணிகள் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடியும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாம் கட்டமாக பரங்கிமலை வரை இத்திட்டத்தை நீட்டிக்க தமிழக அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தின் செயலாக்கத்தை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகிறது. சென்னை-கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் புறநகர்ப் பேருந்து முனையம் அமைக்கும் பணி, ரூபாய் 89.21 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இப்பணி 2001 ஆம் ஆண்டு மே திங்களில் முடிவு பெற்று புதிய பேருந்து முனையம் செயல்படத் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகர் சென்னையில் வசிப்பதற்கேற்ற வகையில் எழிலார்ந்த தோற்றத்துடன் 240 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அரசினர் தோட்டத்தில் அழகிய வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இக்குடியிருப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள் திறக்கப்பட உள்ளது; உங்களுக்கு வழங்கப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டு மக்கள் நலனில் நாட்டம் மிக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டங்களான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், சிறப்பு கால்நடைப் பாதுகாப்புத் திட்டம், கணினி மயமாக்கும் திட்டம், பூமாலைத் திட்டம் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டி அகில இந்தியாவிலேயே முன்னுதாரணமாகத் திகழும் வகையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-40

இப்போதுதான் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. காட்டிலே ஒரு நரி இருந்தது. அசாதாரண கற்பனைகளில் மிதந்தது. காலத்தை ஓட்டும் நரி அது. ஒருநாள், பனை மரத்தின் கீழ் இருந்து, கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்து இருந்தது. திடீரென, இந்த உலகம் புரண்டுவிட்டால், என்னவாகும் என்று நினைத்தது நரி. அந்த நேரம் பார்த்து, பனை மரத்திலிருந்து பழுத்த பனம்பழம் ஒன்று பலத்த சத்தத்துடன் தொப்பென்று விழுந்தது. கண்களை மூடியிருந்த நரி பனம்பழம் விழுந்ததைப் பார்க்காமல், உலகம்தான் புரண்டுவிட்டது என்று நினைத்து, பயந்து நடுங்கி, தலைதெறிக்க கண்முன் தெரியாமல் ஓட ஆரம்பித்தது. எதிரே ஒரு முயல் கூட்டம் வந்தது. ஓடுகின்ற நரியைப் பார்த்து, 'ஏன் இப்படி அலறித் துடிக்கிறீர்கள்' என்று கேட்டது. 'ஐயோ, உலகம் புரண்டுவிட்டது என்றும், நான் ஓடுகிறேன்' என்றும் சொன்னது. 'உலகம் விழுந்து விட்டதா, நாங்களும் இங்கிருந்தால் ஆபத்து' என்று சொல்லி, நரியுடன் சேர்ந்து முயல் கூட்டமும் ஓட ஆரம்பித்தது. இவை ஓடுவதைப் பார்க்க வந்த குதிரைகள், யானைகள், மான்கள், சிறுத்தைகள், கரடிகள் என

ஆயிரக்கணக்கான கானகத்து மிருகங்கள் எல்லாம், உலகம் புரண்டுவிட்டது என்று, நரி சொன்ன புரளியை நம்பி, நரியின் பின்னால் ஓட ஆரம்பித்தன.

இந்த நேரத்திலே எதிரே ஒரு சிங்கம் வந்தது. தலைதெறிக்க ஓடும் மிருகங்களைப் பார்த்து, 'ஏன் இப்படி ஓடுகிறீர்கள், என்ன நேர்ந்தது உங்களுக்கு' என்று கேட்டது. அதிலே, ஒரு கரடி, 'ஐயோ பெரிய ஆபத்து வந்துவிட்டது. உலகமே புரண்டுவிட்டது, அதற்கு பயந்துதான் ஓடிக் கொண்டிருக்கிறோம்' என்றது. 'உலகமாவது விழுவதாவது என்ன பைத்தியக்காரத்தனம்? உலகம் விழும்போது நீ, நேரில் பார்த்தாயா''? எனக் கரடியைப் பார்த்துக் கேட்டது சிங்கம். 'இல்லை, நான் பார்க்கவில்லை. சிறுத்தைதான் சொன்னது' என்றது கரடி. சிங்கம், 'உலகம் விழும்போது, நீ நேரில் பார்த்தாயா' என்று கேட்டது. 'இல்லை, நான் பார்க்கவில்லை, யானையார்தான் சொன்னது' என்றது சிறுத்தை. இப்படி ஒவ்வொரு மிருகமும், நான் பார்க்கவில்லை அவர்கள்தான் சொன்னார்கள். அதனால்தான் ஓடி வந்தோம் என்று சொல்ல கடைசியில் நரியைப் பார்த்து, 'உலகம் விழுந்துவிட்டது என்று முதலில் சொன்னது நீதானே, உலகம் விழுந்ததை நீ கண்ணால் பார்த்தாயா' என்று கேட்டது சிங்கம். 'உலகம் விழும்போது, நான் கண்களை மூடிக்கொண்டு இருந்துவிட்டேன். பயங்கரமான சத்தம் மட்டும்தான் கேட்டது. அந்த ஓசையைக் கேட்டுவிட்டு நான் ஓடி வந்துவிட்டேன்' என்றது நரி. 'அதோ, அந்தப் பனை மரத்தின் கீழே படுத்திருந்தபோதுதான், உலகம் விழுந்ததைப் பார்த்தேன், இல்லை, இல்லை உலகம் விழுந்த ஓசையைக் கேட்டேன்' என்றது நரி.

சிங்கம் பனைமரத்தின் கீழே போய் சுற்றும் முற்றும் பார்த்தது. அங்கே ஒரு பனம்பழம் விழுந்து இருப்பதைக் கண்டது. பனம்பழம் விழுந்த ஓசையைக் கேட்டு, உலகமே விழுந்துவிட்டது என்று சொன்ன நரியைப் பார்த்து, கடிந்துவிட்டு, நரியின் புரளியை நம்பி வந்த மற்ற மிருகங்களைப் பார்த்து, 'யார் எதைச் சொன்னாலும், நம்பி விடுவதா, நடக்குமா, நடக்காதா, உண்மையா, பொய்யா, என்று கொஞ்சமாவது யோசனை செய்து பார்க்க வேண்டாமா; உலகமும் புரளவில்லை, ஒன்றும் நடக்கவில்லை. அவரவர் இடங்களுக்கு அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்' என்றது சிங்கம்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த முயலைப் போலத்தான், சிலர் இந்த ஆட்சியிலே கற்பனையான குறைகளைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். மக்கள் விரோத ஆட்சி என்று கூக்குரலிட்டு, மாயாஜாலம் காட்டுகிறார்கள். அதையும் உண்மை என்று



நம்பி சிலர் ஆமாம் போடுகிறார்கள். மக்களுக்காக, 60 ஆண்டுகாலம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தமிழ் இனத்தைக் காத்துவரும், தலைவர் முதல்வருடைய ஆட்சியிலே, மகத்தான திட்டங்களை, இந்த ஆட்சி செய்து, சிறப்பாக நடத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையிலே சில அறிவிப்புகளை வழங்க இருக்கிறேன்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் காலியாக உள்ள நிலத்தில் வணிகக் கோபுரக் கட்டடம் மற்றும் அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

சென்னை வில்லிவாக்கம் பகுதியில் ரூபாய் 5.31 கோடி செலவில் 110 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் கட்டப்படும்.

சென்னை மாநகரத்தின் மையப் பகுதியில் உள்ள நுங்கம்பாக்கத்தில், 6.63 கோடி ரூபாய் செலவில் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் கட்டப்படும். இத்திட்டப் பகுதியில் குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை போன்ற வசதிகளுடன் கான்கிரீட் நடைபாதை அமைத்துத் தரப்படும்.

சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் 92 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் அடங்கிய கோபுரக் கட்டடம் ரூபாய் 14.85 கோடி செலவில் கட்டப்படும்.

சென்னை அறிஞர் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் பகுதியில் மத்திய அரசு நிறுவனமான எண்ணெய் மற்றும் எரிவாயு குழுமத்திற்கு ரூபாய் 3.51 கோடி செலவில் 14 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் வல்லன்குமாரவிளையில் ரூபாய் 3.40 கோடி செலவில், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 63 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 55 வீடுகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 7 வீடுகளும் கட்டப்படும்.

ஈரோடு முத்தம்பாளையத்தில் ரூபாய் 4.56 கோடி செலவில் 30 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளும் 75 நடுத்தர வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளும் 15 குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளும் கட்டப்படும்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பகுதி-2-ல் ரூபாய் 1.80 கோடி செலவில் 60 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம், விளாங்குறிச்சியில் ரூபாய் 7.50 கோடி செலவில் 200 வீடுகளும் வெள்ளக்கிணறு பகுதியில் ரூபாய் 6.00 கோடி செலவில் 260 வீடுகளும் கட்டப்படும்.

மதுரை மாவட்டம், அண்ணா நகரில் ரூபாய் 6 கோடி செலவில் 200 வீடுகளும் மதுரை வீட்டு வசதிப் பிரிவு அலுவலகப் பகுதியில் ரூபாய் 2.62 கோடி செலவில் 60 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும்.

கரூரில் ரூபாய் 1.40 கோடி செலவில் 5 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் 55 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ரூபாய் 3.99 கோடி செலவில் 92 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்படும்.

தருமபுரி மாவட்டம், ஏ. ஜெட்டிஹல்லியில், ரூபாய் 8.44 கோடி செலவில் 68 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும், 102 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் 87 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் கட்டப்படும்.

பிற்பகல் 1-45

அரியலூர் குரும்பன்சாவடி திட்டம் பகுதி 1-ல் 213 மனைகள் மற்றும் 50 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகளும் அடங்கிய கட்டமைப்பு வீட்டு வசதித் திட்டம் ரூபாய் 3.19 கோடி செலவில் செயல்படுத்தப்படும். குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூபாய் 7.03 கோடி மதிப்பீட்டில் 1,631 மனைகள் மேம்படுத்தப்படும். நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூபாய் 44.76 கோடி மதிப்பீட்டில் 4,732 மனைகள் மேம்படுத்தப்படும். உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் ரூபாய் 70.21 கோடி மதிப்பீட்டில் 4,165 மனைகள் மேம்படுத்தப்படும். நாகப்பட்டினம் பால்பண்ணைச்சேரியில் ரூபாய் 1.80 கோடி செலவில் மனைகள் மேம்படுத்தப்படும்.

கோவை மாவட்டம், தெலுங்குபாளையத்தில் மனைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூபாய் 4.15 கோடி செலவில் உயர் வருவாய்ப்



பிரிவினருக்காக 113 மனைகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காக 175 மனைகளும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக 183 மனைகளும் அமைக்கப்படும்.

அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட முன் பணமாக வழங்கப்படும் ரூபாய் 4 இலட்சத்தை 6 இலட்சமாக உயர்த்தியுள்ளதுடன் இதற்காக இந்நிதியாண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டத்தைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் மட்டும் 2,144 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இந்த நிதியாண்டில் பட்டினப்பாக்கம், திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், பெரம்பலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தேவக்கோட்டை, வல்லன்குமாரவிளை, முத்தம்பாளையம், மன்னார்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலேயும் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் 914 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படும்.

அதேபோல 9,637 குடிசைமாற்று குடியிருப்புகளின் சிறப்புப் பழுது பார்க்கும் பணிக்காக மதுரை, சேலம், திருநெல்வேலி, கோவை, திருச்சி, கடலூர் ஆகிய நகரங்களில் பகுதி 2 திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 7,000 வீடுகள் கட்டுவதற்கு, நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 5,000 வீடுகள் கட்டுவதற்கு ரூபாய் 170 கோடி வீட்டு வசதி இணையத்தால் கடன் வழங்கப்படும். பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு ரூபாய் 5 கோடி கடன் வழங்கப்படும். வீடு சார்ந்த கடைகள் உள்ள கட்டடம் கட்டுவதற்கும், இப்போது புதிதாக கடன் வழங்க உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

கடனுக்கு ஈடாகக் காட்டப்படும் கட்டட மதிப்பைக் கணக்கிடும்போது சதுர அடிக்கு ரூபாய் 350 என்பதை மாற்றி ரூபாய் 450-ஆக உயர்த்தப்படுகிறது. வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கு சுமார் 5,000 வீடுகளுக்கு 50 கோடி கடன் வழங்கப்படும்.

நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 25,000 வீடுகள் கட்ட ரூபாய் 450 கோடி கடன் வழங்கப்படும்.

பெருகி வரும் வீட்டு வசதித் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கோடு 2000-2001 ஆம் நிதியாண்டில் மேலும் 30 புதிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் ஏற்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் பீடித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் 3 ஆயிரம் வீடுகள் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்படும். பீடித் தொழிலாளர்களுக்குக் கட்டப்படும் வீடுகள் 34,000 ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. இதனுடைய மாதிரி வடிவமைப்பை மாற்றியமைத்து ஒவ்வொரு வீடும் ரூ.40,000 அளவில் கட்டப்படும்.

தமிழகத்தினுடைய தொன்மைவாய்ந்த நகரங்களான செட்டிநாடு, வாலிநோக்கம், மருதூர், பிச்சாவரம், மரக்காணம் ஆகிய 5 நகரங்களுக்கு ரூபாய் 3.50 இலட்சம் செலவில் நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படும். முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களை செயல்படுத்த நிதியுதவியாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும். ரூபாய் 8 இலட்சம் செலவில் மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்த பின்வரும் 12 வட்டங்களில் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப் படும்: கிருஷ்ணராயபுரம், வானூர், செய்யார், பாப்பிரெட்டிப்பட்டி, ஆரணி, உடையார்பாளையம், திட்டக்குடி, காப்பகவள்ளி, ஒட்டன்சத்திரம், கீழ்வேளூர், குடவாசல், கந்தர்வகோட்டை.

நவீன தொழில்நுட்ப முறையான புவியமைப்பு தகவல் முறையினை பயன்படுத்தி திருவண்ணாமலை உட்பட மூன்று நகரங்களுக்கான முழுமைத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்ட வரைபடங்கள் கணினி மயமாக்கப்படும். சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 26 ஆயிரம் குடும்பங்களுக்கு ரூபாய் 30 கோடி செலவில் சுற்றுச்சுவர்களுடன் கல்நார் தகடுகளாலான கூரை கொண்ட வீடுகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த அந்தப் பணி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



வெள்ளக்குறைப்புப் பணிகளின் திட்டத்தின்கீழ் சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கத்தில் 2000-2001 ஆம் ஆண்டிலே மேலும் 1,600 வீடுகள் ரூபாய் 15.55 கோடி செலவில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும். நல்ல உறைவிடமாக மேம்படுத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின்விளக்குகள், மழைநீர் வடிகால் ஏற்படுத்த 30,000 நகர குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு ரூபாய் 6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது பேரூராட்சிப் பகுதிகளுக்கும், நகராட்சிப் பகுதிகளுக்கும் ஒதுக்கப்படும்.

1999ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தில் திருச்சி மாநகரில் 2,000 குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 2.71 கோடி செலவில் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகள்மீது அளித்த ஆலோசனைகளை, கூறிய கருத்துக்களை உரிய முறையில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் தொகுதிகளில் அரசு ஊழியர்கள் குடியிருப்புகள் கட்டக் கோரியுள்ளனர். மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடங்களில் மட்டுமே அரசு ஊழியர்கள் குடியிருப்புகள் கட்டுவதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. தாலூகா தலைமையிடங்களில் குடியிருப்புகளின் தேவையும், அதற்கான நிலமும் கிடைத்தால், அதைப்பற்றி தனியே பரிசீலிக்கப்படும். ஆகவே உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக் காட்டியவைகள் குறித்து, நான் தெரிவித்துள்ள கருத்துகளை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குடிசைப்பகுதி மாற்று வாரிய அமைச்சரவர்கள் ஒரு விளக்கம் அளிப்பதற்கு அனுமதி கேட்டிருந்தார். இப்போது அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லக்குமார் அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்துள்ளார்கள். கடந்த கால ஆட்சியில், அதாவது 1994-95-ல் ஏற்கப்பட்ட tender-ல், 1998-99 தணிக்கைக்குழு அறிக்கையில் உள்ளதை அவர் குறிப்பிட்டுள்ளார். Tender 1994-95-ல் ஏற்கப்பெற்றது அ.தி.மு.க. ஆட்சியில். இந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினரவர்கள் Audit Report-ஐப் படித்தாரே தவிர, அதில் உள்ள உண்மையை மறைத்துவிட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"Tenders were invited in tender notice No.S.E. (M.C.II) D2/0296/94, dated 29-12-1994 fixing the last date for the receipt of tender as 16-02-1995. But only single tenders were received for all the three phases as shown below" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மூன்று வேலைகளும் J.J. நகர், தியாகராசன் சாலையிலே, நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த Audit Report-லே 1998-99-லே, சொல்லப்பட்டிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் மறைத்து இந்த ஆட்சியில் நடைபெற்றதைப்போல ஒரு பாவனையை, இப்படிப்பட்ட ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார் என்பதை இந்தப் பேரவையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**Hon.THIRU A. RAHMANKHAN:** Point of Order, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1994-95-ல் நடைபெற்ற சம்பவம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இந்த ஆட்சியில் நடைபெற்ற சம்பவம்போல—62 ஆம் பக்கம் Audit Report-ல் சொல்லப்பட்டிருந்தும்-வேண்டுமென்றே,



திட்டமிட்டு, உள்நோக்கத்தோடு, அவையை திசைதிருப்புகின்ற விதத்திலே அவர் சொல்லியிருப்பதால், I request the Chair to give me permission to raise a Contempt of House, privilege issue against that Member. (Thumping of desks)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது இது அவையின் உரிமை மீறல் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை வைத்து, உரிமைக் குழுவிற்கு அனுப்புவதா, இல்லையா என்று பரிசீலித்து, பின்னர் அறிவிக்கப்படும்.

## (அ) கோரிக்கை எண் 32-வீட்டு வசதி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருத்தப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை. திரு. பி.ஆர்.சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை. திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை. திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"வீட்டு வசதி பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.67,47,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்பகுதி வளர்ச்சி, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன், திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி.ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.



திரு. ஏ.வி.ஏ. நாசர், இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

திரு. கே. தங்கமணி இருக்கையில் இல்லை. திரு. கே. தங்கமணி, அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீரமானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*பிற்பகல் 1-55*

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை. திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நகர்ப்பகுதி வளர்ச்சி பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 38,51,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

157. 2000-2001 ஆம் ஆண்டில் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பிற்கு திருத்தம் (தமிழ், ஆங்கிலம்)

158. மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

159. மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு-I

*(73 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### மானியக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2000-2001

**1. முன்னுரை:**

1.1. தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளை மேற்கொண்டுள்ளது. தமிழக அரசின் இக்குறிக்கோளை நிறைவு செய்யும் வண்ணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், ஊரக வீட்டு வசதிக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுக்குத் தகுந்த வசிப்பிடங்கள் உருவாக்கித் தரும் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தி வருகின்றன.

1.2. ஒன்பதாவது திட்டக் காலத்தில் தேவையான அளவிற்கு வீட்டு வசதி குடியிருப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தினை "தேசிய வீட்டு வசதிக் கொள்கை"வலியுறுத்தியுள்ளது. வீட்டு வசதித் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுவதற்கு பல்வேறு நிதி நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல்வேறு முகமைகளும் பெரும் பங்கு வகிக்க வேண்டும். பொருத்தமான கட்டடப் பொருட்கள் மற்றும் விலை குறைந்த தொழில்நுட்பம் ஆகிய பிரச்சினைகள் ஆராயப்பட வேண்டும்.

1.3. வருங்காலத்தில் பெரிய அளவில் வீட்டு வசதித் திட்டங்கள் தயாரித்துச் செயல்படுத்துவது, அரசின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக இருக்கும். பல்வேறு வருமானப் பிரிவில் உள்ள மக்களுக்கு அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடனும் வாங்கக்கூடிய விலையிலும் வீட்டு வசதி செய்துகொடுப்பது என்ற அடிப்படையில் தமிழ்நாடு அரசு திட்டங்களை வகுத்து வருகிறது. இதன் மூலம் மக்கள் குறிப்பாக ஏழைகள் மற்றும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோர் விரைவில் வீடுகள் சொந்தமாகப் பெறுவதற்கு ஏதுவாகிறது.

வீட்டு வசதியினை அதிகரிக்கவும், பராமரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் வீட்டு வசதிக்கு முதலீடு செய்வதற்கென மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

1.4. மேலும், குடிசைப்பகுதிவாழ் மக்களின் துயரினைப் போக்கவும் நல்லதொரு நகர மேம்பாட்டினை அடையவும் குடிசைவாழ் மக்களுக்கு மனையுரிமை வழங்கவும் தேவையான தக்க திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. மேலும், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் அடிப்படை வசதிகளுடன்கூடிய வீட்டு மனைகள் உறுப்பினர்களுக்குக் கிடைக்க மனைப் பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பொருளாதாரத்தில் நலிவுற்ற ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலை வீடுகள் கட்டும்பொருட்டு ஊரக வீட்டு வசதிக் கழகம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

2.1. சமுதாயத்தில் உள்ள நடுத்தர வருவாய் மற்றும் அதற்கு மேம்பட்ட வருவாய் உள்ள மக்களின் வீட்டு வசதித் தேவையை நிறைவு செய்வது மட்டுமின்றி, ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள், பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளையும் நிறைவு செய்வதே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். சமூக பயன்பாடுமிக்க, நல்ல தரம் வாய்ந்த வீடுகளைக் கட்டித் தருவதன் மூலம் வாரியம் மேற்கூறிய நோக்கத்தை அடைய முடிகிறது. மேலும் வீட்டு வசதி வாரியம் எல்லா வருவாய் பிரிவினருக்கும் வேண்டிய அனைத்து வசதிகளையும் கொண்ட குடியிருப்புகளை அவர்கள் வாங்கும் திறனுக்கு ஏற்ப உருவாக்கித் தருகின்றது.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சலவைத் தொழிலாளர்கள், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டோர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டோர், தமிழக அரசு ஊழியர்கள், மத்திய அரசு ஊழியர்கள், பத்திரிகையாளர்கள், சமூக சேவகர்கள், விதவை மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர்



ஆகியோருடைய வீட்டு வசதித் தேவைகளை அரசு நிர்ணயித்த விகிதாச்சாரப்படி குடியிருப்புகளை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பணியினைத் தொடக்க காலத்திலிருந்தே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முக்கிய குறிக்கோளாகக்கொண்டு செயல்படுகிறது.

### 2.2. வீட்டு வசதி வாரியத்தின் சாதனைகள்:

கடந்த 39 ஆண்டுகளாக தன்னிறைவுபெற்ற மனைகளையும் வீடுகளையும் ஒதுக்குவதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,80,900 குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 4.83 கோடியாக இருந்த வாரியத்தின் முதலீட்டுச் செலவு 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 250.00 கோடியாக படிப்படியாக உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் பல்வேறு நிலையிலுள்ள மக்களுக்கு அவர்களின் வாங்கும் திறனுக்கேற்ற, தரமான குடியிருப்புகளை உருவாக்குவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் இரட்டை நோக்கம் ஆகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனது செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் குடியிருப்புகளை உருவாக்கி வருகின்றது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புகழ்பெற்ற கட்டடக் கலைஞர்களைக்கொண்டு குடியிருப்புகளுக்குப் புதிய அழகான வெளிப்புறத் தோற்றத்தையும் முகப்புத் தோற்றத்தையும் வடிவமைத்து வருகின்றது. அதன் கொள்கையானது, பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு, குறைந்த வருவாயினருக்கு, நடுத்தர வருவாயினருக்கு மற்றும் உயர் வருவாயினருக்கு என விகிதாச்சார முறைப்படி, வீடுகளைக் கட்டிக் கொடுப்பதாகும்.

### 2.3. வீட்டு வசதி அளிப்பவர் மற்றும் ஊக்குவிப்பவர் என்ற முறையில் வாரியத்தின் பங்கு:

தேசிய வீட்டு வசதிக் கொள்கையின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் "வீட்டு வசதி செய்து கொடுக்கும் நிறுவனம்" என்ற முறையில் நிலம் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றைப் பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் தன் பணிகளை விரிவாக்கி உள்ளது. இதன்படி வாரியம் அதிக அளவு நில மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி சமுதாயத்திலுள்ள எல்லா பிரிவு மக்களுக்கும் வீட்டு வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கி.பி. 2011-ஆம் ஆண்டில் வீட்டு வசதித் தேவை என்பது 175 இலட்சம் குடியிருப்புகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதிக அளவிலான இந்த வீட்டுத் தேவையை நிறைவேற்ற சமுதாயத்தில் உள்ள எல்லா பிரிவு மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்ட வீட்டு வசதி தேவையில் 80 விழுக்காடு பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு மட்டும் தேவைப்படுகிறது. இந்த வீட்டு வசதித் தேவையில் மிகக் குறைந்த அளவில் மட்டுமே தனியார் நிறுவனங்களால் நிறைவேற்ற முடிகிறது. எனவே, அதிக அளவிலான வீட்டு வசதித் தேவையை அரசு நிறைவேற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தத் தேவைகளை நிறைவேற்ற கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளாக அளிப்பது கடினமான ஒன்றாக இருக்கிறது.

ஆகவே, பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு எல்லா அடிப்படை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளை அளிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்கள் தங்கள் வீட்டு வசதித் தேவைகளை நிறைவு செய்கின்றதோடு மட்டுமல்லாது தங்கள் விருப்பத்திற்கேற்ற வடிவமைப்பில் வீடுகளைக் கட்டிக்கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கிறது.

இத் தருணத்தில் தேசிய வீட்டு வசதிக் கொள்கையின் குறிக்கோள்களைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்:

(அ) வீட்டு வசதித் தேவையுள்ள பொதுமக்களுக்கு மேம்படுத்திய மனைகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை வழங்குவதுடன் கட்டடப் பணியாளர்களின் திறமையை அதிகரித்தல்.

(ஆ) வீட்டு வசதிக்கான தனியார் துறையின் முதலீட்டை ஊக்குவித்தல், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்படுத்துதல் மற்றும் வீட்டு வசதிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் பொதுமக்களை ஈடுபடுத்துதல்.

(இ) வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய தடைகளைக் களைதல்.

**2.4. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம்:**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழக அரசு அலுவலர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்பவும் அரசின் முன்னுரிமைப்படியும் வாடகைக்



குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. தற்போது வாரியம் மூலமாக 2,144 வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றது. அதில் 932 குடியிருப்புகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. இந்த நிதியாண்டில் 914 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். எஞ்சிய வீடுகள் அடுத்த நிதியாண்டில் கட்டி முடிக்கப்படும்.

**2.5. வெளி மாவட்டங்களில் உள்ள குடிசை மாற்றுக் குடியிருப்புகள்:**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு வரை, குடிசை மாற்றுக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. மொத்தத்தில் 17,021 குடிசை மாற்று குடியிருப்புகளை வாரியம் கட்டியுள்ளது. தற்போது வெளி மாவட்ட நகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் 9,637 குடிசை மாற்று வீடுகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பராமரித்து வருகிறது. இவை கடந்த 20 முதல் 30 ஆண்டுகளில் கட்டப்பட்டன. சேலம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள குடிசை மாற்றுக் குடியிருப்புகளைச் சிறப்பு பழுதுபார்க்கும் பணிக்காக 2000-2001 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.6. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்:**

இத் திட்டத்தின்கீழ் 1971-72 முதல் இதுவரை ரூ. 28.38 கோடி செலவில் 1,24,405 அலகுகள் வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நில வங்கித் திட்டத்தின்கீழ், 2000-2001- ஆம் ஆண்டில் 444 வீட்டுமனைகள் ரூ. 50 இலட்சம் செலவில் உருவாக்க திட்டமிடப்பட்டு வருகின்றது. அதில் 932 குடியிருப்புகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த நிதி ஆண்டில் 914 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். எஞ்சிய வீடுகள் அடுத்த நிதி ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

**2.7. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்:**

இந்தத் திட்டமானது ஆண்டு வருமானம் ரூ. 30,001-லிருந்து ரூ. 66,000 வரை உள்ளவர்களுக்கானது. ஒரு வீட்டின் விலை அதிகபட்சமாக ரூ. 1.25 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பிற்கான தொகையையும் மாதத் தவணையில் செலுத்தலாம். குடியிருப்பிற்குரிய தொகையில் 25 விழுக்காடு முன்பணமாகச் செலுத்தி, மீதமுள்ள தொகையை அதிகபட்சமாக 15 ஆண்டு காலங்களில் சமமான மாதத் தவணைகளில் 13.5 விழுக்காடுகள் வட்டியுடன் செலுத்தலாம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை 90,476 குடியிருப்புகள் ரூ. 142.57 கோடியில் உருவாக்கியுள்ளது. 2000-2001-ல் 1631 குடியிருப்புகளை ரூ. 7.02 கோடியில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.8. நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

இந்தத் திட்டமானது ஆண்டு வருமானம் ரூ. 66,001-லிருந்து ரூ. 1,20,000 வரையில் உள்ளவர்களுக்கானது. இக்குடியிருப்பிற்கான தொகையை மாதத் தவணையிலும் செலுத்தலாம். குடியிருப்பிற்குரிய தொகையில் 25 விழுக்காடுகள் முன்பணமாக செலுத்தி மீதமுள்ள தொகையை அதிகபட்சமாக 15 ஆண்டு காலங்களில் சமமான மாதத் தவணையில் 14 விழுக்காடுகள் வட்டியுடன் செலுத்தலாம். 2000-2001-ல் 4,732 குடியிருப்புகளை ரூ. 44.76 கோடியில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.9. உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

இந்தத் திட்டமானது ஆண்டு வருமானம் ரூ. 1,20,001-க்கு மேற்பட்டவர்களுக்குரியது. இக்குடியிருப்பிற்குரிய தொகையில் 25 விழுக்காடுகள் முன்பணமாகச் செலுத்தி, மீதமுள்ள தொகையை 15 ஆண்டு காலங்களில் சமமான மாதத் தவணைகளில் 14 விழுக்காடுகள் வட்டியுடன் செலுத்தலாம்.

ஆரம்பம் முதல் இதுவரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ. 883.98 கோடி செலவில் 1,11,001 நடுத்தர மற்றும் உயர் வருவாய் பகுதியினருக்கு குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது.

இந்நிதியாண்டில் 4,165 குடியிருப்புகளை ரூ. 70.21 கோடியில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.10. சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள்

மாநிலம் முழுவதிலும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகளை உருவாக்கும் சிறப்புத் திட்டத்தை 1990-91 ஆம் ஆண்டிலிருந்து



தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களின் வீட்டுவசதி தேவைகளைக் கண்டறிந்து அவற்றை பூர்த்தி செய்யும் வகையில் அவர்கள் குடியிருப்பதற்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை கண்டறிந்து அவற்றில் சில நகரங்களில் வீடுகளைக் கட்டி வருகிறது. இதுவரை, 11,011 வீடுகளும், 10,324 மேம்படுத்தப்பட்ட மனைகளும் அடங்கிய 61 வீட்டுவசதித் திட்டங்கள் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ரூ. 211.70 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.11. நிதி ஆதாரங்கள்

வாரியத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கான நிதி ஆதாரங்கள் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்றன:—

1. ஹட்கோ
2. நிதி நிறுவனங்கள் மூலம் அரசினால் வழங்கப்படும் நிதியுதவி
3. வீட்டுவசதி அபிவிருத்தி நிதி கழகம்/தேசிய வீட்டுவசதி வங்கி/ஆயுள் காப்பீட்டுக் கழகம்
4. வணிக வங்கிகள்
5. வாரியச் சொத்துக்கள் மூலம் பெறப்படும் வருவாய்
6. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்பு நிதி

## 2.12. 2000-2001 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்

**சென்னை**

1. சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசிய விளையாட்டுக் கிராமத்தில் காலியாக உள்ள நிலத்தில் அலுவலகம் மற்றும் வணிக கோபுரக் கட்டடம் ஒன்று கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

2. சென்னை வில்லிவாக்கம் பகுதியில் ரூ. 5.31 கோடி செலவில் 110 உயர் வருவாய் குடியிருப்புகள் கட்டும்பணி மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

3. சென்னை நுங்கம்பாக்கத்தில் ரூ. 6.63 கோடி செலவில் 56 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் கட்டும்பணி மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

[2000 ஏப்ரல் 28

4. சென்னை கலைஞர் கருணாநிதி நகர் பகுதியில் 92 உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகள் அடங்கிய கோபுரக் கட்டடம் ரூ. 14.85 கோடி செலவில் கட்டப்பட உள்ளது.

5. சென்னை அறிஞர் அண்ணா நகரில், மேற்கு விரிவாக்கப் பகுதியில் மத்திய அரசு நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் குழுமத்திற்கு ரூ. 3.51 கோடி செலவில் 14 அடுக்குமாடி வீடுகள் கட்டப்படவுள்ளது.

**புறநகர்**

**1. கன்னியாகுமரி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வல்லான்குமாரவிளையில் ரூ. 3.40 கோடி செலவில் 63 குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீடுகளும், 55 நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகளும் 7 உயர் வருவாய்ப் பிரிவு வீடுகளும் கட்டப்படவிருக்கின்றது.

**2. ஈரோடு**

(அ) ஈரோடு மாவட்டம் முத்தம்பாளையத்தில் 120 வீடுகள் ரூ. 4.56 கோடி செலவில் கட்டப்படவிருக்கின்றது.

(ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் பகுதி-2ல் ரூ. 1.80 கோடி செலவில் 60 நடுத்தர பிரிவினருக்கான வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

**3. கோயம்புத்தூர்**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் விளாங்குறிச்சியில் ரூ. 7.50 கோடி செலவில் 200 வீடுகள் கட்டும்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளைக்கிணறு பகுதியில் ரூ. 6.00 கோடி செலவில் 260 வீடுகள் கட்டும்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

**4. மதுரை**

மதுரை மாவட்டம் அண்ணா நகரில் 200 வீடுகள் கட்டும் பணி ரூ. 6.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.



2000 ஏப்ரல் 28]

**5. கரூர்**

கரூரில் ரூ. 1.40 கோடி செலவில் 5 உயர் வருவாய்ப் பிரிவு வீடுகளும் 55 நடுத்தர வருவாய்ப் பிரிவு வீடுகளும் கட்டப்படவிருக்கின்றது.

**6. நாகப்பட்டினம்**

நாகப்பட்டினம் பால்பண்ணைச்சேரியில் ரூ. 1.80 கோடி செலவில் மனைகள் மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

**7. மதுரை**

மதுரை வீட்டுவசதிப் பிரிவு அலுவலகப் பகுதியில் ரூ. 2.62 கோடி செலவில் 60 உயர் வருவாய்ப் பிரிவினருக்கான குடியிருப்புகள் கட்டப்படவிருக்கின்றது.

**8. வேலூர்**

வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் ரூ. 3.99 கோடி செலவில் 92 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்பட உள்ளது.

**9. தருமபுரி ஏ.ஜெட்டிஹள்ளி**

தருமபுரி மாவட்டம் ஏ. ஜெட்டிஹள்ளியில் ரூ. 8.44 கோடி செலவில் ஒரு கூட்டமைப்பு வீட்டுவசதித் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

**10. அரியலூர்**

அரியலூர் - குரும்பன்சாவடி பகுதி-1 திட்டத்தில் 213 மனைகள் மற்றும் 50 நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் அடங்கிய கூட்டமைப்பு வீட்டுவசதித் திட்டம் ரூ. 3.19 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 3. கூட்டுறவு வீட்டு வசதி

### 3.1. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டுறவு ஒரு செயல்திறன் மிக்க முக்கிய இயக்கமாக இருப்பதால், அரசின் வீட்டுவசதி

கொள்கைக்கு ஏற்ப வீட்டுவசதியினை மேம்படுத்துவதில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் கட்டுவதோடல்லாமல் தரமான வீடுகளையும் வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. இம்மாநிலத்தில் இரண்டடுக்கு முறையில் பன்முக சேவையிலுள்ள இவ்வியக்கத்தில், நகர்ப்புற மக்களின் சேவைக்கென 874 தொடக்கநிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளியோரின் தேவையினை பூர்த்தி செய்ய வட்ட அளவில் 195 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் உள்ளன. மொத்தமுள்ள 1,069 வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களில் 726 சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைக்கப்பட்ட உறுப்பினர் சங்கங்களாகும். அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனைகள் உறுப்பினர்களுக்கு கிடைக்க மனைப்பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல் போன்றவையே கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் முக்கிய நோக்கங்களாகும்.

### 3.2. மேலாண்மை

மக்களாட்சி மேலாண்மை மற்றும் பரிவுணர்வு ஆகியன கூட்டுறவு இயக்கத்தில் இன்றியமையாத காரணிகள் என்பதால் இவற்றை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் தொன்றுதொட்டு கட்டிக்காத்து வருகின்றன.

### 3.3. தமிழ்நாடு கூட்டுறவு விட்டு வசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு ஒருங்கிணைப்பு நிறுவனமாக இருப்பதால் உறுப்பினர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட தேவைப்படும் நிதியுதவியைத் திரட்டித் தருகிறது. வீட்டுவசதி கடன் வழங்க மாநில வீட்டுவசதி இணையத்திற்கு தேவைப்படும் நிதியாதாரங்கள், தமிழ்நாடு அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக்கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படுகிறது. தொடக்கத்திலிருந்து இணைக்கப்பட்ட உறுப்பினர் சங்கங்களுக்கு இதுவரை 9,88,260 வீடுகள் கட்ட ரூ. 2,763.42 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், முதலாவது இடத்தில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றுள்ளது.



### 3.4. 1999-2000 ஆம் ஆண்டில் கூட்டுறவு விட்டுவசதி சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

#### 3.4.1. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக விட்டுவசதித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வீட்டுவசதியினை பெருக்குவதில் தொலைநோக்கு கண்ணோட்டத்தில் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வீட்டுவசதி திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. தற்சமயம் இத்திட்டத்தின்படி புதிய வீடுகட்ட ஒரு வீட்டிற்கு ரூ. 2,000 அரசு மானியத்துடன் சமவெளிப் பகுதியில் ரூ. 10,000-ம், மலைப்பகுதிகளில் ரூ. 12,000-ம் ஹட்கோ நிறுவன நிதியுதவி மூலம் கடன் வழங்கப்படுகிறது. மேலும் பயனீட்டாளர் ஒவ்வொருவரும் தனது சொந்த பங்களிப்பாக ரூ. 2,000 முதலீடு செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து இத்திட்டத்தின்கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ. 399.70 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 6,27,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

#### 3.4.2. கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான விட்டுவசதித் திட்டம்

கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் புதிய வீடுகட்ட வழங்கப்பட்டு வந்த கடனுதவி, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 80,000-லிருந்து ரூ. 1,00,000 ஆகவும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 1,20,000-லிருந்து ரூ. 2,00,000 ஆகவும் 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத் தொடக்கத்திலிருந்து இதுவரை 67,444 வீடுகள் கட்டிமுடிக்க ரூ. 293.58 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் நிதி ஆண்டில் மட்டும் குறைந்த வருவாய்ப் பிரிவில் 4,730 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவில் 2,018 வீடுகளும் கட்ட முறையே ரூ. 29.36 கோடி மற்றும் ரூ. 21.11 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

#### 3.4.3. நகர்ப்புற விட்டு வசதித் திட்டம்

1999-2000 ஆம் நிதி ஆண்டில் இதுவரை 20,827 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்ட ரூ. 364 கோடி கடன் வழங்கப்பட்டதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினையும் தாண்டிவிட்டது. நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதி

சங்கங்கள் மூலம் நகர்ப்புறங்களில் இதுவரை 2,51,498 வீடுகள் கட்ட ரூ. 1,954.20 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.4. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, சமத்துவபுரம் திட்டத்திற்கு வீட்டின் கட்டுமானச் செலவு, அரசு உதவித் தொகையான ரூ. 35,000-ஐ காட்டிலும் அதிகரிக்கின்ற நேர்வுகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் கடனுதவி அளித்து வருகிறது. 1999-2000 ஆம் நிதியாண்டில் 2,471 வீடுகள் கட்ட ரூ. 2.39 கோடி கடனுதவி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் 4,273 வீடுகள் கட்ட ரூ. 4.03 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### 3.4.5. வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்

பழைய வீடுகளை புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ. 50,000 வீதம் கடனுதவி வழங்கும் புதிய திட்டம் 1998-99 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிலிருந்து இக்கடன் ரூ. 1,00,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் 1999-2000 ஆம் நிதியாண்டில் 954 வீடுகளை புதுப்பித்து விரிவாக்கம் செய்ய ரூ. 3.87 கோடி கடன் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் 39,465 வீடுகளை புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்யவும் மொத்தம் ரூ. 14.98 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

### 3.4.6. நகர்ப்புற நலிவுற்றோருக்கான திட்டம்

இத்திட்டத்தின்படி நகர்ப்புறப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற 19,517 பயனாளிகள் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ள ரூ. 44.33 கோடி கடன் வழங்கப்பட்டது. இதில் 1999-2000 ஆம் ஆண்டில் 9,866 வீடுகள் கட்ட ரூ. 23.75 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 3.5. 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

வீட்டுவசதி தேவையில் ஒரு பெரும் பகுதியினை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ஈடுசெய்யும் பொருட்டு 2000-2001 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்கான முதலீட்டுத் தொகை ரூ. 675.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அ. குறைந்த வருவாய்ப் பிரிவு (ஊரகம்) | 70.00 |
| ஆ. நடுத்தர வருவாய்ப் பிரிவு (ஊரகம்) | 100.00 |
| இ. பெரியார் நினைவு சமத்துவபுரம் | 5.00 |
| ஈ. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் | 450.00 |
| உ. வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் | 50.00 |
| மொத்தம் | **675.00** |

1. கிராமப்புறங்களிலுள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 2000-2001 ஆம் ஆண்டில் 7,000 வீடுகள் கட்டுவதற்கும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 5,000 வீடுகள் கட்டுவதற்கும் மொத்தம் ரூ. 170 கோடி கடன் வழங்கப்படும்.
2. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தின்கீழ் ரூ. 5 கோடி கடன் வழங்கப்படும்.
3. வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்கு 2000-2001 ஆம் நிதி ஆண்டில் 5,000 வீடுகளுக்கு வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 50 கோடி கடனுதவி அளிக்கப்படும்.
4. நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் 25,000 வீடுகள் கட்ட ரூ. 450 கோடி கடனுதவி வழங்கப்படும்.

## 4. தமிழ்நாடு ஊரக வீட்டுவசதிக் கழகம்

4.1. பொருளாதாரத்தில் நலிவுற்ற ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் மலிவு விலை வீடுகள் கட்ட இக்கழகம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

4.2. பீடித் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நல வாரியம் 1999-2000 ஆம் ஆண்டில் 2,000 வீடுகள் கட்ட முடிவெடுத்து இத்திட்டத்தைச் செயல்படுத்த இக்கழகத்திடம் இப்பணியை ஒப்படைத்துள்ளது. ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 34,000 ஆகும். இம்மதிப்பீட்டில் ரூ. 17,000 மைய அரசு மானியமாகவும், மீதமுள்ள

[2000 ஏப்ரல் 28

ரூ. 17,000 ஹட்கோ கடனுதவியும் ஆகும். திருநெல்வேலி, வேலூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் முதல் கட்டமாக 1,552 வீடுகள் கட்ட ரூ. 5.28 கோடியில் திட்டமிடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்க உள்ளன. அடுத்த கட்டமாக இந்நிதியாண்டில் மீதமுள்ள 448 வீடுகள் கட்டும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### 4.3. 2000-2001ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2000-2001ஆம் நிதி ஆண்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பீடித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 12.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 3,000 வீடுகள் கட்டப்பட உள்ளன. ரூ. 40,000 திட்ட மதிப்பீட்டில் வீட்டின் மாதிரி அமைப்பு மாற்றியமைக்கப்பட்டும், தரைப் பரப்பளவு கூட்டப்பட்டும் நிறைவேற்றப்படவுள்ளது. இம்மதிப்பீட்டில் ரூ. 20,000 மைய அரசு மானியமாகவும், மீதமுள்ள ரூ. 20,000 ஹட்கோ கடனுதவியும் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பெற்று இக்கழகத்தின் மூலம் கட்டப்பட உள்ளது.

## 5. அரசு அலுவலர்கள் வீடுகட்ட முன்பணம்

5.1. வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கும் மற்றும் இந்திய அரசுப் பணி அலுவலர்களுக்கும் வீடுகட்டும் முன்பணக் கடன் வழங்கும் பொருட்டு முறையே ரூ. 4.00 இலட்சம் மற்றும் ரூ. 7.50 இலட்சம் உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. இந்நிதியாண்டிலிருந்து தமிழக அரசு ஊழியர்களுக்கு ரூ. 4 இலட்சமாக இருந்த உச்சவரம்பு ரூ. 6 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தத் தொகை கீழ்க்கண்ட இனங்களுக்கு வழங்கப்படுகிறது:—

1. வீட்டுமனை வாங்கி வீடு கட்டுதல்
2. கட்டுமானப் பணி
3. தயார்நிலை வீடு (தனியார்)
4. தயார்நிலை வீடு (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்)
5. விரிவாக்கம்
6. மேம்படுத்துதல்

ஏற்கெனவே கட்டப்பட்ட வீட்டினை விரிவாக்கவும் அல்லது மேம்படுத்தவும் ரூ. 2.00 இலட்சம் அரசால் கடனாக வழங்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 28]

5.2. 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் ரூ. 100.00 கோடி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| **அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்** | |
| இந்திய அரசுப் பணி அதிகாரிகள் | 2.00 |
| தலைமைச் செயலக ஊழியர்கள் | 7.50 |
| பிற அரசு ஊழியர்கள் | 80.50 |
| ஊராட்சி ஒன்றியப் பணி ஆசிரியர்கள் | 10.00 |
| மொத்தம் .. | **100.00** |

### 5.3. வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனம்/இந்தியன் வங்கி/வீட்டுவசதி நிறுவனம்/கனரா வங்கி வீட்டுவசதி நிறுவனம்

அரசுக் கடன் உடனடியாகக் கிடைக்கப்பெறாத அலுவலர்களுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் அரசு வீட்டுவசதி மேம்பாட்டு நிறுவனம், கனரா வங்கி, இந்தியன் வங்கி ஆகிய நிதி நிறுவனங்களின் மூலமாக 5 விழுக்காடு வட்டி மானிய சலுகையோடு நேரடியாக நிதி வழங்கும் திட்டத்தை அரசு கொண்டுவந்தது. இத்திட்டத்தின்கீழ் இதுவரையில் இந்நிறுவனங்கள் முறையே ரூ. 15.00 கோடி/ரூ. 5.00 கோடி/ரூ. 5.00 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது.

### 5.4. தமிழ்நாடு அரசு ஊழியர் வீடுகட்டும் முன்பணம் சிறப்பு குடும்ப பயனளிப்பு நிதித் திட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் வீடுகட்டும் முன்பணம் சிறப்பு குடும்ப பயனளிப்பு திட்டம் 1-4-1986 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடுகட்ட முன்பணம் பெற்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கடன் தொகையினை திரும்ப செலுத்தும் தொகையில் ஒரு விழுக்காடு தொகையை மாதச் சந்தாவாகக் கடன் பெற்ற மாதத்திற்கு அடுத்த மாதம் முதல் செலுத்த வேண்டும். ஓய்வு பெறுவதற்குமுன் 5 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ள அலுவலர்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முடியும். கடன் பெற்றவர் பணிக்காலத்தில் மரணம் அடைந்தால் அவரது கடன் முழுவதுமாகச் செலுத்தப்படாமல் இருப்பின், இத்திட்டத்தின்கீழ் எஞ்சிய கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

[2000 ஏப்ரல் 28

## 6. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

*6.1.* நகரங்களில் குடிசைப்பகுதிகள் அமைந்திருப்பது ஒரு குறிப்பிட்ட சதவிகித மக்கட் தொகை மிகவும் வறுமை நிலையில் வாழ்வதைக் கோடிட்டுக் காட்டுகிறது. பொதுவாக நகரப்பகுதிகளில் உள்ள நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படும்பொழுது ஏழை மக்களுக்கு அவர்கள் செலுத்தும் திறனுக்கு ஏற்ற விலையில் அவை கிடைக்கப்பெறாததன் காரணமாகவும் அதற்குரிய வழிமுறைகள் மறுக்கப்படுவதன் காரணமாகவும் குடிசைப்பகுதிகள் உருவாகின்றன. நகரப்பகுதிகளில் ஒருமுகப்படுத்தப் பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகள் ஒரு காந்தவிசையாக கிராமப்பகுதி மக்களை நகரத்திற்கு ஈர்க்கின்றன. இவ்வாறு நகரங்களுக்கு குடிபெயரும் மக்களிடம் தங்கள் வாழ்க்கையை நடத்த போதிய திறனோ வருமானமோ இருப்பதில்லை. இம்மக்கள் சேவைப் பிரிவுகளில் பணிபுரிவதன் காரணமாக அதன்மூலம் கிடைக்கப்பெறும் குறைந்த வருவாயினைக் கொண்டு தங்கள் செலுத்தும் திறனுக்கேற்ற வீட்டுவசதியினை ஏற்படுத்திக்கொள்ள இயலாத காரணத்தால் அவர்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள அரசு மற்றும் தனியார் வெற்று நிலங்களை ஆக்கிரமித்து குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இதுபோன்ற குடியமைப்புகள் கழிவுநீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாக சுகாதாரமற்ற சூழ்நிலையில் தற்காலிக குடிசைகளாக அமைந்துள்ளன. இக்குடியமைப்புகள் குறைந்த வருவாயின் காரணமாக திணிக்கப்பட்ட நகர ஏழ்மையின் வெளிப்பாடாகும். இக்குடியமைப்புகள் பின்னர் குடிசைப் பகுதிகளாக மாறுவதுடன் இயற்கையான மக்கள் பெருக்கம் மற்றும் தொடர்ந்து நடைபெறும் குடியமர்தல் காரணமாகக் குடிசைப்பகுதிகள் பல்கிப் பெருகுகின்றன.

குடிசைப்பகுதிகள் ஒவ்வொரு நகரத்திலும் ஓர் அடையாளச் சின்னமாகவே திகழ்கின்றன. உரிய காலத்தில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிடில் குடிசைப்பகுதிகளால் ஏற்படும் பிரச்சினைகள் பெரிதாகி அவை நகர மேம்பாடு ஒரு ஒழுங்கற்ற நிலையினை அடைய நேரிடும். ஓர் உன்னதமான சூழ்நிலையில், வீட்டுவசதி, மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். இதனைக் கருத்தில்கொண்டு குடிசைப்பகுதிவாழ் மக்களின் துயரினைப் போக்கவும் நல்லதொரு நகர மேம்பாட்டினை அடையவும் குடிசைவாழ் மக்களுக்கு மனையுரிமை வழங்கவும் குடிசைப்பகுதிகளை மாற்றி அடுக்குமாடி வீடுகள் கட்டவும் மற்றும் குடிசைப்பகுதிகளை மேம்படுத்தவும்



2000 ஏப்ரல் 28]

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் தோற்றுவிக்கப்பட்டது:—

### 6.2. குறிக்கோள்கள்

(அ) நகரப்பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மற்றும் அபாயகரமான பகுதிகளில் வாழ்ந்துவரும் குடிசைவாழ் குடும்பங்களைத் தூய்மையான சுற்றுப்புறச் சூழலுடன் நகருக்கு அருகாமையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய இடத்தில் மாற்றிக் குடியமர்த்துதல்.

(ஆ) தனியார் குடிசைப்பகுதிகளில் வாழ்ந்துவரும் வாடகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

(இ) அனைத்துக் குடிசைப்பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை, மழைநீர் கால்வாய், பொதுக் கழிப்பிடங்கள், கழிவுநீர் வெளியேற்றும் வசதி மற்றும் தெரு மின்விளக்குகள் அமைத்தல்.

### 6.3. குடிசைப்பகுதிகள் பற்றிய கொள்கைகள்

(அ) நகரப்பகுதிகளில் சுகாதாரமற்ற நெரிசலான இடங்களில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்.

(ஆ) கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப்பகுதிகளைத் தேர்வுசெய்து அவற்றில் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் அமைத்தல்.

(இ) மாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில், மேம்படுத்தப்பட்ட மனைகள்/குடியிருப்புகள் அருகாமையில் உள்ள இடங்களில் அமைத்து மாற்றுக் குடியமர்த்தும் முறையினைப் பின்பற்றுதல், இந்த அணுகுமுறையின்கீழ், ஏற்படும் மேம்பாட்டுச் செலவினம் குடிசைவாழ் மக்கள் செலுத்தும் திறனுக்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

[2000 ஏப்ரல் 28

(ஈ) குடிசைப்பகுதிவாழ் மக்களை குடிசைப்பகுதி மாற்று மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துதல்.

(உ) குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஓர் உன்னதமான வீட்டினை அவர்கள் செலுத்தும் திறனுக்கேற்ப அமைத்தல்.

(ஊ) குடிசைப்பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய அவசரத் தேவையினையும், வரையறுக்கப்பட்டுள்ள நிதி ஆதாரத்தினையும் கருத்திற்கொண்டு குடிசை மாற்று மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

*6.3.1.* மேற்கண்ட கொள்கைகளை திட்டங்களாக வடிவமைக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கீழ்க்காணும் கோட்பாடுகளை கடைப்பிடித்து வருகிறது:—

(அ) நகரங்களில் நெரிசல் மிக்க சுகாதாரக் குறைவானப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து அவ்விடங்களிலேயே குடியமர்த்துதல்.

(ஆ) குடிசைப்பகுதிகள் குறிப்பிடத்தக்க அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படுவதுடன் நில உரிமம் வழங்கப்பட்டு அப்பகுதிகள் நல்ல உறைவிடமாக அமைக்கப்படும்.

(இ) நகரங்களில் மேம்பாட்டுப் பணிகளுக்குரிய இடங்களான சென்னை துரித போக்குவரத்துத் திட்டத் தடங்கள், சாலையின் மருங்குகள், நடைபாதைகள், நீர் நிலைகள் போன்ற இடங்களில் ஆக்கிரமித்துள்ள குடிசைவாழ் குடும்பங்களை நகருக்கு அருகாமையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றிக் குடியமர்த்துதல்.

அரசின் நிர்வாக இயந்திரமாகச் செயல்படும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் குடிசைப்பகுதிகளுக்கான கொள்கைகளை நிறைவேற்றி வருகிறது. இவ்வாரியம், ஒரு தலைவர், ஒரு நிர்வாக இயக்குநர் மற்றும் பல்வேறு அரசுத் துறையினைச் சார்ந்த 10 உறுப்பினர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்" நோக்குடன் கீழே கூறப்பட்டுள்ள திட்டங்களை இவ்வாரியம் செயல் படுத்தி வருகிறது.



2000 ஏப்ரல் 28]

**6.3.2. குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்**

சென்னை நகரில் மொத்த மக்கட்தொகையில் 35 சதவீதத்திற்கு மேலாக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் 50 சதவீதத்தினர் நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதிகள் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இன்றி அமைந்திருப்பதுடன் ஒரு குடிசை இரண்டு அல்லது மூன்று குடும்பங்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதுபோன்ற குடியமைப்புகள் அடிக்கடி தீ விபத்துகள் மற்றும் பருவ கால வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படுகின்றன. இந்நெரிசலான குடிசைப் பகுதிகளில் கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலவில்லை. எனவே, நெரிசலான பகுதிகளில் வாழும் இக்குடும்பங்களை அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மாற்றிக் குடியமர்த்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

போதிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீரகற்றும் வசதி, சாலைகள் மற்றும் தெரு மின் விளக்குகள் அமைத்தல் ஆகியவற்றுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் குடிசைமாற்றுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. தகுதிவாய்ந்த குடிசைவாழ் குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் கட்டுமானக் காலத்தில் அவர்கள் அருகாமையில் தற்காலிகமான குடிசைகள் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் கிடைக்கும் வெற்று நிலத்தில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படுகின்றன. இவ்வாறு கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் முன்பு அப்பகுதியில் உண்மையாக வாழ்ந்து வந்த குடிசைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் தேவையான அளவில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 13 விழுக்காடு வட்டியுடன் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக ஹட்கோ நிறுவனத்திடம் இருந்து திட்ட மதிப்பீட்டில் 70 விழுக்காடு நிதி உதவி பெறப்படுகிறது. மீதமுள்ள 30 விழுக்காடு தொகை தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது ஒரு குடியிருப்பிற்கான கட்டுமான செலவு ரூ.1.50 இலட்சமாகும். இக்குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு முடிந்தவுடன், தற்காலிகமாக குடிசைப்பகுதி மக்களால் அமைக்கப்பட்ட குடிசைகள்

[2000 ஏப்ரல் 28

அகற்றப்படுவது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் உறுதி செய்யப்படுகிறது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் உரிய ஆவண ஆதாரங்கள் கொண்டுள்ள குடிசைவாழ் குடும்பங்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 67,250 அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கீழே கூறப்பட்டுள்ள மாநகரங்களிலும் மற்ற நகரப் பகுதிகளிலும் கட்டியுள்ளது:-

| வரிசை எண் | மாநகரம் அல்லது நகரத்தின் பெயர் | கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 59,590 |
| 2. | ஈரோடு | 1,882 |
| 3. | கும்பகோணம் | 206 |
| 4. | திருச்சிராப்பள்ளி | 927 |
| 5. | மதுரை | 604 |
| 6. | சேலம் | 1,472 |
| 7. | கோயம்புத்தூர் | 750 |
| 8. | கரூர் | 256 |
| 9. | சங்கரன்கோவில் | 48 |
| 10. | தூத்துக்குடி | 160 |
| 11. | திருநெல்வேலி | 704 |
| 12. | நாகப்பட்டினம் | 117 |
| 13. | தஞ்சாவூர் | 294 |
| 14. | திருப்பூர் | 240 |
| | மொத்தம் | **67,250** |

**6.4 நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்**

சுகாதாரமற்ற குடிசைப்பகுதிகளின் பொதுவான சுற்றுப்புற சூழ்நிலையினை மேம்படுத்த தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் உத்வேகத்துடன் செயல்படுகிறது. ஓர் இடத்தினை ஒரு நல்ல உறை விடமாக மாற்ற, உள்ளது உள்ளபடி நிலையில் ஒரு குடும்பத்திற்கு



2000 ஏப்ரல் 28]

சராசரி செலவினமாக ரூ.2,000 வீதம் கீழ்க்காணும் நிலைகளில் அடிப்படை வசதிகள் அமைக்க ஒரு சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது:—

1. 10 குடும்பங்களுக்கு ஒரு குளியலறை
2. 10 குடும்பங்களுக்கு ஒரு கழிப்பறை
3. 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய்
4. 40 மீட்டர் சாலைக்கு ஒரு தெரு மின்விளக்கு

அரசால் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் ஒவ்வோர் ஆண்டும் அளிக்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. நகர குடிசைப்பகுதிவாழ் குடும்பங்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 2,53,938 குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு மேம்பாட்டுப் பணிகள் ரூ.35.03 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

**6.5 சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் குடியமர்த்துதல்**

சென்னை, இந்தியாவில் நான்காவது மக்கட்தொகைப் பெருக்கம் நிறைந்த நகரமாகும். நதிக்கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் துரிதப் போக்குவரத்து போன்ற பொதுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் இடங்களில் ஏழை மக்கள் ஆக்கிரமித்து குடிசைகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர். இக்குடியமைப்புகள் போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இருப்பதுடன் அடிக்கடி தீ விபத்துக்கும் வெள்ள பாதிப்பிற்கும் உள்ளாகின்றன. இக்குடிசைப்பகுதி மக்கள் வாழும் இடங்களில் சம்பந்தப்பட்ட நில உரிமைத் துறைக்கு அவர்களுடைய மேம்பாட்டுப் பணிகளான சாலைகளை விரிவுபடுத்துதல், பொதுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுதல் போன்ற பொதுநலத் திட்டப்பணிகளுக்காக ஒப்படைக்க வேண்டியுள்ளதால், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் இவ்விடங்களில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. இதுபோன்ற ஆட்சேபகரமான பகுதிகளில் சுமார் 69,000 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கண்டறியப்பட்டு இக்குடிசைப்பகுதி வாழ் மக்களை மாற்றிடங்களில் நகருக்கு அருகாமையில் வீடுகள் அமைத்து மறு குடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 28

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மைய அரசின் 10-வது நிதிக் குழுவிடம் சிறப்பு மானியமாக ரூ.60.00 கோடி பெற்றுள்ளது. இந்நிதி உதவியினைக் கொண்டு சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதியில் 6500 குடியிருப்புகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நான்கு ஆண்டுகளில் 6500 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும். சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் இக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுவர். இதுவரை இத்திட்டப்பணிகளுக்காக ரூ.31.00 கோடி செலவிடப்பட்டு 3084 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

### 6.6 வெள்ளக் குறைப்பு பணிகள்-குடிசைவாழ் மக்களுக்கு விடுகள் கட்டுதல்

சென்னை மாநகரில் குடியிருப்புப் பகுதிகளில் வெள்ள நீர்தேங்குவதைத் தடுக்க நகரிலுள்ள மழை நீர் வடிகால்களை தூர்வாருதல், மேம்படுத்துதல் மற்றும் நகரில் செல்லும் முக்கிய நதிகளை தூர்வாருதல் போன்ற பணிகளுக்காக அரசு ரூ.300.00 கோடி செலவிலான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நகரின் முக்கிய நதிக்கரைகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் குடிசைவாழ் குடும்பங்கள் அவர்கள் வாழும் இடங்களுக்கு அருகாமையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து குடியமர்த்தப்படுவர். இக்குடும்பங்களுக்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் 3000 குடியிருப்புகளை 37.50 கோடி செலவில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதி 2ல் புனரமைத்தல் மற்றும் மறு குடியமர்வு செய்தல் திட்டத்தின்கீழ் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத் திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இதுவரையில் ரூ.5.50 கோடி செலவில் 984 குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

### 6.7 சுற்றுப்புறச் சுவர் மற்றும் கல்நார் தகடுகளாலான கூரைகளுடன் வீட்டு வசதி

சென்னை நகருக்குக் குடிபெயரும் குடிசைப்பகுதிவாழ் மக்கள் தங்களின் ஏழ்மையின் காரணமாக தங்களுக்கென ஒரு நல்ல வீட்டினை அமைத்துக்கொள்ள இயலவில்லை. எனவே, அவர்கள் பணிபுரியும்



2000 ஏப்ரல் 28]

இடங்களுக்கு அருகாமையில் குறைந்த செலவிலான மற்றும் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகக் கூடிய கட்டுமானப் பொருட்களைக் கொண்டு அபாயகரமான இடங்களில் நிரந்தரமற்ற வீடுகளை அமைத்து மாறுப்பட்ட தட்பவெப்ப சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகும் குடிசைப்பகுதிகளில் ஓலைக் கூரைகளை மாற்றி கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைப்பதற்கான செலவினை அரசு ஏற்கும் என 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, தமிழகத்திலுள்ள ஆறு மாநகரங்களில் ஆட்சேபகரமற்ற குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1998-99 ஆம் ஆண்டில் 7936 குடும்பங்களுக்கு ரூ.5.00 கோடி செலவில் கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கப்பட்டன.

1999-2000 ஆம் ஆண்டில் 12,082 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.12,500 வீதம் மொத்த செலவினம் ரூ.15.10 கோடி செலவில் சுற்றுப்புறச் சுவர்களுடன் கல்நார் தகடுகளாலான கூரை வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. மேலும், கல்நார் தகடுகளாலான கூரைகள் மட்டும் அமைக்கப்பட்ட சுற்றுப்புற சுவர்கள் இல்லாத 8529 வீடுகளுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.7500 செலவில் சுற்றுப்புறச் சுவர்கள் மட்டும் ரூ.6.40 கோடி செலவில் அமைக்கவும் திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இதுவரை 11,010 குடும்பங்களுக்கு ரூ.13.76 கோடி செலவில் சுற்றுச்சுவருடன் கல்நார் தகடுகளாலான கூரை வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சென்ற நிதியாண்டில் கல்நார் தகடுகளாலான கூரைகள் மட்டும் அமைக்கப்பட்ட 1741 வீடுகளுக்கு சுற்றுப்புற சுவர்கள் இதுவரை ரூ.1.30 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

### 6.8 2000-2001 ஆண்டிற்கான திட்டங்கள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 2000-2001-ல் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

(அ) நகர குடிசைப்பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், பொது குடிநீர்க் குழாய்கள், கழிப்பறைகள் போன்ற

[2000 ஏப்ரல் 28

பணிகள் குடும்பம் ஒன்றுக்கு ரூ.2000 செலவில் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் 30,000 குடும்பங்களுக்கு ரூ.6.00 கோடி செலவில் அமைக்கப்படும்.

**(ஆ) 10-வது நிதிக்குழுவின் சிறப்பு மானியம்-ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்**

சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மைய அரசின் 10-வது நிதிக் குழுவால் வழங்கப்பட்ட சிறப்பு மானியத்தினைக் கொண்டு சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6500 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3084 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 2000 குடியிருப்புகள் இந்நிதியாண்டில் ரூ.20.00 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

**(இ) வெள்ளக் குறைப்புப் பணிகள் - குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்காக வீடுகள் கட்டுதல்**

சென்னை நகரில் செல்லும் முக்கிய நதிகளில் தூர்வாருதல் மற்றும் மழை நீர் வடிகால் அமைப்புகளை மேம்படுத்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக நதிக்கரைகளில் வாழும் குடிசைவாழ் குடும்பங்களை நகருக்கருகே குடியிருப்புகள் அமைத்து மறு குடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இந்நிதி ஆண்டில் 2016 குடியிருப்புகள் ரூ.27.20 கோடி செலவில் கட்டப்படும். இத்திட்டப் பணிகளுக்காகும் செலவினத்தொகை வெள்ளக் குறைப்பு திட்டப் பணிகளின்கீழ் அரசால் வழங்கப்படும்.

**(ஈ) குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைத்தல்**

சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கும் திட்டம் மேம்படுத்தப்பட்டு இந்நிதியாண்டில் கல்நார் தகடுகளாலான கூரையுடன் சுற்றுச் சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் குடும்பம் ஒன்றுக்கு ரூ.15,000 செலவில் 26,312 குடும்பங்களுக்கு மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூ.39.47 கோடி செலவில்



2000 ஏப்ரல் 28]

அமைக்கப்படும். இத்திட்டத்திற்கான செலவினம் மாநில அரசிடம் மானியமாகவும் மீதமுள்ள தொகை ஹட்கோ மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிக் கழகத்திடம் கடனாகவும் பெறப்பட்டு திட்டப்பணிகள் நிறைவேற்றப்படும்.

**(உ) பகுதி 2 திட்டம் - அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி**

அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் மக்கள், குறிப்பாக பெண்கள் தரைத் தளங்களிலிருந்து தாங்கள் வாழும் மேல் தளங்களுக்கு குடிநீரைச் சுமந்து செல்வதால் மிகவும் அல்லலுறுகின்றனர். சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியத்தால் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ள குடிநீர் வசதி கட்டமைப்பின் மேம்பாட்டினைக் கொண்டு சென்னை நகரில் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப்பகுதிகளிலுள்ள 43,000 குடியிருப்புகளுக்கு ரூ.9.24 கோடி செலவில் பகுதிவாரியாக குடிநீர் வசதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 2000-2001 ஆண்டில் 5,048 குடியிருப்புகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செயல்படுத்தப்படும்.

**6.9 வருங்காலத் திட்டங்கள்**

சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளான நதிக்கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் துரிதப் போக்குவரத்து போன்ற பொது நலத் திட்டப் பணிகளுக்குத் தேவையான நிலங்களில் 69,000 குடும்பங்கள் வாழ்வதாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மதுரை, சேலம், கோவை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி போன்ற இதர மாநகரங்களிலுள்ள நதிக்கரைகள் குடிசைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்நகர மக்கட்தொகையில் 25 சதவீதத்திற்கும் மேலாக மக்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் இடங்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி உள்ளது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை நகரில் நதிக்கரைகளில் வாழும் 30,313 குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய ஒரு பெரும் திட்டம் வகுத்துள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசின் மானியமாக ரூ.613.50 கோடி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசின் மானிய உதவி பெறப்பட்டவுடன் திட்டப் பணிகள் தொடங்கப்படும்.

[2000 ஏப்ரல் 28

சென்னை, மதுரை, சேலம், கோவை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் 9000 குடிசைவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.122.50 கோடி மானிய உதவி அளிக்குமாறு மைய அரசின் 11வது நிதிக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மைய அரசிடம் இருந்து மானிய உதவி கிடைக்கப்பெற்றவுடன் பணிகள் தொடங்கப்படும்.

**7. இடவசதிக் கட்டுப்பாடு:**

7.1 தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 குடியிருப்பு மற்றும் குடியிருப்பில்லாத கட்டடங்களை வாடகைக்கு விடுவதை ஒழுங்குபடுத்தவும் மற்றும் அவற்றிற்கான வாடகைகளைக் கட்டுப்படுத்தவும், குடியிருப்பவர்கள் நியாயமற்ற முறையில் வீட்டின் உரிமையாளர்களால் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடனும் இயற்றப்பட்டது.

7.2 இச்சட்டத்தின்கீழ், சென்னை மாநகரில் மாவட்ட ஆட்சியரும், தமிழ்நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கோட்ட ஆட்சியாளர்களும், அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாவர். இச்சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்கள் மாநில அரசு பணியாளர்களுக்கும் மாநில அரசு அலுவலகங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

7.3 குடியிருப்பவர்களும், வீட்டின் உரிமையாளர்களும் எதிர்நோக்கும் சில நடைமுறை இடர்பாடுகளை கருத்தில் கொண்டு தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசிலனையிலுள்ளது.



2000 ஏப்ரல் 28]

# இணைப்பு II

**(73 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**மானியக் கோரிக்கை எண் 33—நகர்ப்புற வளர்ச்சி**

**கொள்கை விளக்கக் குறிப்பு**
**2000-2001**

**1. முன்னுரை:**

1.1 நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாக அமைந்துள்ளது. மேலும் அவ்வாறான நகர் மயமாதல் குறிப்பாக வளரும் நாடுகளில் பல்வேறு வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வேளாண்மைசாரா வேலை வாய்ப்புள்ள பெரிய நகர மையங்களுக்கு கிராமப்புறங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து வருவதால் இந்தியாவைப் போன்ற பெரும்பாலான வளரும் நாடுகளில் மிக விரைவான நகர்மயமாதல் நிகழ்கிறது. இதன் காரணமாக நகரங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இக்கட்டிற்குள்ளாவதால் நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. எப்படியிருப்பினும் நகர்மயமாதலினால் உபயோகமான வேலை வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள இயலும் எனில் அதனால் நிச்சயமாக மக்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். அவ்வாறில்லாமல் கிராமப்புறங்களிலுள்ள வேலை வாய்ப்பில்லாதவர்கள் அப்படியே நகர் பகுதிகளுக்குப் பெயர்ந்துவிடுதல் மட்டுமே நகர்மயமாதலாக இருக்கும் பட்சத்தில் நகரங்கள் அவல நிலையின் மொத்த இருப்பிடமாக ஆகிவிடும்.

1.2 நமது நாட்டில் நகர்மயமாதலின் முன்னேற்ற வேகம் தடுமாற்றத்துடன் கூடியதாகவே உள்ளது. இந்தியாவில் 1947ல் 35 கோடியாக இருந்த மக்கட்தொகை 1991-ல் 83.66 கோடியாக இருமடங்கிற்கும் மேலாகிவிட்டது. இதே கால கட்டத்தில் 1947-ல் 5 கோடியாக மட்டுமே இருந்த நகர்ப்புற மக்கட்தொகை 1991-ல் நான்கு மடங்காக 20 கோடிக்கு மேலாக உயர்ந்துள்ளது. நாடு என்கிற அளவில் மட்டுமின்றி மாநிலங்கள் அளவிலும் இதே போன்றுதான் நகர்ப்புறங்களில் மக்கட்தொகைப் பெருக்கம் காணப்படுகிறது. நமது மாநிலத்தின் 1947-ம் ஆண்டின் மக்கட்தொகை 2.35 கோடியாக இருந்தது.

[2000 ஏப்ரல் 28

1991-ல் 5.59 கோடியாக உயர்ந்துள்ளது. 1931-ல் 42.3 இலட்சமாக இருந்த நகர்ப்புற மக்கட்தொகை 1991-ல் 191 இலட்சமாக உயர்ந்துள்ளது. நாடு என்கிற அளவில் மக்கட்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோமீட்டருக்கு 267 மக்கள் என உள்ளது. ஆனால் நமது மாநிலத்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 429 மக்கள் என்ற நிலை உள்ளது. நமது மாநிலம், மக்கள் தொகை அடர்த்தியைப் பொறுத்தமட்டில் நாட்டின் ஐந்தாவது அதிக மக்கட்தொகை அடர்த்தியுடைய மாநிலமாக அமைந்துள்ளது.

1.3 1991-ல் எடுக்கப்பட்ட ஒட்டுமொத்த கணக்கின்படி நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய நிலப்பரப்பளவு 0.50 ஹெக்டேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் நமது மாநிலத்தில் இவ்விகிதாச்சாரம் ஒரு மனிதனுக்கு 0.20 ஹெக்டேர் என மிகக் குறைந்த அளவில் உள்ளது. நமது நாட்டில் நகர்ப்புற மக்கட்தொகை நாடு முழுவதிலும் ஒரே சீராக பரவியிராமல் குறிப்பிட்ட பெரு நகரங்களிலும் மாநில தலைநகரங்களிலும் மட்டுமே மக்கட்தொகை மிக அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கட்தொகை பெரும்பாலும் போக்குவரத்து நெடுஞ்சாலைகளை ஒட்டியதாகவே அமைந்திருக்கிறது. மேலும் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய ஐந்து பெரு நகரங்களில் மட்டுமே தமிழ்நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கட்தொகையில் 50 விழுக்காடு மக்கள் வாழ்கின்றனர். நமது மாநிலத்தில் நகர்ப்புற மக்கட் தொகை அதிக அளவிலான 34 விழுக்காடாக அமைந்திருந்தபோதிலும், கிராமப்பகுதிகளுக்கு நகர்ப்புற வசதிகள் வழங்கும் வண்ணம் அமைந்த பெரிய அளவிலான நகர்ப்புற மையம் ஒன்றுகூட இல்லாத நிலையில் சில வட்டங்களும் தமிழ்நாட்டில் உள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் செய்யப்படவேண்டிய முதலீடுகள் அனைத்தையும் பெரு நகரங்களுக்கே ஒதுக்கீடு செய்து, தவறான முதலீட்டுக் கொள்கை பின்பற்றப்படுவதால்தான் கிராமப்புறங்களிலிருந்தும் சில நகரப்புறங்களிலிருந்தும் பெரு நகரங்களுக்கு மிகப் பெரிய அளவிலான குடிபெயர்தல்கள் நடைபெறுகின்றன என்று நகர்மயமாதல் பற்றி அமைக்கப்பட்ட தேசியக் குழுமம் (National Commission on Urbanisation) தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. நகரங்களுக்கான முதலீடுகளை முறைப்படுத்துவதே இதுபோன்ற பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும்.



2000 ஏப்ரல் 28]

**2. நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள்:**

2.1 மாநிலத்தின் நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள்பற்றி தயாரிக்கப்பட்டுள்ள வரைவு அறிக்கையில் 2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கட்தொகை 7.14 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 2.8 கோடி மக்கள் அதாவது 40 விழுக்காடு நகர்ப்புற மக்கட்தொகையாகவே அமைந்திருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. மக்கட்தொகை அடர்த்தியும் மிகவும் அதிகமாக இருக்கும் எனவும், ஒரு மனிதனுக்கு கிடைக்கக்கூடிய நிலப்பரப்பளவு விகிதாச்சாரம் மிகக் குறைந்த அளவாக 0.17 ஹெக்டேர் என்ற அளவிற்கு குறைந்து விடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற சூழ்நிலையில் வீட்டுவசதி, பொழுதுபோக்கு, போக்குவரத்து, தொழிற்சாலைகள் மற்ற பிற வசதிகளுக்கான ஒதுக்கீடு போன்றவற்றில் நகர்ப்புற திட்டமிடுதல் முறையையே முழுவதுமாக மறு ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். 2011 ஆம் ஆண்டு வாக்கில் ஏற்படக்கூடிய நகர்ப்புற வளர்ச்சியை எதிர்கொண்டு சமச்சீரான வளர்ச்சி ஏற்படச் செய்வதற்கான வழிமுறைகளை நகர்ப்புற வளர்ச்சி நெறிமுறைகள் பற்றிய வரைவு அறிக்கையில் கீழ்க்காணும் வகையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2.1.1 உயர் பெரு நகரமாக விளங்கும் சென்னை மற்றும் எதிர்காலத்தில் பெரு நகரங்களாக, உருவாகக்கூடிய மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நான்கு நகரங்களும் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து மாநிலத்தின் நகர்ப்புற திட்டமிடுதலில் பெரும்பங்கு வகித்துவரும். ஆதலால் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய முறைப்படியான திட்டமிடுதலின் வாயிலாக இப்பெரு நகரங்களின் வளர்ச்சி வேகத்தை குறைப்பதற்காக இதர நகர் மையங்களை வளர்ச்சியடையச் செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது இன்றியமையாதது.

2.1.2 பின்தங்கிய பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைத் தொழில் துறை வளர்ச்சி மற்றும் தொடர் முயற்சிகளால் வளர்ச்சி அடையச் செய்வதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு வளர்ச்சிப் பணிகளில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

2.1.3 நகர்ப்புற வளர்ச்சி மற்றும் முதலீடுகள் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தத் தேவையான திட்டம் ஏதும் தற்போது இல்லை. ஆகவே நகர் மையங்களுக்கான பொருளாதார வளர்ச்சித்

[2000 ஏப்ரல் 28

திட்டங்களையும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டியது உடனடித் தேவையாகக் கருதப்படுகிறது.

2.1.4 தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மையங்களை வளர்ச்சி அடையச் செய்வதற்கோ அல்லது வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கோ மானியம் வழங்குதல், வரி விதிப்பு செய்தல், வளர்ச்சிக்குத் தேவையான உள்ளீடுகளை ஏற்படுத்தித் தருதல் அல்லது ஏற்படுத்தித் தராமல் இருத்தல் போன்ற ஊக்குவிப்பதற்கான அல்லது தடுப்பதற்கான உத்திகளைக் கையாண்டு நகர்ப்புற வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.1.5 மாநிலத்தில் மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள வட்டங்களில் சில பகுதிகளை சிறு நகரங்களாக மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2.1.6 நகர் மையங்களை வளர்ச்சி அடையச் செய்வதில் மண்டல வாரியான அணுகுமுறையைக் கையாள வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதி நீங்கலாக மாநிலத்தின் இதர பகுதிகள் எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதில் அனைத்து மண்டலங்களிலும் ஒரே சீரான நகர்ப்புற மக்கட்தொகை பரவியிருக்குமாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

2.2 வரைவு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சிக்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் கீழ்க்காண் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்:-

1. குறைந்தபட்ச திருப்தி அளிக்கக் கூடிய தரம் வாய்ந்த நகர்ப்புற வசதிகளை சென்னையிலும், வளர்ச்சிக்கான காலி நிலங்களை ஏற்படுத்தித் தருதல் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை இரண்டாம் தர பெருநகரங்களிலும் செயல்படுத்தி இந்தப் பரிந்துரையை நடைமுறைப்படுத்தல்.
2. பெரு வளர்ச்சி மையங்கள் மற்றும் புது நகரங்கள் நிலைப்பாட்டுடன் இருக்கவும், வளர்ச்சிக்கு ஊக்கமாக இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
3. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு போதிய அளவு நிதி கிடைப்பது உறுதி செய்யப்படுதல்.



2000 ஏப்ரல் 28]

4. 20,000 முதல் 50,000 வரை மக்கட்தொகை உடைய நகரங்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.
5. வட்டங்களின் மத்தியில் அமைந்துள்ள நகர்ப்புற வசதியற்ற கிராமப் பகுதியினைத் தேர்ந்தெடுத்து அவற்றை நகர மையங்களாக வளர்ச்சி அடையச் செய்தல்.

2.3 ஒட்டுமொத்த குறியிலக்கை அடைவதற்கு வெவ்வேறு நகர மையங்களுக்கு நிதி வழங்கப்படுவது இலகுவாக நடைபெற கீழ்க்காணும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்:-

1. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர் மையங்களற்ற வட்டங்களில் மேம்பாடு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மையங்கள் ஆகியவற்றிற்கென தனியே நிதி உதவி செய்வதற்கு மாநில அரசு திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்தல்.
2. முன்னுரிமை வழங்கப்பட்ட நகரங்களுக்கு முதலீடு மற்றும் ஊக்குவிப்புகளில் அவற்றிற்கான பங்கினை எளிதில் வழங்கும் பொருட்டு நிதியுதவி வழங்கும் முறையினைச் சீர்படுத்துதல்.
3. முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்.
4. நகரமைப்புப் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையில் தொலையுணர்வு, புவியமைப்பு (Remote Sensing and GIS) முறை மற்றும் பிற புதிய தொழில்நுட்ப முறைகளை உபயோகப்படுத்துதல்.
5. நகர்ப்புற வளர்ச்சிக்கான திட்டங்களான போக்குவரத்து மேலாண்மைத் திட்டம், சுற்றுலா மேம்பாடு, பாரம்பரியமிக்க பகுதிகளைப் பாதுகாத்தல், மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களைப் பற்றிய ஆய்வு மற்றும் இதர திட்டங்கள் தயாரித்தல்.

2.4 மேற்கூறிய அனைத்து கொள்கை முடிவுகள் மற்றும் வழி முறைகளை உபயோகமான செயல்படும் திட்டங்களாக்குதல், மேலும் அத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் போன்ற பணிகளைச் செய்யும் பொறுப்பு சென்னைப் பெருநகர் பகுதியைப்

[2000 ஏப்ரல் 28

பொறுத்தமட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும், மாநிலத்தின் எஞ்சிய அனைத்துப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

**3. நகர் ஊரமைப்பு இயக்ககம்**

*3.1* முக்கிய கொள்கை குறியிலக்குகள்

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ஐ செயல்படுத்துதல் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான சுகாதாரமான, சுற்றுச் சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககம் உதவிபுரிந்து வருகிறது. நகர் ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது, நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வருவதுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்டட மேம்பாட்டுப் பணிகளையும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ஒழுங்குப்படுத்துகிறது. மாநில அரசின் நிதியிதவியின் வாயிலாக நகர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கும் மைய நிறுவனமாகவும் நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்படுகிறது.

3.2 மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் தயாரித்தல் நகர் ஊரமைப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

**4. நடைபெற்றுவரும் திட்டங்கள்**

***4.1* மண்டலத் திட்டங்கள்**

மக்களின் குறைந்தபட்சத் தேவைகளைக் கிடைக்கச் செய்வதில் மண்டலத் திட்டங்கள் முக்கிய கருவியாகச் செயல்படுகின்றன.

(1) வளரும் மையங்களைக் கண்டறிதல்.

(2) போக்குவரத்து, தொலைதொடர்பு மேம்பாடு.

(3) இயற்கை வளமிக்க மற்றும் எழில் வாய்ந்த பகுதிகளை வரையறை செய்து பேணிப் பாதுகாத்து மேம்பாடு செய்தல்.



2000 ஏப்ரல் 28]

(4) புராதன, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை அழகுமிக்க கட்டடங்கள் மற்றும் பொருட்களை வரையறை செய்தல் போன்ற பணிகளுக்காக மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. சென்னைப் பெருநகர் பகுதியை ஒட்டி அமைந்துள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்பட *1999-2000* ஆம் ஆண்டில் பணி மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**4.2 முழுமைத் திட்டங்கள்**

ஒரு பகுதியின் எதிர்கால மக்கட்தொகையைக் கணக்கிட்டு அதற்கேற்ப, முழுமைத் திட்டங்கள் முன்கூட்டியே தயாரிக்கப்படுகின்றன. வெவ்வேறு நில உபயோகங்களுக்குத் தக்கவாறு பகுதிகளை ஒதுக்குவது, இடையூறு இல்லாத வாகனப் போக்குவரத்துக்கு வழிவகுக்கும் வகையில் சாலை அமைப்புகளை ஏற்படுத்துதல், மேலும் அப்பகுதியில் வாழும் மக்களுக்கான வசதிகளின் தேவை அளவைக் கண்டறிதல் போன்றவை முழுமைத் திட்டங்கள் தயாரிக்கும் பொழுது கருத்தில் கொள்ளப்படும். முழுமைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதை ஒழுங்குபடுத்துவதற்கும் முழுமைத் திட்டத்தில் வழிவகை செய்யப்படுகிறது. அரசால் உள்ளூர்த் திட்டப் பகுதிகளாக அறிவிக்க செய்யப்பட்டுள்ள மொத்தம் 113 பகுதிகளில் 110 பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணக்கம் அளிக்கப்பட்ட நிலையில் உள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் உசிலம்பட்டி, பெரம்பலூர், கூத்தாநல்லூர் மற்றும் வடக்கு வள்ளியூர் ஆகிய 4 உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சில முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாற்றத்தை திட்டத்தில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் தென்காசி, திருச்செங்கோடு, வேலூர் (நாமக்கல் மாவட்டம்), மயிலாடுதுறை மற்றும் திருப்பூர் ஆகிய 5 பகுதிகளுக்கான முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

### 4.3 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள நகரங்களில் உள்ள விரைவான வளர்ச்சியடையக் கூடிய வளமுள்ள பகுதிகளுக்கு முழுமைத் திட்டத்துடன் விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. சாலை மேம்பாடு, வெவ்வேறு பயன்களுக்கான நில ஒதுக்கீடு, கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவது விரிவு அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களாகும். இதுகாறும் 1575 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை அங்கீகரிக்கப்பட்ட நிலை, இணக்கம் அளிக்கப்பட்ட நிலை, வரைவு நிலை என வெவ்வேறு நிலைகளில் உள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் 50 புதிய விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் அப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள தற்போதைய வளர்ச்சியினை திட்டங்களில் சேர்க்கும் பொருட்டு 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொளளப்பட்டிருக்கின்றன.

### 4.4 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

ஒசூர் போன்ற வேகமாக வளர்ந்து வரும் தொழிற்சாலை நகரங்கள் அல்லது மாமல்லபுரம் போன்ற பாரம்பரியம் மிக்க நகரங்களுக்குச் சட்ட ரீதியாக புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 14 பகுதிகள் அரசால் புதுநகரங்களாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் நவல்பட்டு புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 6 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

4.5 மேற்காண் சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பது தவிர கீழே விவரிக்கப்பட்டுள்ள பல திட்டங்களையும் இத்துறை தயாரிக்கிறது:

#### (அ) பாரம்பரியமிக்க நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல்

தமிழ்நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும், செறிவுடையதாகவும், பன்முகங்களைக் கொண்டதாகவும், தனித் தன்மையுடன் விளங்குகிறது. அதன் அழகு மிளிரும் கடற்கரைகள், எழில்மிகு மலைப் பிரதேசங்கள், பிரம்மாண்டமான கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவை



மாநிலத்தின் விலை மதிப்பற்ற சொத்துக்களாக அமைந்துள்ளன. இந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் முக்கிய இடங்கள் ஆகியவை விரைவான நகர்ப்புற வளர்ச்சியின் தாக்கத்துக்கு உள்ளாகின்றன. நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் தொடர்ச்சியாக 38 நகரங்களை பாரம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. அந்நகரங்களை அழகுபடுத்தவும், வசதிகளை ஏற்படுத்தவும், அப்பகுதியில் கட்டட அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தவும் பேணிப் பாதுகாக்கவும் திட்டங்கள் தயாரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 1999-2000 ஆம் ஆண்டில் கலந்தாய்வர்கள் உதவியுடன் பாரம்பரியம் மிக்க 11 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

#### (ஆ) மிகக் குறைந்தளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டம்

நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கட்தொகையில் 9 விழுக்காடு மக்கள் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். தமிழ்நாட்டில் 1981-ல் நகர்மயமாதலின் வளர்ச்சி 33 விழுக்காடாக இருந்தது. 1991-ல் 35.8 விழுக்காடாக உயரும் என எதிர்நோக்கப்பட்டது. ஆனால் சராசரியை விடக் குறைவாக 34 விழுக்காடாக மட்டுமே உயர்ந்துள்ளது. நகர்ப்புற மக்கட்தொகை வளர்ச்சியின் விகிதம் 1971-81-ல் 2.47 விழுக்காடாக இருந்தது. 1981-91-ல் 1.76 விழுக்காடாக குறைந்துவிட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மிகக் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களை நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்கு தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. அதன் முன்னோடியாக, நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்காக மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களில் இவ்வியக்ககம் கலந்தாய்வர்களின் உதவியுடன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நகர் ஊரமைப்பு அபிவிருத்தி நிதி உதவியின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 12 வட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

#### (இ) போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாட்டில் பெரிய நகரங்கள் மிக மோசமான போக்குவரத்து நெரிசலை எதிர்நோக்கியுள்ளன. போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மக்கள் மற்றும் பொருட்களின் பயணச் செலவு அதிகரிக்கின்றது.

[2000 ஏப்ரல் 28

போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நகரின் திறன் குறைந்து போகிறது. மேலும் நகரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் இக்கட்டிற்குள்ளாகின்றன. போக்குவரத்து இடையூறு அதிகம் உள்ள நகர்ப்புற பகுதிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான சரியான தீர்வு ஏற்படுத்துவதற்காக பல நகரங்களுக்கு போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களை இத்துறை தயாரித்து வருகிறது. நகர் ஊரமைப்பு அபிவிருத்து நிதி உதவியின் கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 10 நகரங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.6 ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்

பேருந்து நிலையம் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல் மற்றும் வாரச் சந்தை, தினசரிச் சந்தை ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

1999-2000 ஆம் ஆண்டில் வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 20 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ.433 இலட்சம் கடனுதவி வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.7 புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாக நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் (Geographical Information System)

வெகு வேகமாகப் பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் விரைவான நகர்ப்புற வளர்ச்சியுடைய இக்காலகட்டத்தில் திட்டமிடுதல், வரைபடங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் சாதாரணமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கையாள்வதால் அதிகமான மனித ஆற்றல் தேவைப்படுவதோடு அதிக காலமும், நிதியும் தேவைப்படுகிறது. ஆதலால் புதிய தொழில் நுட்ப உத்தியான புவியமைப்புத் தகவல் முறையினை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் இத்துறை பயன்படுத்தி வருகிறது.



2000 ஏப்ரல் 28]

1999-2000 ஆம் ஆண்டில் நகர் ஊரமைப்பு நிதி உதவியின் கீழ் புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாக நாகப்பட்டினம் மற்றும் இராஜபாளையம் ஆகிய இரு நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 4.8 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்

முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் வகை செய்கிறது. இத்திட்ட உத்தேசங்கள் செயல்படுத்தப்பட்டால் அவை நிச்சயமாக அப்பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்.

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு தனது வரவு-செலவு அறிக்கையின் இத்திட்டச் செயல்பாட்டினைச் சேர்த்துக்கொண்டு அதற்கான தக்க நிதி உதவி வழங்கி வருகிறது.

1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் திருப்பூர், காரைக்குடி, விழுப்புரம், திண்டிவனம் ஆகிய நான்கு உள்ளாட்சி நிறுவனங்களுக்கான விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகளை அமைக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக மொத்தமாக ரூ.40.46 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 4.9 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் பூங்காக்கள் அபிவிருத்தி

மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகர மையங்களில் பூங்காக்களும் விளையாடுமிடங்களும் அப்பகுதியில் காற்றைச் சுத்திகரித்து தரும் மையங்களாகவும், புத்துணர்ச்சி பெறும் இடங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அவ்வாறான பூங்காக்கள் மற்றும் விளையாடுமிடங்கள் ஆகியவை உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நெருக்கடியால் தக்க பராமரிப்பின்றி உள்ளன. கைவிடப்பட்ட இந்தக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி பராமரிப்பதற்காக ஒரு முறை வழங்கப்படும் மானியமாக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுவதில் 50:50 என்ற விகிதத்தில் அரசும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனமோ அல்லது தனியார் நிறுவனமோ பங்களிக்க வேண்டும்.

[2000 ஏப்ரல் 28

1999-2000-ஆம் ஆண்டில் அரக்கோணம், மற்றும் விருத்தாச்சலம் ஆகிய நகராட்சிகளில் அமைந்துள்ள பூங்காக்கள் இத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.

**4.10 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்களின் வரைபடங்களை கணினியின் வாயிலாகத் தயாரித்தல்:**

இத்துறையின் செயல்பாடுகளை நவீனப்படுத்தும் பொருட்டு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முழுமைத் திட்டங்கள் சம்மந்தமான விவரங்கள் கணினி மயமாக்கப்படுகின்றன. இதற்குத் தேவையான கணினி வன்பொருட்களும், மென்பொருட்களும் அரசின் நிதியுதவியால் இத்துறைக்கு வாங்கப்பட்டுள்ளன. இத்துறையால் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் முழுமைத் திட்டங்களையும் பகுதி பகுதியாக கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். திட்டங்கள் கணினி மயமாக்கப்பட்ட பின்னர், பொதுமக்கள் திட்டங்களின் நகல்கள் வேண்டி இத்துறையை அணுகும் சமயங்களில் எளிதாக நகல்கள் எடுத்துக் கொடுக்க இயலும்.

## 5. 2000-2001-ஆம் ஆண்டிற்கான இத்துறையின் திட்டங்கள்:

5.1 நகரப் பகுதிகளில் விரும்பத்தக்க, கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி ஏற்படுவதை உறுதி செய்வதற்காகவே அனைத்து உள்ளூர் திட்டப் பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்களையும் மற்றும் உடனடியாக வளர்ச்சி அடையக்கூடிய வளமிக்க பகுதிகளுக்கென விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் தயாரிப்பதில் இத் துறை மிகவும் கவனம்செலுத்தி வந்திருக்கிறது. பொதுமக்களிடமிருந்தும் தொழில் முனைவோர்களிடமிருந்தும் எழும் பல்வேறு கோரிக்கைகளால் முழுமைத் திட்டங்களையும், விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்துவதில் நடைமுறை சிக்கல் உள்ளது என்பதனை அனுபவத்தில் இத் துறை உணர்ந்திருக்கிறது. ஆதலால் 5 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள இத் துறை முடிவு செய்துள்ளது. நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ல் இம் மாதிரியான மறு ஆய்வுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மொத்தம் 60 முழுமைத் திட்டங்களும், 500 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மறு ஆய்வு செய்யப்படும் சமயத்தில் தொழில் சார்ந்த நபர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கலந்தாலோசித்துச் செயல்பட



2000 ஏப்ரல் 28]

முடிவு செய்யப்பட்டுள்ளது. 2000-2001-ஆம் ஆண்டில் 10 முழுமைத் திட்டங்களையும், 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதர 50 பகுதிகளுக்குப் புதிதாக விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெறும்.

**5.2 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்:**

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசங்களைச் செயல்படுத்துவதற்காக அரசு தனது வரவு-செலவு அறிக்கையில் இத் திட்டச் செயல்பாட்டினைச் சேர்த்துக்கொண்டு அதற்கான தக்க நிதி உதவி வழங்கிவருகிறது. இத் திட்ட உத்தேசங்கள் செய்யப்படுத்தப்பட்டால் அவை நிச்சயமாக அப் பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும். இந்த நிதி ஆண்டில் ரூ.15 இலட்சம் நிதியுதவியில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**5.3 பாரம்பரியமிக்க நகரங்களுக்கான திட்டங்கள்:**

எந்தவிதமான திட்டமிடுதலும் இல்லாமல் நகரங்கள் விரிவடைந்து வருவதால் நமது விலைமதிப்பற்ற, பாரம்பரியமிக்க நகரங்கள் சிதைவுக் குள்ளாகின்றன என்பதை உணர்ந்து அப் பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை பராம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. நகரத்தை அழகுபடுத்துதல், கட்டட மேம்பாட்டைத் திட்டமிட்டு கட்டுப்படுத்துதல், வசதிகள் ஏற்படுத்துதல் வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பகுதிகளைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்ளப்பட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் இத் துறையின் செயல் திட்டமாக அமைந்துள்ளது. 1997-98 முதல் 1999-2000 வரையிலும் 33 நகரங்களுக்கு இத் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் எஞ்சியுள்ள கீழ்க்காண் 5 நகரங்களுக்கும் திட்டங்கள் தயாரிக்கும் பணி 2000-2001-ஆம் ஆண்டிலும் தொடரப்பட உள்ளது:-

| | |
|---|---|
| 1. செட்டிநாடு | சிவகங்கை மாவட்டம் |
| 2. வாலிநோக்கம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 3. மருதூர் | கடலூர் மாவட்டம் |
| 4. பிச்சாவரம் | கடலூர் மாவட்டம் |
| 5. மரக்காணம் | விழுப்புரம் மாவட்டம் |

**5.4 மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற அபிவிருத்தி அடைந்துள்ள வட்டங்களில் நடுத்தர நகரங்களை மேம்படுத்தல்:**

1999-2000-ஆம் ஆண்டில் இத் துறையில் தயாரிக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி நெறிமுறை பற்றிய வரைவு ஆய்வறிக்கையில் நகர மையங்கள் ஏதுமற்ற குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள பல வட்டங்களைக் கண்டறிந்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்ற 12 வட்டங்களில் தக்க மையங்களைக் கண்டறிந்து அவற்றை நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. 2000-2001-ஆம் ஆண்டிலும் ரூ.20.00 இலட்சம் நிதியில் கீழ்க்காண் 12 வட்டங்களில் இதே போன்ற ஆய்வு நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | கிருஷ்ணராயபுரம் | .. | கரூர் மாவட்டம் |
| 2. | வானூர் | .. | விழுப்புரம் மாவட்டம் |
| 3. | செய்யாறு | .. | திருவண்ணாமலை மாவட்டம் |
| 4. | பாப்பிரெட்டிப்பட்டி | .. | தர்மபுரி மாவட்டம் |
| 5. | ஆரணி | .. | திருவண்ணாமலை மாவட்டம் |
| 6. | உடையார்பாளையம் | .. | பெரம்பலூர் மாவட்டம் |
| 7. | திட்டக்குடி | .. | கடலூர் மாவட்டம் |
| 8. | சங்ககிரி | .. | சேலம் மாவட்டம் |
| 9. | ஒட்டன்சத்திரம் | .. | திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | கீழ்வேளூர் | .. | நாகப்பட்டினம் மாவட்டம் |
| 11. | குடவாசல் | .. | திருவாரூர் மாவட்டம் |
| 12. | கந்தர்வகோட்டை | .. | புதுக்கோட்டை மாவட்டம் |

**5.5 ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்:**

வருவாய் ஈட்டும் திட்டங்களை உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் முதற்கொண்டு முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சாலைகள் அமைத்தல், நிலையிலுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து செலவிட முடிவு



செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் ஒரு திட்டத்திற்கு ஆகும் செலவில் அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரையிலும் உள்ளாட்சி நிறுவனத்திற்கு கடனுதவியாக வழங்கப்படும்.

**5.6 போக்குவரத்து செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்:**

நகரின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கும் விதத்தில் மேலும் 10 நகரங்களுக்குப் போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தக்க தீர்வுகள் காணப்படும்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

6. 1991-ஆம் ஆண்டு 38 இலட்சமாக இருந்த சென்னை மக்கள் தொகை 1995-ல் 45 இலட்சத்தைக் கடந்து இந்தியாவின் பெருநகரங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு 2011-ஆம் ஆண்டில் 70 இலட்சமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நகர்ப் பகுதிகள் அடங்கிய சென்னைப் பெருநகர் எல்லையின் மக்கள் தொகை 2011-ஆம் ஆண்டு 95 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைப் பெருநகர் எல்லைப பகுதிகள் விரைவாக நகர்மயமாக்கப்படுதலின் விளைவாகத் தேவையான சுகாதாரம் மற்றும் சமூக மேம்பாடு கடுமையாகக் குறைந்து வருகிறது. இக் குறைகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்கான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். அரசின் கொள்கைகளை ஆக்கப்பூர்வமாக நிறைவேற்ற சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போக்குவரத்து இயக்கத்தை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் நகரத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. நகர அபிவிருத்தித் திட்டங்களைச் சீரமைக்கும் நோக்குடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்கொண்டுவரும் செயல்முறைகளும் திட்டங்களும் பின்வருமாறு:

**7. திரளான துரித இரயில் போக்குவரத்துக் திட்டம் (இரண்டாம் கட்டம்):**

துரித இரயில் போக்குவரத்து சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரை ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசும், மத்திய அரசும், இத் திட்டத்தினை வேளச்சேரி வரை நீட்டிக்கும் இரண்டாம் கட்டத்திற்கான பணியினைச் செயல்படுத்தி வருகின்றன. திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 10.60 கி.மீ. நீளப்பகுதிக்கான திட்டச் செலவு ரூ. 733 கோடியென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு மூன்றில் இரண்டு பங்கு

[2000 ஏப்ரல் 28

செலவினத்தையும் மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு செலவினையும் ஏற்கிறது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ. 205.29 கோடி தமிழ்நாடு அரசின் பங்குத் தொகையாகச் செலவிடப்பட்டுள்ளது. பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தினை வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை மூன்றாம் கட்டமாக நீட்டிக்க தமிழ்நாடு அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகிறது.

## 8. வெளிவட்டச் சாலை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை நகரப் போக்குவரத்து நெரிசலை எளிமையாக்க, பெருநகர் எல்லையில் கீழ்க் கண்டவாறு வெளிவட்டச் சாலையை அமைக்க திட்டம் தயாரித்துள்ளது:—

சென்னை - திருச்சி தெற்கு நீள் நெடுஞ்சாலையையும்

சென்னை - பெங்களூர் மேற்கு நீள் நெடுஞ்சாலையையும்

சென்னை - திருவள்ளூர் நெடுஞ்சாலையையும்

சென்னை - நெல்லூர் வடக்கு நீள் நெடுஞ்சாலையையும் மற்றும்

திருவொற்றியூர் - பொன்னேரி பஞ்சட்டி சாலையையும் இணைக்கும் வகையில், வெளிவட்டச் சாலையை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும் 62 கி.மீ. நீளமுள்ள வெளிவட்டச் சாலையை 1995 ஆம் ஆண்டின் விலை நிலவரப்படி ரூ. 317 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டப் பணிக்காக தெற்கு நீள் நெடுஞ்சாலையிலிருந்து சென்னை—திருவள்ளூர் நெடுஞ்சாலை வரையிலான வெளி வட்டச் சாலை அமைக்க தேவையான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. முதற் கட்டப் பணியில் அடங்கியுள்ள நிலங்களில் சாலையின் போக்கைக் குறியிடும் பணி முடிவடைந்துவிட்டது.

8.1. இதுவரையில் 19 கிராமங்களுக்கான 4(1) அறிவிக்கைகளுக்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நில நிர்வாக ஆணையர் அவர்கள் 8 கிராமங்களுக்கான 4(1) அறிவிக்கைகளுக்கு அரசு ஒப்புதல் வழங்க பரிந்துரை செய்துள்ளார். 5(ஏ) விசாரணை - 12 கிராமங்களுக்கு நடத்தப்பட்டுள்ளது. 10 கிராமங்களுக்கு பிரிவு 6-ன் கீழான விளம்பல் அறிவிக்கைக்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2 கிராமங்களுக்கான பிரிவு 7-க்கான மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நில நிர்வாக ஆணையரிடமிருந்து, 4 கிராமங்களுக்கான முன் மதிப்பீடு செயற்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 28]

8.2. இரண்டாம் கட்டப் பணியில் சாலை அமைக்கத் தேவையான நிலங்களில் சாலையின் போக்கைக் குறியிடும் பணி நடைபெற்று வருகின்றது.

## 9. சென்னைப் புறநகர் பேருந்து முனையம், கோயம்பேடு

சென்னையில் தற்போது இயங்கிவரும் பேருந்து முனையங்களான எஸ்பிளனேட், எம்.யூ.சி., பேசின் பாலம் மற்றும் பிராட்வே ஆகிய இடங்களில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசல்களையும் மற்றும் சரியான முறையில் நிர்வகிக்க முடியாத நிலையில் உள்ள போக்குவரத்துப் பிரச்சனைகளையும் குறைப்பதற்காக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், புறநகர் பேருந்து முனையம் ஒன்றை நகரத்தையொட்டியுள்ள கோயம்பேட்டில் ஜவஹர்லால் நேரு சாலையில் (உள் வட்டச் சாலை) அமைப்பதற்கான பணியைச் செயல்படுத்தி வருகிறது.

9.1. இதற்கான ஒரு சிறந்த வடிவமைப்பினைப் பெறும் நோக்கத்துடன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் விரிவான கட்டடம், பொறியியல் வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.96 இலட்சம் செலவில் ரைட்ஸ் என்ற மத்திய அரசு நிறுவனம் நவம்பர் 1997-ல் கலந்தறிதற்குரிய நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்நிறுவனமும் பொறியியல் வடிவமைப்பு மற்றும் விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கையினைச் சமர்ப்பித்தது.

9.2. அரசு இத்திட்டத்திற்காக ரூ. 89.21 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்து, இத்திட்டப் பணிகளைச் செயல்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (ஹட்கோ) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டு வாரியம் (டுபிட்க்கோ) போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படவுள்ள கடனுதவியை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அசலையும் வட்டியையும் திரும்பச் செலுத்தும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அரசு அறிவுறுத்தியபடி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தையும், தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்ளமைப்பு வாரியத்தையும்

அணுகி முறையே ரூ.84.25 கோடியும், ரூ.10 கோடியும் கடனுதவி பெற ஒப்புதல் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு அஹமதாபாத்திலுள்ள ஜே.எம்.சி. திட்டங்கள் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்திற்கு ஏப்ரல் 1999-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6-6-1999-ல் அடிக்கல் நாட்டி கட்டுமான வேலைகளைத் தொடங்கி வைத்தார். கட்டுமானப் பணிகள் பல நிலைகளில் இத்திட்டத்திற்காக முடிவு செய்யப்பட்ட அட்டவணை அடிப்படையில் தொடர்ந்து நடந்து வருகின்றன. இத்திட்டம் 2001 ஆம் ஆண்டு மே-ஜூன் திங்களில் முழுமை பெறும்.

## 10. ஆரச் சாலைகளின் மேம்பாட்டுப் பணி

சென்னைப் பெருநகரை இணைக்கும் 250 கி.மீ. நீளமுள்ள எட்டு ஆரச் சாலைகள் ரூ. 212.54 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தை இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசு உத்தரவிற்கிணங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடத்திடமிருந்து ரூ.147 கோடி கடனாகப் பெற ஒப்புதல் பெற்றுள்ளது. இதுவரை ரூ. 82.37 கோடி கடனைப் பெற்று இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமான நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிடம் செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வரும் எட்டு ஆரச் சாலைகள் பின்வருமாறு:

(1) சென்னை - மகாபலிபுரம் சாலை

(2) வாலாஜாபாத் - முடிச்சூர் - தாம்பரம் மேடவாக்கம் - சோழிங்கநல்லூர்-குடிமியாண்டி தோப்பு சாலை

(3) சென்னை - வண்டலூர் - கேளம்பாக்கம் சாலை

(4) புதுவயல் - பெரியபாளையம் - தாமரைப்பாக்கம் - தின்னனூர் - கொரட்டூர் சாலை

(5) செங்குன்றம் - திருவள்ளூர் சாலை

(6) செங்குன்றம் - ஆவடி - பூந்தமல்லி சாலை - குன்றத்தூர் - பல்லாவரம் இணையும் புதுமகாபலிபுரம் சாலை

(7) கோடம்பாக்கம் - ஸ்ரீபெரும்புதூர் சாலை

(8) சென்னை - மகாபலிபுரம் சாலை (வழி) கேளம்பாக்கம் - கோவளம் சாலை.



மேற்கண்ட பணிகள் நடைபெற்று கொண்டு வருகின்றன. கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்தத் தேவையான தொகையை அரசு வரவு - செலவு திட்டம் வழியாக ஒவ்வொரு ஆண்டும் ஏற்கும். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கென 2000-2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.9.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 11. போக்குவரத்து செயல்முறை திட்டம்

சென்னைப் பெருநகர் பகுதியின் பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களை மேம்படுத்த ரூ.366 கோடி செலவிலான போக்குவரத்து செயல்முறைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பல்வேறு போக்குவரத்துத் திட்டங்களான சாலைச் சந்திப்புகளை மேம்படுத்துதல், வழிமுறைப்படுத்துதல், சமிக்ஞைகள் அமைத்தல், பாதசாரிகள் சுரங்கப்பாதை, தெரு விளக்குகள் அமைத்தல் போன்றவை சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை மற்றும் மாநகரக் காவல் துறைகளால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று கூட்டாக நடைமுறைப்படுத்தப்படும். திட்ட முன்னேற்றத்தைக் கண்காணிக்க உயர்மட்ட வழிகாட்டிக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. திட்ட நடைமுறை முழுவதையும் கண்காணிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தின் வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் நிதியாண்டில் சென்னை மாநகராட்சி கீழ்க்காணும் ஒன்பது சிறிய மேம்பாலங்கள் அமைக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. இதில் புற்று நோய் நிறுவனம்-சர்தார் பட்டேல் சாலை-காந்தி மண்டபம் சாலை மற்றும் சத்தியம் திரையரங்கம்-பீட்டர்ஸ் சாலை-கான்ரான்ஸ்மித் சாலை ஆகிய இரண்டு மேம்பாலங்களின் பணி முடிவுற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 5-2-2000-ல் திறக்கப்பட்டு போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பாலங்களின் பணி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்று முடிவுறும் தருவாயிலுள்ளது:—

### (அ) சிறுமேம்பாலங்கள் தொகுப்பு-1

(1) அடையாறு-பலகை வாராவதி பாலம் சாலை

(2) சங்கீத வித்வ சபை-டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை

(3) டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை-இராயப்பேட்டை நெடுஞ்சாலை

[2000 ஏப்ரல் 28

(4) ஆழ்வார்பேட்டை-டிடிகே. சாலை-சர் சிபி. இராமசாமி சாலை

(5) இராயப்பேட்டை மருத்துவமனை-இராயப்பேட்டை நெடுஞ்சாலை-பீட்டர்ஸ் சாலை

(6) அருங்காட்சியகம்-பாந்தியன் சாலை-காசாமேஜர் சாலை

(7) டவுட்டன்-புரசைவாக்கம் நெடுஞ்சாலை-ஹண்ட்டர்ஸ் சாலை

**(ஆ) சிறு மேம்பாலங்கள் தொகுப்பு-2**

மேலே குறிப்பிட்ட பாலங்களுடன் மேலும் 7 சிறு மேம்பாலங்கள் கட்டுவதற்கு உயர்மட்ட வழிநடத்தும் குழு கீழ்க்கண்ட இடங்களில் கட்ட அனுமதியளித்து இதற்காக சென்னை மாநகராட்சி விரிவான திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்து வருகிறது:

(1) கோமதி நாராயணன் சாலை-திருமலை சாலை

(2) மேடவாக்கம் சாலை-கொன்னூர் நெடுஞ்சாலை

(3) தெற்கு உஸ்மான் சாலை-துரைசாமி சாலை சந்திப்பு

(4) சேமியர்ஸ் சாலை-டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு

(5) வடக்கு உஸ்மான் சாலை-மகாலிங்கபுரம் சாலை-கோடம்பாக்கம் குறுக்கு சாலை

(6) தங்கசாலை குறுக்கு வெட்டு பகுதி-பழைய சிறைச்சாலை-பிரகாசம் சாலை

(7) பால்பர்ஸ் சாலை-புரசைவாக்கம் நெடுஞ்சாலை (கிள்ளியூர் குறுக்கு வெட்டுப் பகுதி)

**(இ) பெரிய குறுக்கு வெட்டுப் பகுதிகளில் போக்குவரத்து சமிக்ஞைகள் அமைத்தல்**

கீழ்க்கண்ட பன்னிரெண்டு இடங்களில் சமிக்ஞைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

(1) இராயப்பேட்டை நெடுஞ்சாலை-இலாயிட்ஸ் சாலை சந்திப்பு

(2) வாலாஜா சாலை-திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சந்திப்பு

(3) தென் மேற்கு போக் சாலை-வி.என். சாலை சந்திப்பு

(4) டாக்டர் நாயர் சாலை-தியாகராய சாலை சந்திப்பு மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பு



2000 ஏப்ரல் 28]

(5) சின்னமலை

(6) சர்தார் பட்டேல் சாலை-வேளச்சேரி சாலை சந்திப்பு

(7) வள்ளலார் நகர் சந்திப்பு

(8) பர்னபி சாலை-ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

(9) பிளவர்ஸ் சாலை-ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

(10) கெங்குரெட்டி சுரங்கப்பாதை-ஈ.வெ.ரா. சாலை சந்திப்பு

(11) சி.ஐ.டி. முதல் பிரதான சாலை-அண்ணாசாலை சந்திப்பு

(12) பிராட்வே-மாணிக்கர் சத்திரம் சாலை சந்திப்பு (ஸ்டான்லி மருத்துவமனை)

**12. பரங்கிமலை—பூவிருந்தவல்லி சாலை மேம்பாட்டுப் பணி**

10.8 கி.மீ. நீளத்தில் பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலையை ரூ.13.33 கோடி திருத்திய மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், வழிகாட்டும் நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டதால், தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் ஆகியவைகளிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதியினைப் பெற்று நெடுஞ்சாலைத் துறைக்கு செயலாக்கத்திற்காக அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான அசலும் வட்டியும் ஒவ்வோர் ஆண்டும் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு அசலும் வட்டியும் செலுத்த 2000-2001 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.2.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**13. சென்னைப் பெருநகர் பகுதியின் நீர்வழிகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் மேம்பாட்டு திட்டம்**

சென்னைப் பெருநகரின் நீர் வழிகள் மற்றும் சென்னை நகரத்தின் மழைநீர் வடிகால்களை மேம்படுத்த தமிழ்நாடு அரசு ரூ.300 கோடிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதில் ரூ.255 கோடி விரிவான வடிகால் திட்டமான நீர்வழிகளின் மேம்பாடு மற்றும் நீர்வழிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் குடிசைகளை அகற்றி,

[2000 ஏப்ரல் 28

அக்குடிசைகளில் வாழ்வோருக்கு மறு ஒதுக்கீடு, சீரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.45 கோடி குறுகிய வடிகால் பணியான மழைநீர் வடிகால் மேம்பாட்டு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. விரிவான பணிகள் பின்வருமாறு:

(1) சென்னை நகரின் நீர்வழிகள் மேம்பாடு (கூவம் ஆறு, விருகம்பாக்கம்-அரும்பாக்கம் வடிகால் மற்றும் ஓட்டேரி நல்லா)

(2) சென்னை நகரின் நீர்வழிகள் மேம்பாடு (பக்கிங்காம் கால்வாய்)

(3) சென்னை நகரின் நீர்வழிகள் மேம்பாடு (கொசத்தலையார் ஆறு, அடையார் ஆறு)

(4) சென்னை பெருநகர் பகுதியின் இதர நீர்வழிகளின் மேம்பாடு

13.1 நீர்வழிகளை மேம்படுத்தும் பணியாக தேவையான இடங்களில் தூர்வாருதல், கால்வாய் அமைப்பைச் சீர் செய்தல், வெள்ளத் தடுப்பு சுவர்கள்/கரைகள் அமைத்தல், பழுதடைந்த கரைப்பகுதிகளைச் சீரமைத்தல், கரைகளில் மரம் வளர்த்தல் போன்ற பணிகள் பொதுப் பணித் துறை மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகிய நிறுவனங்களால் செயல்படுத்தப்படும். சென்னை மாநகராட்சி, நகரின் மழைநீர் வடிகால்களை மேம்படுத்துவதும் அவற்றைச் சீரமைப்பதும், புதிதாக வடிகால்களை அமைப்பதும் மற்றும் இதர குறுகிய பணிகளைச் செயல்படுத்தும். நீர்வழிகளின் ஓரம் வாழ்ந்துவரும் குடிசைவாழ் மக்களின் மறு குடிபெயர்ப்பு மற்றும் மறு வாழ்விற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ.37.50 கோடி செலவில் பணிகளைச் செயல்படுத்தும். வடக்கு, மத்திய மற்றும் தெற்கு பக்கிங்காம் கால்வாய், கொசத்தலையார் ஆறு, கூவம் ஆறு, அடையார் ஆறு, வேளச்சேரி கால்வாய், விருகம்பாக்கம்-அரும்பாக்கம் வடிகால் போன்ற நீர்வழிகளுக்கான திட்ட அறிக்கை இத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்ப கமிட்டியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின் திட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்திற்குத் தேவையான ரூ.209.56 கோடியை முதல் மூன்று தொகுப்பிற்குக் கடனாக வழங்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடம் அனுப்பப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்திற்காக ரூ.143.78 கோடிக்கு ஒப்புதலளித்து முதல் தவணையாக ரூ.52.38 கோடியை வழங்கியுள்ளது. மூன்று தொகுப்புக்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.



2000 ஏப்ரல் 28]

கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டிக்காக ரூ.8.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13.2 ரூ.1700 கோடியில் மேலும் ஒரு விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**14. மறைமலை நகர் துணை நகரத்தின் வளர்ச்சித் திட்டம்**

மறைமலை நகர் துணை நகரத்தின் வளர்ச்சித் திட்டமானது 2100 ஏக்கர் நிலப்பரப்பில் ஓர் இலட்சம் மக்கள் தொகை கொண்ட பகுதியாக 20 ஆண்டு கால அளவிற்குள் குடியமர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 1400 ஏக்கர் நிலப்பரப்பை இத்திட்டத்திற்காக மேம்படுத்தியுள்ளது. குடியிருப்பு மற்றும் தொழிற்சாலை மனைகளை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2217 குடியிருப்பு மனைகளையும், 40 வணிகக் கடைகளையும், 75 வணிக மனைகளையும், 363 தொழிற்சாலை மனைகளையும் மேம்பாடு செய்ததோடு 2032 வீடுகளையும் அனைத்து வருவாய் பிரிவினருக்காகவும் கட்டி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.47.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.

14.1 மறைமலை நகரில் சுமார் 74 ஏக்கர் நிலப்பரப்பில் பள்ளிகள், கல்லூரி, வணிக வளாகம், அலுவலகங்கள், நட்சத்திர உணவகங்கள் இவைகளை உள்ளடக்கிய நகர மையம் ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. வணிக மற்றும் குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன.

14.2 இப்புதுநகரின் முக்கியத்துவத்தை உணர்ந்து மகேந்திரா போர்டு இந்தியா நிறுவனத்தின் போர்டு கார் உற்பத்தி தொழிற்சாலைக்கு இவ்வரசு மறைமலை நகரை அமைவிடமாக அடையாளம் காட்டியுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் 260 ஏக்கர் நிலத்தை பலகோடி ரூபாய் மதிப்பில் கார் உற்பத்தி செய்யும் போர்டு கார் உற்பத்தி திட்டத்திற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு தொலைதொடர்பு கண்ணாடி இழை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு தமிழ்நாடு அரசு அறிவித்தபடி அமைவிடம் அமைய சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் மறைமலை நகரில் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

[2000 ஏப்ரல் 28

14.3 நின்னக்கரை மற்றும் காட்டாங்குளத்தூரில் 50 ஏக்கர் நிலப்பரப்பை ரூ.225 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தி வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் பகுதிகளை அபிவிருத்தி செய்ய தீர்மானித்து செங்குன்றம் மற்றும் திருக்கச்சூர் ஆகிய கிராமங்களில் 150 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்த செயற்குறிப்பு உருவாக்கப்பட்டு அதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

## 15. முக்கியமான சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் பெட்டக ஊர்தி முனையம் பற்றிய ஆய்வறிக்கை

சென்னைப் பெருநகரில் உள்ள பெரிய/முக்கிய சாலைகளை அகலப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை புதிய உத்திகளைக் கையாண்டு ஆராய்ந்து ரூ.10 இலட்சம் செலவில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இத்திட்டத்திற்கு அரசால் 1997-98 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்காக 3 வழித்தடங்கள் முன்னோடித் திட்டத்திற்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. ப்ளவர்ஸ் சாலை நீங்கலாக மீதமுள்ள இரண்டு வழித்தடங்கள் நகராட்சி எல்லைக்குள்ளும் மற்றவை சென்னைப் பெருநகர எல்லைக்குள்ளும் அடையாளம் காணப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. பெட்டக ஊர்தி இயக்கத்திற்காக இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை அவர்களைத் தலைவராகக் கொண்ட போக்குவரத்து செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 16. திரளான துரித போக்குவரத்துத் திட்டம்-2-இரயில் நிலைய பகுதி அபிவிருத்தி

திரளான துரித போக்குவரத்துத் திட்ட முதல் கட்டம் சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரையிலான 8.55 கி.மீ. நீளத்திற்கு ரூ.252 கோடி செலவில் இரயில்வே துறையினரால் முடிக்கப்பட்டு 1997 முதல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. திருமயிலை முதல் வேளச்சேரி வரை இடையேயுள்ள இரயில் நிலையப் பகுதியில் உள்ள மேல் பகுதியை உபயோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான விரிவான ஆய்வு ஒன்று செய்து முடிக்கப்பட்டுள்ளது. திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்ட இரண்டாம் கட்டத்திலுள்ள அனைத்து இரயில் நிலையங்களின் மேல் பகுதியை வணிக உபயோகத்திற்குப் பயன்படுத்துதல் மற்றும் இதன் மூலம் திரளான துரித இரயில் போக்குவரத்துப் பாதையை முழுமையாகப் பயன்படுத்தத் தேவையான



2000 ஏப்ரல் 28]

போக்குவரத்தை அதிகரிக்கும் பணியை மேற்கொள்ள மாநில அரசிற்கு மத்திய அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. இந்தப் பணிக்காக 4 கலந்தறிதற்குரிய நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு 9 இரயில் நிலையங்களுக்கு விரிவான வடிவமைப்புகள் தயாரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

16.1 முதற் கட்டப் பணியான வடிவமைப்புகள் தயாரிக்கும் பணி முடிவடைந்துள்ளது. நான்கு கலந்தறிதற்குரிய நிறுவனங்கள் இரண்டாம் கட்டப் பணியான விரிவான வடிவமைப்புகள் தயாரிக்கும் பணியைச் செய்து வருகிறார்கள்.

## 17. திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பாதை அருகில் அபிவிருத்தி ஆய்வு

திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பாதையை முழுமையாகப் பயன்படுத்தி தேவையான அளவு போக்குவரத்தை அதிகப்படுத்த வேண்டும். இதற்காக இப்பாதையின் இருமருங்கிலும் ஒரு கி.மீ. தூரத்திற்கு குடியிருப்பு, பணியிடங்கள், வியாபார மையங்கள், பொழுது போக்கு மையங்கள் போன்றவற்றை மேம்படுத்த ஒரு விரிவான ஆய்வு செய்ய 1999-2000 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் அரசு முடிவு செய்தது. இந்த ஆய்விற்காக அரசு ரூ.10 இலட்சம் அனுமதி வழங்கியது.

17.1 இதற்காக ஒரு கலந்தறிதற்குரிய நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பாதை அருகில் அபிவிருத்தி ஆய்வு செய்ய பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## 18. பூகோள தகவல் அமைப்பு

நகர்ப்புற வளர்ச்சித் துறையில் புவியியல் மற்றும் பூகோள அமைப்பிலான நவீன முறையில் முடிவு எடுப்பதற்கு ஏதுவாக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், சென்னை தொலைபேசி ஆகிய அரசுத் துறைகளின் உதவியுடன், சென்னை மயிலை பகுதிக்கு ஓர் ஆய்வு அண்ணா பல்கலைகழகம் நடத்தியது. நில உபயோகம், மின்சார மற்றும் தொலைபேசிப் புதை கம்பி வலை முறை, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அமைப்பு, பொது உபயோகம், இட அமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு இருக்கிறது. 1998-99-ல் புதிய திட்டமாக பகுதி-2-ன்கீழ் இந்த ஆய்விற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மானிய

ஒதுக்கீட்டு மதிப்பீட்டில் ரூ.16.50 இலட்சத்தை மானிய உதவியாக அளித்துள்ளது. மேலும், இதற்கு இணையான தொகையை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வழிகாட்டி நிறுவனம் என்ற முறையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் கணினி வாங்குவதற்கான நடவடிக்கை மற்றும் பூகோளத் தகவல் அமைப்பு பிரிவு அமைப்பதற்கான நடவடிக்கையையும் எடுத்து வருகிறது.

## 19. சென்னைப் பெருநகர் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டம்

நகர்/புறநகர் வளர்ச்சிகள் முதல் முழுமை திட்டத்தின் மூலம் வரை முறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்கீழ், 50 பிரிவு/பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தற்பொழுது, மேலும் மீதமுள்ள பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக செப்டம்பர் 1996-ல் திட்ட ஒதுக்கீட்டில் ரூ.10 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிகளில் பரிமான வளர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக இந்நகரை ஒட்டியுள்ள பகுதிகளுக்கும் நகர்ப் பஞ்சாயத்து பகுதிகளுக்கும் சேர்த்து 26 விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக நவம்பர் 1997-ல் நகராட்சிப் பகுதிகளுக்கும் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் சேர்த்து, 31 விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. இதுவரை 20 விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு வரைபடம்-1 தயாரித்து, தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இரண்டு விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு, வரைபடம்-2 தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த இரண்டு விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மீதமுள்ள 18 விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கான நில அளவை ஆய்வு முடிக்கப்பட்டு, வரைபடம்-2 தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்[illegible]கிறது. மேலும் பொது மக்களிடமிருந்து இவ்வளர்[illegible]திட்டங்களுக்கு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளைப் பெ[illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

223313

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.